

nick vujicic

கைகள் இல்லை
கால்கள் இல்லை
கவலைகள் இல்லை

# நிக் வாயிச்சஸ்


சேவியர்

# நிக் வாயிச்சஸ்

## கைகள் இல்லை, கால்கள் இல்லை, கவலைகள் இல்லை

**சேவியர்**

# 1




"என் குழந்தை எங்கே?"

ஆஸ்திரேலியாவிலுள்ள பிரிஸ்போனில் அமைந்துள்ள ஒரு மருத்துவமனையின் பிரசவ வார்டில் பிரசவித்த களைப்பில் இருந்த தஷ்கா வாயிச்சஸ் (Dushka Vujicic) அருகில் இருந்த நர்ஸிடம் கேட்டாள். பிரசவம் இப்போது தான் முடிந்திருந்தது!

"என்னோட குழந்தை எங்கே? அழுதானா?"

நர்ஸின் மவுனம் அந்தத் தாய்க்கு உள்ளுக்குள் கிலியை ஏற்படுத்தியது. பிறந்த குழந்தையைப் பற்றிக் கேட்டால் அமைதியாய் இருந்தால் எந்தத் தாய்க்குத் தான் கிலி ஏற்படாது?

இருபத்து ஐந்தே வயதான தாய் அவள். மருத்துவமனையில் ஒன்றில் இதே போன்ற ஒரு பிரசவ அறையில் பணி செய்து கொண்டிருந்த நர்ஸ் பெண் தான் அவர். அதனால் பிரசவத்தைப் பற்றியும் அதன் சிக்கல்கள் பற்றியும் ரொம்ப நன்றாகத் தெரியும்.

தாய்மை அடைந்த கணத்திலிருந்து என்னென்ன சாப்பிடவேண்டும் என்பது அவருக்குத் தெரியும். அதில் கொஞ்சமும் பிசகாமல் தான் அவர் சாப்பிட்டு வந்தார்.

மருத்துவ பரிசோதனைகளைப் பற்றி அக்கு வேறு ஆணி வேறாகத் தெரிந்து வைத்திருந்ததால் எல்லா பரிசோதனைகளையும் சரியாகச் செய்தார். கடைசியாக எடுத்த இரண்டு அல்ட்ராசோனிக் ஸ்கேன் ரிப்போர்ட் கூட "பையன் பொறக்கப் போறான்" என்று மகிழ்ச்சியோடு சொன்னது. இப்போது நர்ஸின் மவுனம் அடி வயிற்றைக் கலக்குகிறது!

"பிளீஸ் சொல்லுங்க.. என்னோட குழந்தைக்கு ஏதாச்சும் பிரச்சினையா?" பதட்டம் விழுங்க கேட்டாள் தாய்.

நர்ஸோ பதில் சொல்லாமல் அந்த அறையின் இன்னொரு மூலைக்குச் சென்றார். அங்கே பல மருத்துவர்கள் ஒன்று கூடி குழந்தையை தீவிரமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தாய்க்கு பதட்டம் அதிகமானது!

திடீரென ஒரு அழுகுரல்!

குழந்தையின் அழுகுரல்!

தாய்க்குப் போன உயிர் திரும்ப வந்தது. முகத்தில் சட்டென ஒரு மிகப்பெரிய நிம்மதி வந்து அமர்ந்தது. அப்பாடா பையன் உயிரோட தான் இருக்கான்.

குழந்தையின் அழுகுரல் கேட்ட தந்தை போரிஸ் வாயிசஸ் (Borris Vujicic) ஆவலோடு குழந்தையை ஓடிச் சென்று பார்த்தார்.

சட்டென தலை சுற்ற அவருக்கு வாந்தி வருவதுபோல இருந்தது.

மருத்துவமனை ஊழியர்கள் அவரை அவசர அவசரமாய் அறைக்கு வெளியே கூட்டிக் கொண்டு போனார்கள்.

தாய்க்கு வந்த உயிர் மீண்டும் போனது போல இருந்தது. என்ன தான் நடக்கிறது. எல்லோரும் மவுனமாய் இருக்கிறார்கள். குழந்தை அழுதாகி விட்டது. ஆனால் கணவனோ குழந்தையைப் பார்த்து குமட்டுகிறாரே!

“குழந்தையைக் காட்டுங்க. பிளீஸ்ஸ்ஸ்... என் குழந்தைக்கு என்னாச்சு...” அவளுடைய குரலில் இப்போது அழுகை தொற்றிக் கொண்டது.

டாக்டர் திரும்பினார்.

“பிளீஸ் சொல்லுங்க, நான் ஒரு நர்ஸ். எனக்கு புரியும். சொல்லுங்க.. பிளீஸ்” அவளது அழுகை கெஞ்சலோடு கலந்து வந்தது.

டாக்டர் திரும்பினார். சற்று நேர மவுனத்துக்குப் பிறகு சொன்னார்.

“ஃபோகாமீலியா (Phocamelia)”



தாய் அதிர்ந்தாள். ஃபோகாமீலியா என்றால் குறைபாடுள்ள குழந்தை என்று அர்த்தம். கையோ காலோ இல்லாமல் பிறக்கும் குழந்தையை மருத்துவம் இந்தப் பெயரில் தான் அழைக்கிறது.

அவளால் நம்ப முடியவில்லை. இது எப்படி சாத்தியம்? எங்கே பிசகிற்று? எந்த மருத்துவத் தவறும் செய்யவில்லையே? அவளுடைய இதயம் உடைந்தது.

வெளியில் தந்தை நம்ப முடியாதவராக புலம்பிக் கொண்டிருந்தார். அருகில் வந்த நர்ஸிடம் கண்ணீருடன் சொன்னார்.

“என்.. பையன்... என் பையனுக்கு ரெண்டு கையுமே இல்லை”

நர்ஸ் மிடறு விழுங்கினார். திக்கித் திணறிப் பேசினாள்.

“சார். ஆக்சுவலி.. உங்க பையனுக்கு இரண்டு கால்களும் கூட இல்லை சார்” சொல்லி விட்டு அவளாலேயே கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

தீப்பிடித்த கூரையில் இடியும் விழுந்தது போல, அப்படியே உறைந்து போய், நிலைகுலைந்து தரையில் உட்கார்ந்தார் தந்தை.

தாய் உள்ளே டாக்டரிடம் கேட்டார்.

“பையனுக்கு.. பையனுக்கு என்ன குறை? விரல்களா.. கையா? காலா?”

மருத்துவர் உதடு கடித்தார். “ஐ ஆம் சாரி.. உங்க பையனுக்கு, கைகளும் இல்லை, கால்களும் இல்லை...”

அவளுக்குத் தலை சுற்றியது.

கைகளும் இல்லாமல், கால்களும் இல்லாமல் ஒரு குழந்தையா? எனக்கா? மருத்துவம் தெரிந்த எனக்கா? எல்லாவற்றையும் சரியாய் செய்த எனக்கா? கடந்த பத்து மாதங்களாக நாம் சேமித்து வைத்திருந்த எதிர்பார்ப்பெல்லாம், கையும் காலும் இல்லாத ஒரு குழந்தையைப் பார்க்கவா? அவளுடைய உயிரே போய்விடும் போல் இருந்தது.

குழந்தையை ஒரு துணியில் சுற்றி அவளுக்கு அருகே கொண்டு வந்து கிடத்தினார்கள்.

“நோ... நோ...கொண்டு போங்க.. என் பக்கத்துல கொண்டு வராதீங்க” அவளுடைய அழுகைக் குரல் ஆவேசமானது.

அவளால் அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு வர முடியவில்லை. அவள் மயக்கத்துக்குப் போனாள்.

நேரம் போய்க் கொண்டே இருந்தது.

தந்தை கொஞ்சம் கொஞ்சமாக வாழ்வின் எதார்த்தத்தைப் புரிந்து கொண்டவராக இயல்பு நிலைக்கு வர ஆரம்பித்தார். குழந்தையைப் போய் பார்த்தார். கைகளில் ஏந்தினார். புன்னகைத்தார்.

படுக்கையில் இன்னும் அதிர்ச்சியிலிருந்து விலகாமல், கலங்கிய கண்களோடு படுத்திருந்த தாயிடம் வந்தார்.

அவளுடைய கரங்களைப் பற்றினார்.

“நான் உன்கிட்டே ஒரு விஷயம் சொல்லணும்”

“ம்...”

“நம்ம பையன் ரொம்ப அழகா இருக்கான்”

# 2




இப்படி ஒரு குழந்தை பிறந்தால் யார் தான் மகிழக் கூடும். இந்த வீட்டிலும் இப்படியே நடந்தது. குழந்தை பிறந்ததை ஒரு துக்க தினமாகவே கொண்டாடினார்கள். தஷ்காவும், போரிஸும் இந்த தினத்தைக் கொண்டாடுவதா இல்லை துக்கம் அனுசரிப்பதா என்றே குழம்பிப் போனார்கள்.

ஒரு குழந்தை பிறந்தால் நண்பர்கள் உறவினர்கள் எல்லோரும் வாழ்த்து அட்டைகள் கொடுப்பதும், பூக்கள் பரிசளிப்பதும் என மகிழ்ச்சியைப் பரிமாறுவார்கள். ஆனால் இங்கே எதுவும் நடக்கவில்லை. சுற்றிலும் மவுனம்.

தேவாலயத்திலும் மகிழ்ச்சி மிஸ்ஸிங். கடவுள் இப்படி ஒரு குழந்தையை ஏன் இவர்களுக்குக் கொடுத்தார் என்பது சிலருடைய கேள்வி. ஐயோ பாவம் என்பது மற்றவர்களுடைய பதில். யாருமே குழந்தையை ஒரு மகிழ்வின் சின்னமாகப் பார்க்கவேயில்லை.

மருத்துவமனையில் ஓரிரு நாட்கள் இருந்தபின் கொஞ்சம் இயல்பு நிலைக்கு வந்தபோது தான் அந்த மாற்றம் தாய்க்கு உறைத்தது.

“ஏங்க, ஒரு பூங்கொத்து கூட யாருமே நமக்கு கொடுக்கல. ஏன்? நாம அப்படி என்ன தப்பு பண்ணினோம்? ஒரு பூங்கொத்து வாங்கக் கூட அருகதை இல்லாதவங்க ஆயிடோமா?”

அந்தக் கேள்வி போரிஸின் மனதில் தைத்தது. உடனே ஓடிச் சென்று ஒரு அழகான பூங்கொத்தை வாங்கினார்.

“நீ எல்லா வாழ்த்துக்கும் உரியவள். ஐ லவ் யூ” என மகிழ்வுடன் அந்த பூங்கொத்தை அவளிடம் நீட்டினார்.

நாட்கள் கடந்தன. குழந்தைக்கு நிக்கோலஸ் வாயிச்சஸ் (நிக்) என பெயரிட்டார்கள். ஒவ்வொரு செயலையும், ஒவ்வொரு சின்னச் சின்ன விஷயத்தையும் உன்னிப்பாகச் செய்தார்கள். நிக் வளர்ந்தான். பெற்றோரின் கவலைகளும் கூடவே வளர்ந்தன.

முதலாவதாக, இந்தக் குழந்தை தனது அன்றாடப் பணிகளை எப்படிச் செய்வான்? ஒரு சட்டையைப் போடக் கூட இன்னொருவரின் உதவி தேவைப்படுகிறது.

இவன் எப்படிப் படிப்பான்? பள்ளிக்கூடத்துல இவனை சேக்கலாமா? சேர்க்கலாம்னு நாம நெனச்சாலும் பள்ளிக்கூடம் அனுமதிக்குமா? இவன்

கூட பசங்க நட்பா இருப்பாங்களா? இவன் சாதாரண மனுஷனா வளருவானா?

என கிலோ மீட்டர் கணக்கு நீளமான கேள்விகள் அவர்களுக்குள் எழுந்தன. என்ன செய்ய? பதில்கள் தான் கைவசம் இல்லை.

ஒரு கட்டத்தில் அவர்களிடம் எழுந்த சிந்தனைகள் மிகவும் துயரத்தின் சிந்தனைகளாக இருந்தன. நிக்கைக் கொண்டு போய் விடுதியிலோ, காப்பகத்திலோ சேர்த்துப் பாதுகாக்கலாமா என்று கூட யோசித்தார்கள்.

அவனுடைய தாத்தா பாட்டி அவனை வீட்டில் வைத்துப் பராமரிக்கவும் முன்வந்தார்கள். ஆனால் நிக்கின் தந்தை இறுதியில் எல்லா சிந்தனைகளையும் ஒதுக்கி வைத்தார். அவர் ஒரு சர்ச்சில் போதகராகவும் இருந்தார். எனவே கடவுள் கொடுத்த குழந்தையை அப்படியே ஏற்றுக் கொண்டு பராமரிப்பதே தான் செய்ய வேண்டியது எனும் சிந்தனை அவருக்குள் வலுப்பெற்றது.

**கடவுளின் ஒவ்வொரு படைப்புக்கும் ஒவ்வொரு காரணம் இருக்கும். அது மனிதனுக்கு எளிதில் புரிவதில்லை. அதே போல நிக்கின் பிறப்பிலும் ஏதோ ஒரு காரணம் இருக்கக் கூடும்** என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அன்பே கடவுள். அந்த அன்பின் கடவுள் தங்களைக் கைவிட மாட்டார் என அவர் நம்பினார். துவக்கத்துக்கு முன்பும், முடிவுக்குப் பின்பும் இருக்கப் போகும் கடவுள் ஒரு விஷயத்தைத் தருகிறார் எனில் அதை அப்படியே ஏற்றுக் கொள்வதே நல்லது எனும் சிந்தனை அவருக்குள் வலுப்பெற்றது.

அதனாலேயே நிக்கை ஒரு மாற்றுத் திறனாளி எனும் சிந்தனை இல்லாமலேயே அவனை வளர்க்க முனைந்தார்கள். அவனுக்காய் தனி

அறை. மற்ற பிள்ளைகளைப் போலவே நடத்துவது என தன்னம்பிக்கையையும் அதிகரிக்க முயன்றார்கள்.

நிக் தரையில் புரண்டு விளையாடிக் கொண்டிருந்த பருவம் கடந்தது. அவன் எழும்பு உட்காருவானா? என்பதே மிகப்பெரிய கேள்விக்குறியாய் இருந்தது. கைகள் இல்லை. கால்கள் இல்லை. கால்கள் இருக்க வேண்டிய இடத்தின் இரு சின்ன வால் போன்ற சமாச்சாரம் இரண்டு விரல்களுடன் இருந்தது. அது மட்டுமே ஒரே சப்போர்ட்!

ஆனால் நிக் எழும்பி உட்கார புது ஐடியா கண்டுபிடித்தான். நெற்றியை தரையில் ஊன்றி புழுவைப் போல நெளிந்து உட்கார முயல்வது. நெற்றியை முதலில் தரையில் கொடுத்து கொஞ்சம் எழும்பி, பிறகு நெற்றியைச் சுவரில் கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாய் எழும்பி உட்காருவது அவனுடைய விளையாட்டு போலவே ஆகிப் போனது!

விழுந்தால் எழலாம்! எழ வேண்டும் எனும் உறுதி இருந்தால் வெற்றி தர நெற்றியே போதும் என்பது போல் இருந்தது அவருடைய செயல்கள்!

நிக் கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்தான்.

அடுத்த கேள்வி வந்தது!

“இவனைப் பள்ளிக்கூடம் அனுப்பணுமே”!

பள்ளிக்கூடம் செல்லும் வயது வந்தபோது அவனை பள்ளிக்கூடம் அனுப்ப முடிவு செய்தனர். கொஞ்சம் கொஞ்சம் அத்தியாவசியமான வேலைகளை சொந்தமாய்ச் செய்யப் பழகியிருந்தான் நிக்.

பள்ளிக்கூடக் காலம் துவங்கியது!

நிக் முதல் நாள் வகுப்புக்குச் சென்றான். அது அவனுக்கு வசீகரமாய் இருக்கவில்லை. வீல்செயரில் கையும் காலும் இல்லாமல் நுழைந்த ஒரு உருவத்துடன் நட்பு பாராட்ட யாரும் தயாராய் இல்லை. நம்மை விட வித்தியாசமாய் இருப்பவர்களிடம் நட்பு பாராட்டுவதில் ஏனோ ஒரு தயக்கம் வந்து விடுகிறது. அப்படியே நட்பு பாராட்டினாலும் அது பரிதாபமாகவோ, தியாகமாகவோ உள்ளுக்குள் நிறம் கொள்கிறது.



நிக்கின் முதல் நாள் பள்ளிக்கூட அனுபவமும் அப்படித் தான் இருந்தது.

“அம்மா.. இனிமே நான் ஸ்கூலுக்கே போகல. கையும் காலும் இல்லாம போகவே புடிக்கல” என்பது தான் நிக் முதல் நாள் பள்ளிக்கூடம் முடிந்து வீட்டில் வந்து கண்ணைக் கசக்கிக் கொண்டே சொன்ன வாசகங்கள்.

அவனுடைய கண்ணீருடன் சேர்ந்து அன்னையின் கண்ணீரும் கலந்தது. அதைத் தவிர அவர்களால் வேறு என்ன செய்து விட முடியும்?

“ஏம்மா நான் இப்படி? கையும் இல்லாம காலும் இல்லாம?” அடிக்கடி நிக்கின் வாயிலிருந்து இந்தக் கேள்வி தவறாமல் வெளி வரும்.

“இதுக்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கும் மகனே. கடவுள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு காரணத்துக்காகப் படைக்கிறார். அந்த காரணம் என்னன்னு சரியான நேரம் வரும்போது தான் நமக்குப் புரியும்” என்பார்கள் பெற்றோர்.

ஆனால் சின்னப் பையன் நிக்கிற்கு அந்த தத்துவார்த்த விளக்கங்கள் எல்லாம் புரியவில்லை. அடுத்தவர்களின் ஏளனமும், வித்தியாசமான பார்வையும் அவனை அலைக்கழித்தன. அவர்களைப் போல் நான் இல்லையே, அவர்கள் செய்யும் வேலைகளையெல்லாம் தன்னால் செய்ய முடியவில்லையே எனும் துயரம் அவனை ஆட்டிப் படைத்தது!

தற்கொலை செய்து கொள்ளலாமா?

இந்த சிந்தனை அந்த சின்ன வயதில் அவனுக்குள் எழுந்தது. எப்படி தற்கொலை செய்து கொள்வது? தற்கொலை செய்ய வேண்டுமென்றாலும் கூட ஒருவருடைய உதவி தேவை எனும் நிலமை.

ஒரு ஐடியா!

பாத்டப்பில் தண்ணீரை நிறைத்து, மூழ்கினால் இறந்து போகலாமே!

அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த நினைத்தான் நிக்.

பாத்டப்பில் தண்ணீர் நிரப்பப்பட்டது. தலையை குப்புற வைத்துவிட்டு தண்ணீரில் விழுந்தான். அந்த கண நேரத்தில் அவனுக்குள் ஏராளம் சிந்தனைகள்.

“நான் இறந்து போனால் என்னை அன்பு செய்யும் பெற்றோர் வருத்தப்படுவார்களே. குறையுடன் ஒரு குழந்தையைப் பெற்ற குற்ற உணர்வு அவர்களை வாட்டி எடுக்குமே. காலம் முழுதும் அவர்களைத் துயரம் பீடிக்குமே” என பல சிந்தனைகள். நிக்கிற்கு தண்ணீரில் மிதக்கத் தெரியும். எனவே பாத்டப் அவனுக்கு ஆபத்தில்லை என்பதே பெற்றோரின் எண்ணம். அந்த அவர்களுடைய நம்பிக்கையையும் பொய்யாக்க வேண்டுமா என அவர் யோசித்தார்.

சரி வேண்டாம்! தற்கொலை செய்வது நல்ல ஐடியா அல்ல என முடிவுக்கு வந்து அதை விட்டு விட்டார்.

நிக்கின் பெற்றோருக்கு இதெல்லாம் தெரியாது. அவர்கள் அவனிடத்தில் ரொம்ப அன்பு வைத்திருந்தார்கள். அதீத கவனம் எடுத்து அவனுடைய பணிகளையெல்லாம் கவனித்தார்கள். அவர்களுடைய அன்பு நிக்கிற்கு ரொம்பவே உறுதுணையாய் இருந்தது.

“நான் பொறந்தப்போ எப்படிம்மா இருந்தேன். என்னைப் பார்த்து நீங்க என்ன நினைச்சீங்க?” என அடிக்கடி நிக் பெற்றோரிடம் கேட்பான்.

“நான் உன்னைத் தூக்கவே முடியாதுன்னு சொல்லிட்டேன்” என ஒருநாள் உண்மையைச் சொன்னார் தாய். அது நிக்கின் மனதில் மிகப்பெரிய வலியாக வந்து விழுந்தது.

அம்மாவே என்னை நிராகரிக்கிறாங்கன்னா, உலக்கத்துல வேற யார் தான் என்னை அரவணைக்க முடியும்? யார் தான் எனக்கு சப்போர்ட் பண்ண முடியும் என மனதுக்குள் கலங்கினார். இருந்தாலும் அந்த துவக்க நாட்களுக்குப் பிறகு பெற்றோர் காட்டும் அபரிமிதமான அன்பு அவரை நெகிழ வைத்தது.

நிக்கின் பெற்றோர் இறைபக்தியில் தளைத்து வளர்ந்தவர்கள். எனவே நிக்கின் தன்னம்பிக்கையை அவர்கள் இறை சித்தம் எனும் நம்பிக்கையில் வளர்த்தார்கள். அதனால் தனது இந்தப் பிறவிக்கு ஏதோ ஒரு அர்த்தம் உண்டு என்பதில் மட்டும் அவருக்கும் உறுதியான நம்பிக்கை இருந்தது.

ஆனால் அந்த நம்பிக்கையும் பற்றுறுதியும் வரும் வரை நிக்கின் வாழ்க்கை ரொம்பவே மன அழுத்தம் நிறைந்ததாகவே இருந்தது. தலைமுடி

வளர்வது போல கைகால்கள் வளருமா என சின்ன வயதில் சிந்தனைகள் எழும். கண்ணாடியின் முன்னால் நின்று தினமும் காலையில் பார்க்கும் போது உடல் அப்படியே தான் இருக்கும்.

நாட்கள் செல்லச் செல்ல பள்ளிக்கூடத்தில் அவனுக்கு நண்பர்கள் கிடைத்தார்கள். நண்பர்களுடன் பேசும்போதும் பள்ளிக்கூடத்தில் இருக்கும் போதும் உற்சாகமாகவே இருப்பார் நிக். ஆசிரியர்களுக்கு இவரைப் பார்க்கும் போது உற்சாகம் பிறக்கும். துவக்கத்தில் பரிதாபப் பார்வை பார்த்தவர்கள் பிறகு சாதாரணமாய்ப் பார்க்க ஆரம்பித்தார்கள். பிறகு உற்சாகம் ஊட்டும் சிறுவனாகப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

# 3




நிக்கின் பெற்றோர் பிறந்தது யூகோஸ்லோவாக்கியாவில். தற்போது அந்த இடம் செர்பியா என்று அழைக்கப்படுகிறது. அவர்களுடைய இளம் வயதில் அங்கிருந்து ஆஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்தார்கள். அப்போஸ்தலிக்கக் கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தவர்கள் அவர்கள். கிறிஸ்தவர்கள் மறைவாக வாழ்க்கை நடத்த வேண்டிய கட்டாயம் அங்கு இருந்தது. அது தான் அவர்கள் ஆஸ்திரேலியாவில் தஞ்சம் புக காரணம்!

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரிலுள்ள ஒரு தேவாலயத்தில் ஒரு நாள் நிக்கின் தாயும் தந்தையும் சந்தித்துக் கொண்டார்கள். விக்டோரியாவிலுள்ள ராயல் குழந்தைகள் மருத்துவமனையில் இரண்டாம் ஆண்டு நர்சிங் படிப்பு படித்துக் கொண்டிருந்தார் தக்ஷா. அப்போது நிக்கின் தந்தை போரிஸ் ஒரு நிறுவனத்தில் காஸ்ட் அக்கவுன்டன்ட் ஆக பணியாற்றிக் கொண்டிருந்தார்.

சந்தித்துக் கொண்ட அவர்களுக்குள் விருப்பம் பற்றிக் கொள்ள, திருமணம் செய்து கொண்டார்கள். நிக் பிறக்கும் வரை இனிமையாய்ப் போய்க்கொண்டிருந்த வாழ்க்கையில் அதன் பின் தான் அவர்களுக்கான சவால் ஆரம்பமானது. அதுவரை ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேற வேண்டுமென அவர்கள் நினைத்ததே இல்லை. இப்போது அவர்கள் நிக்கின் மருத்துவத்துக்காகவும், அவனுக்கு நல்ல சிகிச்சை அளிக்க வேண்டும் எனும் ஆர்வத்திலும் பேசாமல் அமெரிக்கா சென்றுவிட்டால் என்ன என யோசிக்கத் துவங்கினார்கள்.


நிக்கின் மாமா பாட்டா வாயிச்சஸ் ஏற்கனவே அமெரிக்க மண்ணில் தான் வாழ்ந்து வந்தார். லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து 35 மைல் தொலைவில் அரோரா ஹில்ஸ் என்னுமிடத்தில் தான் அவர் வசித்து வந்தார். கட்டுமானம், சொத்துப் பராமரிப்பு போன்ற பணிகளைச் செய்து வந்தார் அவர்.

“ஒரு வர்க் விசா வாங்கிட்டு வா.. எப்போ வந்தாலும் உனக்கு நான் வேலை தரேன்” என நிக்கின் தந்தையிடம் அடிக்கடிக் கூறுவார். இப்போது இந்த சூழ்நிலையில் அந்த விண்ணப்பத்தைப் பரிசீலிக்கலாம் என்று தோன்றியது போரிஸ்க்கு. காரணம் நிக்கின் உடல் அமைப்பு மட்டுமல்லாமல் அவருக்கு அலர்ஜி பிரச்சினையும் இருந்தது. எனவே ஆஸ்திரேலியாவின் பிரிஸ்போனிலிருந்தே ஆயிரம் மைல் வடக்கே போய் குயீன்ஸ்லேன்ட் எனுமிடத்தில் குடியேறினார்கள்.

வர்க் விசா அமெரிக்காவுக்குக் கிடைப்பது ஏதோ கத்தரிக்காய் வாங்கும் சமாச்சாரம் என நினைத்திருந்தார் போரிஸ். அது எவ்வளவு அபத்தம் என்பது விண்ணப்பித்த பிறகு தான் தெரிந்தது. நினைத்தது போல வேகமாகவோ சுமூகமாகவோ விஷயங்கள் நடக்கவில்லை.

ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகள் அலைந்த பிறகு தான் அவருக்கு வர்க் விசா கிடைத்தது. அதுவும் மூன்று வருடங்களுக்கு மட்டும்.

நிக்கிற்கு பத்து வயதாகும் போது தான் அமெரிக்கா செல்ல வேண்டும் எனும் அவர்களுடைய கனவும், முயற்சியும் செயல்வடிவம் ஆனது. அப்போது 1994!



இதற்கிடையில் போரிஸ், தஷ்கா தம்பதியினரின் வாழ்வில் இரண்டு ஆனந்த நிகழ்வுகள் நடந்தன. ரொம்ப சிறப்பாக நடந்தன.

ஒன்று ஆரோன், நிக்கின் தம்பி!

இன்னொன்று மிஷல், தங்கை.

இரண்டு பேருமே எந்தக் குறையும் இல்லாமல் ஆரோக்கியமாகப் பிறந்தது நிக்கிற்கும், அவர் குடும்பத்தினருக்கும் மகிழ்ச்சியான நிகழ்வாய் இருந்தது.

அமெரிக்காவின் கலிபோர்னியா அவர்களை வரவேற்றது. புது நாடு, புது இடம் ஒரு புத்துணர்ச்சியான அனுபவமாய் இருந்தது. என்ன செய்ய வாழ்க்கை எப்போதும் வசந்தங்களோடு நம் வாசலுக்கு வருவதில்லையே! வந்த இடத்தில் சிக்கல் நிக்கின் படிப்பு ரூபத்தில் வந்தது.

அரோரா ஹில்ஸ் பகுதியிலுள்ள பள்ளிக்கூடம் நிரம்பி வழிந்தது. ஒருவழியாக **"அட்வான்ஸ்ட்"** வகுப்பு கிடைத்தது. அதுவே பிரம்ம பிரயர்த்தனத்துக்குப் பிறகு தான் கிடைத்தது. ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த நிக்கிற்கு அது சவாலான அனுபவமாக இருந்தது.

ஆஸ்திரேலியாவின் கல்வி முறையும், அமெரிக்காவின் கல்வி முறையும் முற்றிலும் வேறுபட்டு இருந்தது. ஒவ்வொரு பாடத்துக்கும் வகுப்பு மாறி மாறிச் சென்று படிக்க வேண்டும். வேறு வேறு மாணவர்களுடன் படிக்க வேண்டும் என எல்லாமே புதுமையாய் இருந்தது.

படிப்பில் படு சுட்டியான நிக்கிற்கே இந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்வது மிகப்பெரிய சவாலாய் இருந்தது. ஆஸ்திரேலியாவில் ஸ்கூல் திறப்பதற்கும், அமெரிக்காவில் திறப்பதற்கும் இடையே சில மாத இடைவெளிகள் இருந்தன. அதனால் நிக் வகுப்பில் சேரும்போதே கணிசமான அளவு பாடங்கள் முடிந்திருந்தன.

போதாக்குறைக்கு மெடிக்கல் இன்சூரன்ஸ் எடுப்பது மிக சிக்கலாக இருந்தது. அமெரிக்காவின் கலிஃபோர்னியா டயர் 1 சிட்டி. அதாவது நாட்டை நான்கு நிலைகளாகப் பிரிக்கிறார்கள். டயர் 1 என்பது ரொம்ப ரொம்ப காஸ்ட்லியான சிட்டி. வீடு வாடகைக்கு எடுப்பதற்கே சம்பளத்தை அப்படியே கொடுக்க வேண்டுமெனுமளவுக்கு அச்சுறுத்தும். எல்லா விஷயங்களும், பொருட்களும் அங்கே காஸ்ட்லியாகத் தான் இருக்கும், வரி உட்பட! டயர் 2, 3, 4 என்பவை படிப்படியாய் செலவு குறைந்த நகரங்கள் என்பது பொருள்.

நிக்கின் மாமா பட்டாவுக்கும் அவருடைய மனைவி ரீட்டாவுக்கும் ஆறு குழந்தைகள். அவர்களுடைய விசாலமான வீட்டிலேயே நெருக்கடி என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இப்போது கூடுதல் சுமையாக நிக்கின் குடும்பமும் வந்து சேர்ந்திருக்கிறது. நிக்கின் தந்தை பட்டாவின் ரியல் எஸ்டேட் பிஸினஸில் தன்னை இணைத்துக் கொண்டு பணி புரிய ஆரம்பித்தார். அம்மாவோ நிக்கைக் கவனிப்பதற்காக வேலையை விட்டு விட்டார்.

இவர்களுக்கு ரொம்ப சிரமம் கொடுக்கக் கூடாது, தனியே ஒரு வீடு பார்த்துச் சென்று விட வேண்டும் என்பது தான் நிக் குடும்பத்தினரின் விருப்பம். ஆனால் செலவைப் பார்த்தால் மிரட்டியது! கடைசியில் அவர்கள் எல்லார் மனதிலும் நிழலாடிய விஷயம் ஒன்று தான். “அமெரிக்கா நமக்கு ஒத்து வராது!”.

நான்கே நான்கு மாதங்கள் தான் நீடித்தது முதல் அமெரிக்க வாழ்க்கை.

குடும்பத்தோடு மீண்டும் தனது சொந்த நாட்டுக்கே திரும்பினார் போரிஸ். வெளியே இருந்து பார்த்தபோது வசீகரித்த அமெரிக்கா அவருக்கு உண்மையில் பல்வேறு சோதனைகளையும், சவால்களையும் தான் கொடுத்தது. அவர் எதிர்பார்த்தது போல நல்ல கல்வி, நல்ல மருத்துவம், வசதியான சூழல் என்பதெல்லாம் நடக்கவில்லை.

ஆஸ்திரேலியாவில், பழைய வீட்டின் அருகிலேயே ஒரு வீட்டைக் கண்டுபிடித்து அந்த வீட்டுக்கே திரும்பி வந்தார்கள்.

நிக்கும் அவருடைய சகோதரர், சகோதரி மூவரும் அவர்களுடைய அதே பழைய பள்ளிக்கூடத்துக்குத் திரும்பினார்கள்.

தந்தை கம்ப்யூட்டிங் மற்றும் மேலாண்மை பயிற்றுவிக்கும் ஆசிரியப் பணிக்குத் திரும்பினார். “காலேஜ் ஆஃப் டெக்னிகல் அன்ட் ஃபர்தர் எட்ஜுகேஷன்” எனும் கல்வி நிறுவனத்தில் அவர் பணிக்கு சேர்ந்தார்.

நிக்கின் தாய் வீட்டிலேயே இருந்தார். அவருக்கு நிக் மற்றும் இரண்டு பிள்ளைகளைப் பார்ப்பதே முழுநேர வேலையாகி விட்டிருந்தது!

**வாழ்க்கையில் நடக்கும் எல்லா செயல்களையும் நாம் கட்டுப்படுத்தி விட முடியாது. நமது எல்லைகளுக்கு அப்பால் நடக்கும் விஷயங்கள் நடந்து**

**கொண்டே தான் இருக்கும்.** நம்மிடம் அந்த சந்தர்ப்பத்தில் இரண்டு வாய்ப்புகள் தான் தரப்படும். ஒன்று, கைகழுவிவிட்டு தோல்வியடைவது. இரண்டாவது, மாற்றத்தை ஏற்றுக் கொண்டு நமது முழு முயற்சியுடன் வாழ்க்கையை எதிர்கொண்டு பயணிப்பது! **இரண்டாவது பாகத்தை நிக்கின் குடும்பம் கைக்கொண்டது!**


# 4



உங்களிடம் எவ்வளவு குறைகள் இருக்கிறதோ, அத்தனைக் குறைகளையும் எதிர்கொண்டு வெற்றி கொள்ளத் தேவையான நிறைகளும் உங்களிடமே இருக்கின்றன என்பது நிக்கின் மனதில் உள்ள அழுத்தமான நம்பிக்கை.

கைகளும் கால்களும் இல்லாமல் இருந்தால் எதுவும் செய்ய முடியாது எனும் சிந்தனையே பலருக்கும் இருக்கும். ஆனால் நிக்கின் வாழ்க்கை தலை கீழ். அவருக்கு சின்ன வயதிலிருந்தே எதையேனும் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பது தான் மனதில் எழுகின்ற சிந்தனை. அதற்காகவே விளையாட்டுகளிலெல்லாம் ஈடுபடுவார்.

பந்தை உருட்டுவது, தலையால் தட்டுவது, குட்டிக் காலால் உதைப்பது என பல்வேறு விஷயங்களில் தனது ஆர்வத்தைச் செலுத்துவார். அவற்றில் ஒவ்வொரு படியாக முன்னேறும் போது அவருடைய மனதில் ஆனந்தமும் சாதித்த ஒரு புன்னகையும் எழும்.









அவருடைய பெற்றோர் தரையில் தலையணைகளைப் போட்டு அதில் தலையை வைத்து எழும்ப பயிற்சி கொடுத்தார்கள்.

ஊஹூம்.. உருப்படவில்லை.

நிக்கிற்கு நெற்றியைச் சுவரில் சாய்த்து எழும்புவதே பிடித்திருந்தது. வசதியாய் இருந்தது. பெற்றோரோ அது கஷ்டமாய் இருக்குமே என கவலைப்பட்டார்கள்.

**நிக்கைப் பொறுத்தவரை தனது இல்லாமையை மறைக்க இயலாமைகளை நிவர்த்தி செய்து கொண்டிருந்தார்.** கடினமான விஷயமாக இருந்தால் கூட அதைச் சொந்தமாய்ச் செய்து முடிக்க வேண்டும் எனும் அதீத ஆர்வம் அவரிடம் எப்போதுமே இருக்கும். சொந்தக் "**காலில்**" நின்று பழக வேண்டும் என்பதில் அவருடைய தன்னம்பிக்கை அபாரமானது!

ஒருமுறை பள்ளிக்கூடத்தில் சக மாணவன் ஒருவன் ஒரு வாழைப்பழத்தை நீட்டினான். விளையாட்டுக் காட்டிக் கொண்டே முடிந்தால் கடித்துப் பார் என சீண்டினான். சிறுவன் நிக் வீல் சேரில் இருந்தான். அந்த நிலையிலேயே தலையை நன்றாக முன்னால் நீட்டினான். வீல்சேர் அப்படியே பல்டியடிக்க தரையில் விழுந்து விட்டான் நிக். பலத்த அடி.

தந்தை பதறினார். மாலையில் தனியாக இருக்கும்போது அவனிடம் சொன்னார்.

"ரொம்ப கவனமா இருக்கணும் நிக். உனக்கு ஒரு வாழைப்பழம் போனா இன்னொரு வாழைப்பழம் கிடைக்கும். ஆனா ஒரு நிக் போனா எனக்கு இன்னொரு நிக் கிடைக்கமாட்டான்".

தந்தை சொல்லிவிட்டு கண்ணீருடன் கட்டியணைக்க, நிக்கிற்கு வலிகள் எல்லாம் மறைந்து போக உள்ளுக்குள் ஆனந்தம் நெகிழ்ச்சியாய் வழிந்தது. அதன் பின் எல்லாச் செயல்களிலும் அதீத கவனம் எடுத்துக் கொள்வதை அவர் வழக்கமாக்கிக் கொண்டார்.

**“எந்த சிக்கல் வந்தாலும் நாம தான் தீர்க்கணும். நமக்கு வேற ஆள் துணையே கிடையாது. எல்லாத்தையும் தனியா தோளில சுமந்து எப்படித் தீர்க்கிறது என கவலைப் படாதீங்க. உதவி தேவைப்படும்போ உதவியை கேட்கிறது தாழ்மையின் வெளிப்பாடு. கடவுளிடம் முதலில் உதவி கேளுங்க. இந்த உலகத்தில் நீங்க தனி மனிதர் அல்ல. உங்களுக்கு உதவவும், உங்களோடு இருக்கவும், கடவுள் தொடங்கி பலர் உண்டு. அந்த நினைப்பு எப்போதும் மனதில் இருந்தால் உங்களுடைய சோதனைக் காலத்தில் மன வலிமை கிடைக்கும்**” என அறிவுரை சொல்கிறார் நிக்.

பெரும்பாலான வேளைகளில் நமது மோசமான பயங்கள் தான் இனிமையான ஆச்சரியங்களாக உருமாறும். நாம் பயத்தை நினைத்து பயந்து கொண்டே இருக்கிறோம். நமது செயல்களில் பயம் வந்து படுத்துக் கொண்டால் செயல்களில் வீரியம் கெட்டுப் போய்விடுகிறது. பெரும்பாலான பயங்கள் நிழலோடு கொள்ளும் நீள் யுத்தம் போன்ற சமாச்சாரம். இது நடக்குமோ, அது நடக்குமோ எனும் பயம். அந்த பயம் நம்மை பின்னுக்கு இழுத்து விடுகிறது.

நிக்கிற்கு கால்கள் இருக்கும் இடத்தில் ஒரு சின்ன பாதம் போன்ற அமைப்பு உண்டு இல்லையா? அதில் இரண்டு விரல்கள் உண்டு. பிறக்கும் போது அந்த இரண்டு விரல்களும் ஒட்டிக் கொண்டு பிறந்தன. டாக்டர்கள் அறுவை சிகிச்சை செய்து அதைப் பிரித்தார்கள். இந்தப் பாதத்தை வெச்சு

என்னத்தை செய்ய என்பது தான் அவர்கள் மனதில் அப்போது ஓடிய சிந்தனை.

நிக்கின் உடல் அடிக்கடி சூடாகிக் கொதிக்கும் என்பது அவருடைய இன்னொரு பிரச்சினை. தாய் தஷ்கா நர்ஸ் என்பதால் அவருக்கு இந்த அறுவை சிகிச்சைப் பிரச்சினைகள் தெரியும்.

“இவனோட உடம்பு அடிக்கடி சூடாகும். அதனால ஆபரேஷன் பண்ணும்போது உடலை கூலா வெச்சுக்கோங்க” என தலையில் அடிக்காத குறையாய் சொன்னார் அவர்.

டாக்டர்கள் கேட்டால் தானே. தங்களுக்குத் தெரியாதது ஒரு நர்ஸ்க்கு எங்கே தெரியப் போகிறது என்பது அவர்களுடைய எண்ணமாய் இருந்திருக்கலாம். அந்த கூல்டவுன் பார்ட்டை ஒழுங்காகக் கவனிக்கவில்லை. ஆபரேஷன் முடிந்தபின் பார்த்தால் உடல் அனலாய்க் கொதிக்கிறது. டாக்டர்களுக்கு அப்போது தான் உறைத்தது! தாய்க்குக் கடுங்கோபம்.



அப்புறம் என்ன செய்ய? ஐஸ்கட்டியை உடலில் கொட்டியும், ஈரம் கொண்டு துடைத்தும் ஒருவழியாய் உடல் சூட்டைக் குறைத்தார்கள்!

ஆனால் அந்த குட்டி பாகம் அறுவை சிகிச்சை வெற்றி என்று சொன்னது. அது நிக்கிற்கு மிகப்பெரிய உறுதுணையாகவும் மாறிப் போனது!

**“இந்த ஒரு பாதமும் இல்லேன்னா நான் என்ன பண்ணியிருப்பேன்னே எனக்குத் தெரியலை”** என்கிறார் நிக், நகைச்சுவையாக!

உற்சாகத்தையும், நம்பிக்கையையும் இரண்டு கைகளாகக் கொண்டிருப்பதால் தான் அவருக்கு தன்னுடைய இல்லாமை தடையாக இல்லாமல் இருக்கிறது!

நிக்கிற்கு நகைச்சுவை உணர்வு ரொம்ப அதிகம். ஒருமுறை அமெரிக்கன் தூதரகத்தில் விசாரணைக்காய் கூப்பிட்டார்கள். அங்கு சென்ற அவர், ஒருவரை அழைத்து கேட்டார்.

“ஏங்க.. என்ன பிரச்சினை? என்னோட கைரேகை சரியா விழலையா?”

# 5




அன்பு செய்யவும், அன்பு செய்யப்படவும் ஆட்கள் கூடவே இருந்தால் எந்த விதமான குறைகளையும் மிக எளிதில் வென்றுவிடலாம். இந்த உண்மை நிக் தன்னுடைய சின்ன வயதிலேயே புரிந்து கொண்ட ஒரு தத்துவம்.

அவருடைய பெற்றோர் அவர்மீது அதீத அன்பு வைத்திருந்தார்கள். ஒருவகையில் அவர்களுக்கு முன்னால் நீண்டு கிடந்ததென்னவோ இருட்டுச் சாலை தான். சுரங்கப்பாதைக்குள் செல்லும் இருட்டு ரயில் போலத் தான் அவர்களுடைய மனம் இருந்தது. முக்கியமாக இப்படி ஒரு

குழந்தையை எப்படி வளர்க்கப் போகிறோம். அவன் எப்படி இந்தச் சவாலான உலகை சந்திக்கப் போகிறான் என்பது தான்.

“எல்லா பொருளுக்கும் ஒரு மேனுவல் கிடைக்கும். ஆனா உன்னை இயக்கறது எப்படிங்கற செய்முறை விளக்க புக் எங்களுக்குக் கிடைக்கவேயில்லை” என அவருடைய அப்பா ஜோக் அடிப்பார்.

அவருடைய சகோதரன் ஆரோன், மற்றும் சகோதரி மிஷெல் இருவருமே நிக்கை ஒரு குறையுள்ள மனிதனாய்ப் பார்க்கவில்லை. ஒரு மூத்த அண்ணனாக மட்டுமே பார்த்தார்கள். அதனால் கேலியும், கிண்டலும் அறையில் நிரம்பி வழியும். அது தான் நிக்கிற்கு உற்சாகமான உலகத்தை அமைத்துக் கொடுத்தது.

கூடப் பிறந்தவர்கள் அல்லாத அவருடைய மற்ற உறவுக்கார சகோதரர்களும் கிண்டல் கேலி என்றே இருப்பதால் இவருடைய சூழல் மகிழ்ச்சிகரமான ஒன்றாய் மாறிப் போனது. நிக்கின் இயல்பும் கிண்டலை ரசிக்கும் மனதைக் கொடுத்ததே தவிர, அதைக் கண்டு வருந்தும் சூழலைக் கொடுக்கவில்லை என்பது தான் பிளஸ்.

ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் போவார்கள். நிக் வீல் சேரில் கையும் காலும் இல்லாமல் வருவார். “ஐயோ.. ஏலியன்.. ஏலியன்” என கத்திக் கொண்டே ஓடுவார்கள். சுற்றியிருப்பவர்கள் கிலியுடன் பார்த்தால் நிக் சிரித்துக் கொண்டிருப்பார். அட! இந்தப் பசங்க இந்த அப்பாவியை கிண்டல் பண்றாங்களே என சிலர் நினைப்பார்கள். ஆனால் நிக் அன்ட் கோ அதையெல்லாம் கண்டுகொள்வதில்லை. வாழ்க்கையை ரசிக்கப் பிறந்தவர்கள் போல ஜாலியாகவே இருப்பார்கள்.

எப்போதெல்லாம் உள்ளுக்குள் தன்னம்பிக்கை குறையுமோ அப்போதெல்லாம் நிக்கின் தந்தை நிக்கிடம் சொல்வார்.

**“கடவுள் தப்பு செய்வதில்லை. நீ இப்படிப் பிறந்திருப்பது கடவுள் செய்த தவறல்ல. உனக்கென ஒரு திட்டத்தைக் கடவுள் வைத்திருக்கிறார் என்பது சர்வ நிச்சயம். அதை நீ நம்பி கடவுளின் திட்டத்தை நோக்கிப் பயணிக்க வேண்டும்”**

அந்த வார்த்தைகள் அவருக்குள் மீண்டும் உற்சாகத்தைக் கொண்டு வந்து கொட்டும்!

எல்லோரையும் போல தான் இருக்க வேண்டியதில்லை. நாம் நம்மைப் போல இருந்தால் போதும். ஒவ்வொருவருடைய இயல்புக்கும், வரவுக்கும், வாழ்க்கைக்கும் ஒரு அர்த்தம் உண்டு. அதை பொறுமையும், இறை நம்பிக்கையும் இருந்தால் கண்டடைய முடியும். உங்களை நம்பி, உங்களுடைய செயல்களை ஆரம்பியுங்கள். செயல்படாமல் இருப்பவர்கள் சாதிப்பதில்லை, வாழ்வதும் இல்லை எனும் சிந்தனைகள் அவருக்குள் தழைத்து வளர அவருடைய தந்தையின் வழிகாட்டல் ஒரு காரணம்.

நம்மை பிறர் ஏற்றுக் கொள்வது இரண்டாம் பட்சம்! நம்மை நாம் ஏற்றுக் கொள்வது தான் முதல் தேவை.

நம்மை நாமே ஏற்றுக் கொள்ளாவிட்டால், நிச்சயம் நம்மை இன்னொரு நபர் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை! கடவுள் நம்மைப் படைத்திருக்கிறார். அவர் நம்மை அன்பு செய்கிறார். அந்த அன்பை உணர்ந்தாலே போதும் வாழ்க்கையை எதிர்கொள்ளும் வலிமை கிடைத்துவிடும் என்கிறார் அவர்.

★

என்னை யாராச்சும் லவ் பண்ணுவாங்களா? நிக்கின் பதின் வயதுகளில் அவருடைய மனதை அலட்டிய கேள்விகளில் மிகப் பெரிய கேள்வி இது!

என்னை யாராச்சும் லவ் பண்ணுவாங்களா? அப்படியே லவ் பண்ணினாலும் என்னால் அந்தப் பெண்ணைக் கட்டியணைக்க முடியாது! என்னுடைய குழந்தைகளைக் கூட என்னால் தூக்கிக் கொஞ்ச முடியாது! என்ன இப்படி ஒரு வாழ்க்கை! என்னை முதலில் எந்தப் பெண்ணாவது திரும்பிப் பார்ப்பாளா? கல்யாணம் காட்சி எல்லாம் நடக்குமா? எனும் சிந்தனைகள் அவருடைய மனதில் அடிக்கடி எழுந்து கொண்டே இருக்கும். தனது உடல் ஊனமடைந்திருக்கிறது எனும் எண்ணமே அத்தகைய சிந்தனைகளின் போது தான் அதிகமாய் எழும்.

அதைத் தாண்டினால், வேலை சார்ந்த பயமும் கேள்விகளும் வரிசை கட்டி நிற்கும். என்னோட உடல் அமைப்புக்கு என்ன வேலை கிடைக்கும்? என்ன வேலைக்கு என்னை எடுப்பார்கள்? அப்படியே என்னை வேலைக்கு அமர்த்தினாலும், எனக்கு உதவி செய்யவே இன்னொருத்தர் வேணுமே? அப்படி ரெண்டு பேரோட சம்பளம் கொடுத்து என்னை எதுக்கு ஒருத்தன் வேலைக்கு எடுக்கணும்? அவனுக்கு வேற வேலை இல்லையா?

இப்படிப்பட்ட கேள்விகள் வரிசையாய் வந்து நிற்கும். கேள்விகளுக்கு விடைகளாய் இன்னொரு கேள்வி இருக்குமே தவிர பதில்கள் கிடைக்கவில்லை.

**பயம் மனதில் மட்டுமே பாதிப்பை உண்டு பண்ணுவதில்லை. அது உடலையும் வெகுவாகப் பாதிக்கிறது. மனமும் உடலும் பின்னிப் பிணைந்து தான் மனிதனை வழிநடத்துகிறது.**

இளம் வயதில் அவருக்கு ஏற்பட்ட சஞ்சலங்களும், குழப்பங்களும், அச்சமும் வெகு நியாயமானதே! அதையெல்லாம் வளர வளர வெற்றி கொண்டார் என்பது தான் கவனிக்க வேண்டிய பாடம்.

**தனது குறைகளோடே கூட தன்னை நேசிக்கத் துவங்கினார் நிக். அதன் பிறகு தான் அடுத்தவர்களின் அங்கீகாரம் கிடைக்க ஆரம்பித்தது. பார்க்கும் போது அவருடைய குறைகளே பிறருடைய கண்களுக்குத் தெரியும். ஆனால் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தால் அவருடைய உற்சாகம் வருபவரையும் தொற்றிக் கொண்டு விடும்.**

பயம் எல்லோருடைய வாழ்க்கையிலும் வந்து கூடுகட்டும். ஐயோ நான் கருப்பா இருக்கேனே எனும் பெண்ணின் புலம்பல் முதல், குடும்பத்தை நடத்த பணத்துக்கு எங்கே போவேன் எனும் தந்தையின் புலம்பல் வரை பயம் எல்லோரிடமும் இருக்கிறது.

பயத்தின் இழைகள் நம்மைப் பிடித்துத் தள்ளுவது இயற்கை. ஆனால் அந்த பயத்தின் மூலையில் விழுந்து விடாமல் சட்டென எழுவதில் இருக்கிறது மனித மாண்பு. அதற்கான தேவையே இறையில் வைக்கின்ற ஆழமான நம்பிக்கை.

**நம்மிடம் இருக்கும் திறமைகளை அடையாளம் கண்டுகொண்டு செயல்படத் துவங்கும்போது பயம் விடைபெறத் துவங்கும்.**

நிக்கையும் பதின் வயதுகளில் உற்சாகமும் பயமும் மாறி மாறி ஆட்கொள்ளும். உற்சாகமாய் இருக்கும்போது நண்பர்களோடு நகைச்சுவையாய் பேசுவது, விளையாடுவது, சீண்டுவது என கலகலப்பார். அதற்காகவே அவரிடம் நிறைய பேர் நட்புப் பாராட்டுவார்கள்.

சோகமாய் இருந்தால் தனிமை நாடி அமைதியாய் இருப்பார்.

“கடவுளே நாளைக்குக் காலைல எனக்குக் கை முளைத்திருக்கணுமே” என்பது அவருடைய சிறுவயதுப் பிரார்த்தனை.

ஒவ்வொரு நாள் காலையிலும் ஆர்வமாய் கையைப் பார்ப்பார். அதிசயம் நடந்திருக்காது. சோர்ந்து விடுவார். பின் சகஜமாகிவிடுவார்.

கையில்லாத தன்னை தானே ஏற்றுக் கொள்ளாவிட்டால் பின் யார் தான் ஏற்றுக் கொள்வார்கள்? முதலில் என்னை நானே ஏற்றுக் கொள்வது தானே நியாயம். என்னை நான் ஏற்றுக் கொண்டால் தானே மற்றவர்களும் ஏற்க முடியும். இந்த சிந்தனை தான் அவருடைய தன்னம்பிக்கையைக் கூர் தீட்டியது!

அப்படி ஏற்றுக் கொண்டவுடன் மற்றவர்கள் நம்மை அள்ளி அணைப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. நிக் ஊரு விட்டு ஊரு சுற்றித் திரிந்ததால் பல வேறுபட்ட மாணவர்களோடு பழக வேண்டி சூழல்.

முதலில் பார்க்கும் மாணவர்களெல்லாம், “இவன் கொஞ்சம் மென்டல் போல” என்று நினைப்பதுண்டு. உடல் பாகங்கள் மட்டுமல்லாமல், மூளையும் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதே பலருடைய சிந்தனை.

அந்த சிந்தனையை அகற்றவே நிக் பலமுறை அவர்களிடம் பேசவேண்டியிருந்தது. தன்னை நிரூபிக்க பேசுவது கொடுமையான விஷயம். நிக் அதைச் செய்தார்.. தன்னைச் சுற்றியிருக்கும் மாணவர்களிடம் பேசினார். அவர்களுடன் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

ஒரு நல்ல விஷயம் என்னவென்றால், யாரிடமெல்லாம் நிக் பேசினாரோ, அவர்களெல்லாம் நிக்கை ஏற்றுக் கொண்டார்கள். அவரை ஒரு சாதாரண

மனிதனாக நேசிக்கத் துவங்கினார்கள். பழகத் துவங்கினார்கள். அதுதான் அவருடைய வெற்றியின் முதல் படி.

வாழ்க்கையின் மிக முக்கியமான திருப்பம் அந்தக் காலகட்டத்தில் தான் ஆரம்பமானது.

அது என்ன தெரியுமா?

சின்னச் சின்ன குழுக்களில் பேச நிக் அழைக்கப்பட்டது!

# 6




ஒரு முக்கியமான தகவலைச் சொல்லி விடுகிறேன்.

இன்றைக்கு நிக் வாயிச்சஸ் ஒரு மிகப்பெரிய தன்னம்பிக்கைப் பேச்சாளர். உலகின் 40 நாடுகளில் சுற்றித் திரிந்து பல மில்லியன் மக்களைச் சந்தித்து அவர்களுடன் பேசி அவர்களை ஊக்கப்படுத்தும் செயல்களைச் செய்து வருகிறார். அவருடைய பேச்சு உடைந்த உள்ளங்களை ஒட்டுகிறது.

தன்னம்பிக்கை இழந்து விழுந்து கிடக்கும் மக்கள் நிக்கின் வார்த்தைகளைக் கேட்டால் உற்சாகமடைகிறார்கள். அவர்களிடம் தன்னம்பிக்கை தாறுமாறாக வந்து ஒட்டிக் கொள்கிறது.

பெரிய பெரிய நிறுவனங்களில் இவருடைய வீடியோக்கள் காண்பிக்கப்படுகின்றன. கீழே விழுந்து விட்டு எழும்புவதற்கே கஷ்டப்படும்

நிக்கின் வாழ்க்கை அவர்களை நெகிழ வைக்கிறது. அதே நேரம் அதையெல்லாம் துச்சமாய் மதித்து மகிழும் நிக் அவர்களை மகிழ வைக்கிறார். வியக்க வைக்கிறார்.

ஒரு பாட்டில் டானிக்கைக் குடித்த தெம்பு அவருடைய பேச்சை சில நிமிடங்கள் கேட்கும் மனிதர்களுக்கு வருகிறது. ஒரு வருடத்தில் 270 முறை பொதுக்கூட்டங்களில் பேசிய வியப்பூட்டும் வரலாறு இவருடையது.

இவருடைய பேச்சுகள் தன்னம்பிக்கையோடு நடைபோட மக்களைத் தூண்டும். அதனால் தான் சொன்னேன், நிக் சின்னச் சின்னக் கூட்டங்களில் பேச அழைக்கப்பட்டது அவருடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான கட்டம்!

அவருடைய ஆரம்ப கால பேச்சுகள் பெரும்பாலும் இப்படித் தான் அமைந்தன.

**எல்லோருக்கும் திறமைகள் உண்டு. திறமை இல்லாத மனிதன் இல்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமை. பெரும்பாலும் அந்தத் திறமையில் தான் நமது வாழ்க்கைக்கான ஆனந்தமும், வெற்றிக்கான சாவியும் இருக்கும்.**

அந்தத் திறமை என்ன?

அதைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் கொஞ்சம் ஆர அமர்ந்து யோசியுங்கள். உங்களுடைய திறமைகளையெல்லாம் பட்டியலிடுங்கள். அதில் உங்களை வசீகரிப்பது எது என இனம் காணுங்கள்.

**எதைச் செய்ய மனம் விரும்புகிறது? எந்த வேலையைச் செய்தால் சோர்வு வர மறுக்கிறது, எந்த வேலையை செய்யும் போது வேலை எனும்**

உணர்வே வராமல் இருக்கிறது? மறுபடியும் மறுபடியும் உங்களை செய்யத் தூண்டும் வேலை எது?

**அதுவே உங்களுடைய ஸ்பெஷல் திறமை. அதுவே நீங்கள் செய்ய விரும்பும் வேலை. அந்த வேலையை நாம் சும்மா செய்ய விரும்புவோம். அது ஒருவகையில் ஒரு ஹாபியாகும். அந்த ஹாபியைச் செய்ய ஒருவர் பணம் தரும்போது அது வேலையாகி விடுகிறது.**

இப்படிப்பட்ட சின்னச் சின்ன உரையாடல்கள் சக மாணவர்கள், ஒத்த வயதுடைய மாணவர்கள் இவர்கள் மத்தியில் நல்ல சுவாரஸ்யத்தை ஏற்படுத்தி விட்டது! பலரும் இவருடைய பேச்சை விரும்ப ஆரம்பித்தனர்..

ஒருமுறை சுமார் 300 பதின்வயதினர் அமர்ந்திருந்த ஒரு கூட்டத்தில் பேச அழைக்கப்பட்டார் நிக். அந்தக் காலத்தில் அது மிகப்பெரிய குழு. வழக்கம் போலவே மிக நேர்த்தியாக, உற்சாகமூட்டக் கூடிய வகையில் அமைந்தது பேச்சு.

பேச்சுக்கு இடையே பார்வையாளர்களுடைய முகத்தில் பல்வேறு விதமான முகபாவங்கள். நிக் தன்னுடைய மழலைக் காலம் முதல் இந்தப் பிராயம் வரை நடந்த சோதனைகள், நிராகரிப்புகள், சவால்கள் போன்றவற்றை விளக்கிக் கொண்டே இருக்க கண்கள் கண்ணீர் வடித்தன.

திடீரென ஒரு அழுகுரல். ஒரு பெண் கண்ணீர் விட்டுச் சத்தமான அழத் துவங்கினாள். நிக்கிற்கு எதுவும் புரியவில்லை. தனது துயரங்களை நினைத்து அழுகிறாளா? இல்லை எனது துயரங்களை நினைத்து அழுகிறாளா? அவருடைய கேள்விகள் உருண்டு கொண்டிருந்தது. அழுது கொண்டே இருந்தவள் திடீரென கையைத் தூக்கினாள். பேசினாள்.

“நான் ஒரு தடவை உங்களைக் கட்டியணைக்கலாமா?”

“வாங்க”

அந்தப் பெண் நடந்து முன்னால் வந்தாள். கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தாள். நிக்கைக் கட்டியணைத்தாள். அவளுடைய கண்கள் வழிந்தன. அறை முழுவதும் நெகிழ்ச்சித் துளிகள். நிக்கின் கண்களும் கலங்கின.

கட்டியணைத்த பெண் அவருடைய காதில் கிசுகிசுத்தாள்!

நிக் எதிர்பாராத வார்த்தைகள் அவை!

நிக்கை அழுத்தமாய்க் கட்டியணைத்த அந்த பெண் கண்ணீருடன் கிசுகிசுத்தாள்.

“நான் எப்படி இருக்கிறேனோ அந்த நிலையில் அழகாய் இருக்கிறேன் என்று யாரும் என்னிடம் சொன்னதில்லை. என்னை நேசிக்கிறேன் என யாரும் என்னிடம் சொன்னதில்லை. நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். என்னால் அழுகையை அடக்க முடியவில்லை. என்னுடைய வாழ்க்கை இந்தக் கணத்திலிருந்து மாறுகிறது. நீங்கள் மிக மிக அழகானவர் நிக். நன்றி”

அந்தப் பெண் சொல்லிவிட்டுக் கடந்து போய்விட்டாள்.

நிக்கின் மனதில் பல்வேறுவிதமான உணர்ச்சிக் கொந்தளிப்புகள். ஒருவகையில் அதுதான் நிக்கின் உரை அங்கீகரிக்கப்பட்டதை அவர் உணர்ந்த தருணம். தன்னுடைய பேச்சு இன்னொரு நபரை தொட்டதை அவர் உணர்ந்த கணம் அது. தன்னால் இன்னொரு நபருக்கு ஆறுதல் அளிக்க முடியும் என அவருடைய மனம் நம்பிக்கை கொண்ட தருணம் அது!

அதுவரையில் நிக் நினைத்திருந்த விஷயம் வேறு. நாம ரொம்ப கஷ்டப்பட்டு உடல் குறையைத் தாண்டி வாழ்வது தன் மக்களை உற்சாகப்படுத்துகிறது. கையில்லாதவனே இவ்ளோ சந்தோசமா இருக்கும்போது நாம ஏன் சந்தோசமா இருக்கக் கூடாதுன்னு மக்கள் நினைப்பாங்க. இப்படியெல்லாம் தான் நிக் நினைத்திருந்தார்.

ஆனால் அதையெல்லாம் தாண்டி, தனது பேச்சுக்கு, தனது இதயம் திறந்த உண்மையான வார்த்தைகளுக்கு ஒரு வலிமை இருக்கிறது என்பதை அவர் அப்போது தான் புரிந்து கொண்டார். ஒருவேளை இறைவன் என்னைப் படைத்திருப்பது மனதளவிலும், உடலளவிலும் வாடும் மக்களுக்கு உற்சாக டானிக்காய் உருமாறுவதற்காய் தானோ என அவருடைய சிந்தனைகள் விரிவடைந்தன!

இன்னொருவரைத் தூக்கி விட கரங்கள் இல்லை. இன்னொருவரோடு நடக்க கால்கள் இல்லை. ஆனால் இன்னொருவருடைய மனதைத் தூக்கி விடும் நம்பிக்கை வார்த்தைகள் உண்டு என்பதை அவர் அப்போது தான் உணர்ந்து கொண்டார்.

அதன் பின் அவருடைய செயல்கள் பரபரப்பாயின. அவரை பேசுவதற்காக அழைக்கும் பள்ளிக்கூடங்கள். இளைஞர் இயக்கங்கள், தேவாலய கூட்டங்கள், பொது இடங்கள் என எல்லா இடங்களிலும் தனது வாழ்க்கை அனுபவங்களையும், இறை அனுபவங்களையும், தன்னம்பிக்கை வார்த்தைகளையும் பேசத் துவங்கினார்.

படிப்படியாக வளரத் தொடங்கிய அவருடைய ஆறுதல் பணி கிளை விரித்துப் பறந்தது. ஏகப்பட்ட பள்ளிக்கூடங்களில் அவருடைய பேச்சு

மாணவர்களுடைய தன்னம்பிக்கையைத் தட்டி எழுப்பியது. சிறைச்சாலைகளுக்கும் சென்றார். குற்ற உணர்வில் கூனிக் கிடந்த மக்களை நிமிர்த்தினார். நிராகரிக்கப்பட்ட மக்களை அன்பின் வார்த்தைகளால் அரவணைத்தார். அனாதை இல்லங்களுக்குச் சென்றார், கைவிடப்பட்ட மக்களுக்காக பேசினார். அவர்களின் தோழனாக மாறினார். மருத்துவமனைகளுக்குச் சென்றார். எந்த நோயும், எந்தப் பாதிப்பும் மனதின் வலிமையை உடைத்து விடாமல் இருக்கட்டும் என ஊக்கம் ஊட்டினார்.

அவருடைய பேச்சைக் கேட்டவர்கள் தங்களுடைய துயரங்களை மறக்கத் துவங்கினார்கள். அவருடைய பேச்சு இறைவனின் ஆறுதல் வார்த்தைகளை அவர்களிடம் பேசியது. கடவுள் உங்களை நேசிக்கிறார். நானும் நேசிக்கிறேன். உங்களுக்கென கடவுள் பிரத்யேகமான ஒரு செயல்திட்டத்தை வைத்திருக்கிறார். அவரை நம்புங்கள், உங்களை நம்புங்கள். எனும் சிந்தனையின் அடிப்படையில் அவருடைய பேச்சுகள் அமைந்தன.

நமக்கு முன்னால் என்ன இருக்கிறது என்பதை முழுமையாய் அறிந்து கொள்ளும் ஆற்றல் நமக்கு இல்லை. ஆனால் எது இருந்தாலும் அதைக் கடந்து செல்லும் வலிமை நமக்கு உண்டு. நாம் நினைப்பதை விட ஆனந்தமான நிகழ்வுகளே நம்மை எதிர்கொள்ளப் போகின்றன. நம்பிக்கையோடு எழுவதிலும் நடப்பதிலும் தான் நமது வாழ்க்கையின் வெற்றி இருக்கிறது.

உங்கள் வாழ்க்கை இந்தக் கணத்தில் மோசமானதாக இருக்கலாம். அதை நல்லதாக மாற்ற முடியும். நன்றாக இருப்பதை சிறப்பானதாக

மாற்றமுடியும். அதற்கு இரண்டு தேவைகள் மட்டும். ஒன்று நீங்கள் அதை நினைக்கவேண்டும். இரண்டாவது கடவுளின் அருள் அதில் வேண்டும்.

உங்களை மற்றவர்கள் சந்தேகப்படலாம். உங்களுடைய பாதை சரியில்லை என்று கூட நினைக்கலாம். நீங்கள் உங்களை நம்புங்கள். கடவுள் உங்களுக்குத் தந்த வழியில் நம்பிக்கையோடு செல்லுங்கள். நான் பொது இடங்களில் பேசுவதை முதன்மையாய் கொண்டபோது விமர்சனங்கள் எழுந்தன. ஏன், என்னோட அப்பாவே சொன்னார்

“பேசாம அக்கவுண்டிங் வேலைக்குப் போடா. அதுல ஒரு நிரந்தர வருமானம் உண்டு. ஊர் சுத்தி பேசிட்டு திரியாதே. அது ரொம்ப அலைச்சல், கஷ்டம்”

நான் என்னுடைய தேர்வில் உறுதியாய் இருந்தேன். அது இறைவனின் திட்டம் என்பதையும் புரிந்து கொண்டேன்.

நீங்களும் உங்களுடைய அழைத்தலில் நிலைத்திருங்கள். நீங்கள் செல்லும் வழி சரியானதா என்பதைப் பரிசீலியுங்கள். உங்களை அது மகிழ்ச்சிப் படுத்துகிறதா? பிறருக்கும் நன்மை செய்கிறதா என பாருங்கள். அந்தத் துறைக்குத் தேவையான திறமைகளையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் இறைவனின் கரம் பிடித்து நடக்கும்போது தடுமாற்றங்கள் நிகழ்ந்தாலும், தடம் மாறுவதில்லை.

என நிக்கின் உரைகள் ஒவ்வொன்றும் மக்களுடைய உள்ளங்களைத் தொட்டன! அவர்களை உற்சாகமூட்டின.

அப்படி உற்சாகமூட்டிய நிக்கையே புரட்டிப் போட்டது ஒரு நிகழ்வு!

# 7




அந்த நிகழ்வு கலிபோர்னியாவில் நடந்தது.

பல்வேறு மூலை முடுக்குகளில் பேசிக்கொண்டிருந்த நிக் தன்னுடைய ஊரான கலிபோர்னியாவில் பேச வேண்டிய சூழல் ஏற்பட்டது. கலிபோர்னியாவிலுள்ள நாட் அவென்யூ கிறிஸ்தவ தேவாலயத்தில் அவர் அழைக்கப்பட்டார்.

முந்தின நாள் இரவு முழுதும் அவருடைய மனதில் அடுத்த நாள் பேசப்போகும் விஷயங்களைக் குறித்த சிந்தனைகளே நிரம்பியிருந்தன.

வருகின்ற மக்களுக்குப் பயனுள்ள வகையில் கடவுள் தன்னைப் பேசவைக்க வேண்டும் என பிரார்த்தித்தார். அவர்களுடைய மனதில் நம்பிக்கையின் வெளிச்சத்தைப் பகிர வேண்டுமே எனும் சிந்தனையுடன் தூங்கினார்.

மறுநாள் சர்ச்க்குச் சென்றார்.

வீல் செயரில் அவர் ஆலயத்துக்குள் நுழைந்தார். கூட்டம் நிரம்பி வழிந்தது. அவர் ஆலயத்துக்குள் மெதுவாகச் சென்று கொண்டிருந்தார்.

ஆலயத்தில் பாடல் பாடத் துவங்கினார்கள்.

திடீரென ஒரு குரல் கூட்டத்திலிருந்து ஒலித்தது.

“நிக்... நிக்”

நிக் நின்றார். இவ்வளவு ஆர்வமாகத் தன்னை யார் கூப்பிடுகிறார்கள் என்பதைப் பார்க்கத் திரும்பினார். அங்கே ஒருவர் தன்னை நோக்கிக் கையசைப்பதைப் பார்த்துப் புன்னகைத்தார்.

அந்த நபர் சிரித்துக் கொண்டே ஒரு குழந்தையைத் தூக்கிக் காட்டினார்.

அந்த சிரிக்கும் குழந்தையைக் கண்டதும் நிக் அதிர்ந்து போனார்! அவரை நிலைகுலையச் செய்தது அந்தக் குழந்தை.

அந்தக் குழந்தைக்கு இரண்டு கைகளும் இல்லை! இரண்டு கால்களும் இல்லை. நிக்கிற்கு இருப்பது போல ஒரு குட்டிப் பாதம் மட்டுமே!

ஒன்றரை வயதான குழந்தை அது! நிக்கிற்கு அப்போது வயது 24!

அதுவரை உரையாற்றுவதைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டே இருந்த நிக் தடுமாறினார். அவருக்கு முன்னால் உலகமே சுற்றுவது போல தோன்றியது. சட்டென தனது பால்ய காலத்துக்குள் விழுந்தார்.

ஒன்றரை வயதில் அந்த குழந்தை சந்திக்கும் கஷ்டங்களையும், பெற்றோர் சந்திக்கும் சவால்களையும், துயரங்களையும், இனிமேல் அந்தக் குழந்தை சந்திக்கப் போகும் நிராகரிப்புகள், அவமானங்கள் போன்றவையும் அவருடைய மனசுக்குள் கனமாய் வந்தமர்ந்தன.

தன்னைப் போல அச்சு அசலாய் இருந்ததாலோ என்னவோ, அந்தக் குழந்தையின் மீது அவருக்கு தனிப்பட்ட ஒரு பாசமும், பரிவும் வந்து சேர்ந்தது.

அந்தக் குழந்தையின் பெற்றோர் கிரிஸ் மற்றும் பேட்டி, இருவரும் புன்னகையுடன் குழந்தையைக் கைகளில் ஏந்தியிருந்தனர். குழந்தையின் பெயர் டேனியல் மார்டினீஸ்.

அவருடைய உரையாற்றும் நேரம் வந்தது.

அவருடைய மனம் முழுதும் டேனியல் தான் ஆக்கிரமித்திருந்தான். அவன் சந்திக்கப் போகும் உலகைக் குறித்த சிந்தனைகளே அவரை ஆக்கிரமித்திருந்தன.

ஆனாலும் அவருக்கும் ஒரு சின்ன நிம்மதி. நான் பிறந்தபோது இன்னொரு வழிகாட்டி இல்லை. இப்போது இந்தக் குழந்தைக்கு நான் இருக்கிறேன். இந்தப் பெற்றோருக்கு எனது பெற்றோர் இருக்கிறார்கள். எப்படியெல்லாம் வாழ்க்கையை எதிர்கொள்ளலாம், எப்படியெல்லாம் சவாலைச் சந்திக்கலாம், எப்படியெல்லாம் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழலாம் என வழிகாட்ட நாங்கள் இருக்கிறோம் எனும் சிந்தனை அவருக்குள் சின்ன ஆறுதலை விதைத்தது.

அவர் அந்தப் பெற்றோரையும், குழந்தையையும் மேடையில் அழைத்தார். அவர்கள் வந்தார்கள்.

பெற்றோர் குழந்தையை இருகைகளாலும் தூக்கி உயரப் பிடித்தார்கள்.

பெரிய மனிதனான நிக்கும், மழலை டேனியலும் ஒரே மாதிரி ஒரே மேடையில் தோன்றியபோது கூட்டம் விசும்பத் துவங்கியது. கூட்டத்தினரின் கண்ணீர் நிக்கின் கண்களையும் கலங்க வைத்தது!

இவன் ஒரு விபத்தல்ல. இவனுக்கு கடவுள் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். சரியான நேரத்தில் அது நிச்சயம் வெளிப்படும் என நிக் நம்பினார்.

அந்த நிகழ்வு முடிந்தது.

நிக் வீடு திரும்பினார்.

பொதுவாக இனிமையான நிகழ்வுகளுடனும், சுவையான அனுபவங்களுடனும் வீடு திரும்பும் நிக், அன்றைய தினத்தில் மட்டும் ரொம்பவே அமைதியாய் இருந்தார்.

அவருடைய மனமெங்கும் பளீரடிக்கும் டேனியலின் கண்கள் மின்னின. அவனுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டவும், அவனோடு கூட நடக்கவும் தனது குடும்பம் எப்போதும் இருக்க வேண்டும் எனும் சிந்தனை அவருக்குள் ஆழமாய்ப் பதிந்தது.

நிக்கின் தனது பெற்றோருடன் இந்த நிகழ்சியைப் பகிர்ந்து கொண்டார்.

அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

டேனியலில் பெற்றோரும், நிக்கின் பெற்றோரும் சந்தித்துக் கொண்டார்கள்.

“நிக் ஒரு முன்மாதிரியாய் இருப்பது எனது மகனுக்கு மிகப்பெரிய தன்னம்பிக்கையாய் இருக்கும். அவன் சாதாரண வாழ்க்கையை வாழ முடியும் என்பதற்கு நிக் தான் சான்று” என டேனியலில் பெற்றோர் நெகிழ்ந்தனர்.

அங்கே ஒரு புது உறவுப் பாலம் கட்டி எழுப்பப்பட்டது!

ஊனத்தைத் தாண்டி சாதித்தவர்களுடைய வாழ்க்கை வரலாறு தான் பல வேளைகளில் நம்மை உற்சாகமாய் இயங்க வைக்கிறது. அது தான் நிக் போன்றவர்களுடைய வாழ்க்கையையும் உற்சாகமாய் அணுக வைக்கிறது. நிக்கை உற்சாகமூட்டும் ஒரு நபர் உண்டு!

1880ம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள ஆர்தர் – கேட் தம்பதியருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அழகான குழந்தை ஒன்றரை வயது வரை சாதாரண குழந்தையாய் தான் இருந்தது. திடீரென வந்த ஒரு நோய் குழந்தையின் வாழ்க்கையையே புரட்டிப் போட்டுவிட்டது. பார்வை போய்விட்டது. கேட்கும் திறனும் போய்விட்டது. பார்க்காமல், கேட்காமல் இருந்த அந்தக் குழந்தையை எப்படி வளர்ப்பதென திகைத்தனர் பெற்றோர்.

படிக்க வைப்பது எப்படி? பாடம் சொல்லிக் கொடுப்பது எப்படி? யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆனி சுலிவன் எனும் பெண் அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கத் துணிந்தார். எப்படி? ஒரு கையில் பொம்மையை வைப்பார், மறு கையில் பொம்மை என ஆங்கிலத்தில் என எழுதுவார். ஆனால் குழந்தையால் ஒரு கையில் இருக்கும் பொருளுக்கான வார்த்தை தான் மறுகையில் எழுதப்படுகிறது என்பது மட்டும்

புரியவேயில்லை. ஒரு நாள் ஒருகையில் குளிர்ந்த நீரை திறந்து விட்டுகொண்டு மறுகையில் “வாட்டர்” என எழுதியபோது தான் குழந்தைக்கு பளிச் என மனசுக்குள் பல்ப் எரிந்திருக்கிறது. பின் அசுர வேகத்தில் வார்த்தைகள் கற்பிக்கப்பட்டன.


இவளால் என்ன செய்ய முடியும் என பரிதாபமாய்ப் பார்க்கப்பட்ட அந்த பெண் உலகையே பிரமிக்க வைத்து பல்கலைக்கழகப் பட்டம் பெற்றார். உலகிலேயே கேட்கும் திறன் மற்றும் பார்வை இரண்டும் இல்லாமல் பட்டம் பெற்ற முதல் நபர் எனும் பெருமை அவருக்குக் கிடைத்தது. பல்வேறு சமூக அமைப்புகள், பெண்கள் முன்னேற்றக் குழுக்கள் போன்றவற்றில் தீவிர ஆர்வம் காட்டினார். அமெரிக்காவின் பாராளுமன்ற உறுப்பினரானார். மிகச் சிறந்த பேச்சாளராகவும், அசத்தலான எழுத்தாளராகவும் பரிமளித்தார். பன்னிரண்டு நூல்கள், பல நூறு கட்டுரைகள் என அவருடைய எழுத்துப்பணி பிரமிப்பூட்டுகிறது. அமெரிக்க அரசு சிறப்பு நாணயம் வெளியிடுமளவுக்கு பெருமையடைந்த அந்தப் பெண்மணி தான் ஹெலன் கெல்லர்.

**ஹெலன் கெல்லரின் வாழ்க்கை நிக்கின் வாழ்க்கையிலும் ஒரு மிகப்பெரிய இன்ஸ்ப்ரேஷனாகவே இருந்தது.**

அந்த உற்சாகம் அவரை மீண்டும் மீண்டும் உற்சாகமாய் செயலாற்ற வைத்தது.

தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களை டிவிடியாக வெளியிட்டார் நிக். **“கைகள் இல்லை, கால்கள் இல்லை, கவலைகளும் இல்லை”** எனும் அந்த டிவிடி பல அலைகளை உருவாக்கியது.

அதைப் பார்த்த பலரும் அவருக்கு அனுப்பிய கண்ணீர் கடிதங்களும், நெகிழ்ச்சியான மின்னஞ்சல்களும் அவரை மீண்டும் மீண்டும் தனது உரைகளிலும் தன்னம்பிக்கை ஊட்டும் பேச்சுகளிலும் ஆர்வமாய் ஈடுபட வைத்தது.




“இதுவரை இப்படி ஒரு உரையைக் கேட்டதில்லை. உங்களுடைய வார்த்தைகள் எனக்கு உரமூட்டின. வாழ்க்கைக்கு புது அர்த்தத்தையே கொடுத்திருக்கின்றன”

எனும் தோரணயில் வரும் கடிதங்கள் ஸ்பெஷலானவை. பொதுவாக தன்னம்பிக்கை பேசுபவர்கள் வெறும் வாயினால் பேசுபவர்கள். நிக்கைப் பொறுத்தவரை அவர் ஒரு மிகப்பெரிய போராட்டத்தை வெற்றிகரமாய்க் கடந்து உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்கிறார். அதனால் அவருடைய உரைகள் வாழ்க்கை அனுபவங்களையும் சேர்த்தே பேசியது.

நிக் இவ்வளவு சிக்கல்களைக் கடந்தால் நம்மால் முடியாதா? எனும் உற்சாக சிந்தனையும் மக்களிடையே இயல்பாகவே எழுந்தது!

வாழ்க்கையை நாம் எப்படி அணுகுகிறோம் என்பதில் இருக்கிறது நமது வாழ்க்கையின் அமைப்பும், மகிழ்வும். குறுகிய கால இன்பத்தைத் தான் பெறுவார்கள். குடி, போதை, சிற்றின்பம் என அவர்களுடைய வாழ்க்கை இன்பம் எனும் மாயையில் துன்பமாகவே கழியும்.

மகிழ்ச்சி என்பது நம்மிடம் என்ன இருக்கிறது என்பதிலல்ல, நாம் எப்படி இருக்கிறோம் என்பதில் தான் இருக்கிறது. முழு உடலோடு

இருப்பவர்கள் அரை மகிழ்ச்சியில் இருக்கலாம். அரை உடலோடு இருப்பவர்கள் முழு மகிழ்ச்சியோடும் இருக்கலாம். அதுவே நிக்கின் வாழ்க்கை நம்மிடம் சொல்லும் தத்துவம்.

உலகெங்கும் இருக்கும் மக்களிடையே நிக்கின் உரைகள் இன்று பரவியிருக்கின்றன. பல மில்லியன் மக்கள் அவருடைய உரைகளினால் தங்களை உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் சிக்கல் பல வேளைகளில் பல வடிவங்களில் வந்து அவரையே அதிர்ச்சியும், வியப்பும் அடைய வைத்ததுண்டு.

அதில் ஒன்று அமெரிக்கன் எம்பஸியின் சந்தேகம். என்ன சந்தேகம் தெரியுமா?

இவன் தீவிரவாதியாய் இருப்பானோ!

# 8




2011 கடைசியில் மெக்சிகோவில் உரையாற்றுவதற்காகச் சென்றிருந்தார் நிக். பயணம் சிறப்பாகச் சென்று கொண்டிருந்தபோது ஒரு போன்கால்.

“உங்களுடைய அமெரிக்கன் விசா நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு தேசிய பாதுகாப்பு விசாரணை!”

அமெரிக்க தூதரகத்திலிருந்து வந்த அழைப்பு நிக்கை வியக்கவும், வியர்க்கவும் வைத்தது!

வியப்புக்குக் காரணம், இரண்டு கைகளும், கால்களும் இல்லாத நான் எப்படி தீவிரவாதத்தைக் “கையில்” எடுக்க முடியும் எனும் வியப்பு.

வியர்ப்புக்குக் காரணம், வரிசையாய் புக் செய்து வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க புரோக்ராம்கள்!

நிக் இன்னும் “வர்க் விசா” வில் தான் அமெரிக்காவில் வசித்து வருகிறார். எந்த வெளிநாட்டுக்குப் போனாலும் மீண்டும் விசாவைக் காட்டித் தான் மீண்டும் அமெரிக்காவுக்குள் நுழைய முடியும். அதில் தான் இப்போது சிக்கல் வந்திருக்கிறது.

ரிச்சீ என்பவர்தான் நிக்கின் கூடவே இருக்கும் உதவியாளர். அவரும் நிக்கும் அவசரமாய் அமெரிக்க தூதரகத்துக்குள் நுழைந்தார்கள்.

நிக் டென்ஷனில் இருந்தார். டென்ஷன் வந்தாலே எனக்கு ஜோக் வரும் என சிரிக்கிறார் நிக். ரொம்ப நேரம் காத்திருந்து கடைசியில் இவருடைய முறை வந்தது. அதிகாரியைச் சென்று சந்தித்தார்கள்.

அதிகாரியின் முகத்தில் இருந்த கடுமை இவருடைய படபடப்பை இன்னும் அதிகமாக்குகிறது.

“சார்.. என்ன பிரச்சினை? என்னோட கைரேகை சரியா விழலையா “

நிக் அடித்த ஜோக்கை ரசிக்கும் மனநிலையில் அந்த நபர் இல்லை.

“உங்கள் பெயர் சந்தேகத்துக்குரியவர்கள் பட்டியலில் வந்திருக்கு, விசாரணை செய்யப்பட வேண்டும்”

என்னது? சந்தேகப்படக் கூடிய நிலையிலா? சோதனைக்குரிய நிலையிலா? விசாரணைக்குரிய நிலையிலா? நிக்கிற்கு நம்பவே

முடியவில்லை. இப்படி ஒரு சோதனையை இதுவரை அவர் சந்தித்ததும் இல்லை.

சரி, ஏதாச்சும் கொஞ்சம் பெரிய ஆட்கள் பெயரைச் சொல்லிப் பார்ப்போமே என்று தொண்டையைக் கனைத்தார்.

“நான் நாளை மெக்ஸிகன் பிரசிடென்டைப் பார்க்கப் போகிறேன். அவர்களுடன் விருந்து இருக்கிறது” சொல்லிவிட்டு கேள்வியாய் பார்த்தார்.

“நீ வேணும்ன்னா அமெரிக்க பிரசிடென்ட் ஒபாமாவையே பாரு. அவரு கூட டின்னர் சாப்பிடு. அதெல்லாம் எனக்குக் கவலையில்லை. ஆனா விசாரணை முடியாம நீ அமெரிக்கா போற சோலியே நடக்காது”

தன்னோட பருப்பு வேகவில்லை என்றாகிப் போக, தளர்ந்து போன நிக் கேட்டார்.

“இந்த விசாரணைக்கு எவ்ளோ நாள் ஆகும்”

“நாலுவாரம் “

“என்னது நாலு வாரமா? ஏகப்பட்ட புரோக்ராம்ஸ் இருக்கே. பலர் எதிர்பார்த்திருப்பாங்களே. பிளீஸ் கொஞ்சம் கருணை காட்டுங்க”

நிக் விடாப்பிடியாய்க் கெஞ்சிக் கொண்டிருந்தார். இவருடைய தொந்தரவு பொறுக்க முடியாத அந்த அதிகாரி யாருக்கோ போன் பண்ணினார். போனுக்கே கேட்காத அளவுக்கு மெல்லிய குரலில் கிசுகிசுத்தார். பின் நிக்கைப் பார்த்தார்.

“உங்களுக்கு லக் இருக்கு...”

அப்பாடா.. நம்ம பிரச்சினை தீர்ந்தது என புருவம் உயர்த்தினார் நிக். “அப்போ எல்லாம் தீந்துச்சா?”

“இல்லை, நாலுவாரம்ங்கறதை இரண்டு வாரமா குறைச்சிருக்கோம்” சொன்னவர் நகர்ந்தார். நிக்கிற்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

நிக்கின் மனம் சோர்ந்தது. அடுத்த இரண்டு வாரங்கள் அமெரிக்காவில் நிறைய புரோக்ராம்கள். எல்லாவற்றையும் கடைசி நிமிடத்தின் கேன்சல் செய்தால் நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தவர்களுக்கு நஷ்டமும், கஷ்டமும் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது.

இந்தப் பிரச்சினை எப்படியாவது தீரவேண்டுமே எனும் சிந்தனை மனதுக்குள் ஓடிக் கொண்டே இருந்தது. தன்னுடைய ஆதரவாளர்களுக்கெல்லாம் போன் செய்தார். இந்த சிக்கல் தீர்வதற்காய் ஜெபம் செய்யுங்கள் என கேட்டுக் கொண்டார்.

எல்லாம் கைவிட்டால் கடைசி சரணாகதி இறைவன் மட்டும் தானே. நிக்கும் கடவுளையே நம்பினார். எல்லோரும் அவருக்காக ஜெபித்தார்கள்.

மூன்று மணி நேரத்துக்குப் பிறகு அமெரிக்க தூதரகத்திலிருந்து ஒரு போன்கால்.

“உங்க விசா சிக்கல் தீர்ந்தது. நீங்கள் இனிமேல் அமெரிக்கா போகலாம்”

நிக்கிற்கு தன் காதுகளை தன்னாலேயே நம்ப முடியவில்லை. மிகப்பெரிய மலை போல் வந்த பிரச்சினை சட்டென பனியாய் விலகியதை நினைத்து வியந்தார். நல்லதே நினைத்து, நல்லதே செய்து கொண்டிருந்தால் சரியான நேரத்தில் கடவுளின் உதவி வந்து சேரும் என்பதை அவர் உணர்ந்தார்.

திட்டமிட்டிருந்தபடியே அவருடைய பயணம் அமைந்தது, நிகழ்ச்சிகளும் நல்ல முறையில் முடிந்தன!

★

எனக்கு ஒரு அதிசயம் நடக்க வேண்டும் என விரும்புவது ஒரு வகை!

நான் இன்னொருவருக்கு ஒரு அதிசயத்தை நிகழ்த்திக் காட்ட வேண்டும் என்பது இன்னொரு வகை.

நிக் இரண்டாவது வகையில் இருக்கிறார்!

“கடவுளே ஒரு கையாவது வளராதா?” எனும் விண்ணப்பங்கள் நிறைவேறவில்லை. ஒரு கை இருந்தால் அவர் சிலருக்குத் தான் கை கொடுத்திருக்க முடியும். ஆனால் இரண்டு கையும் இல்லாமல் இருப்பதால் அவர் இன்றைக்கு பல இலட்சம் மக்களுக்குக் கை கொடுக்கிறார்.

நம்பிக்கை! அது தான் அவர் நீட்டும் கை!

ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் போவானா? அடுத்த அறைக்குச் செல்ல முடியுமா? என்றெல்லாம் அதிர்ச்சியாய் பேசப்பட்ட குழந்தை நிக் இன்று நீங்களும் நானும் நினைத்துப் பார்க்க முடியாத நாடுகளுக்கெல்லாம் பயணம் செய்து கொண்டிருக்கிறார்.

**ஒரு விஷயத்தில் நீங்கள் நம்பிக்கை வைக்க வேண்டும். அந்த விஷயத்தை நோக்கிச் செல்ல நீங்கள் செயல்பட வேண்டும். இந்த இரண்டு விஷயங்களும் இருந்தால் உங்களுடைய வாழ்க்கை நல்ல முறையில் அமையும்** என்பது நிக் சொல்லும் தன்னம்பிக்கை வழிகாட்டல்.

துரதிர்ஷ்டவசமாக நமது இலக்குகளை நோக்கிய பயணம் படிப்படியானது. ஒவ்வொரு சுவடாக வைத்துச் செல்லும் ஒரு நடை பயணம் போன்றது. அதனால் தான் பயணமே சுவாரஸ்யமானதாய் இருக்கிறது. நம்மை அப்படியே அலேக்காய்த் தூக்கி இலக்கில் கொண்டு வைக்கும் நிலையை கடவுள் நமக்குத் தரவில்லை.

**கடவுள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான திறமைகளைத் தந்திருக்கிறார். அந்த திறமையின் கையைப் பிடித்துக் கொண்டு நடக்க வேண்டும்.**

பிறந்ததும் அதிர்ச்சியாய் பார்க்கப்பட்டவர்.

ஐந்து வயதில் பரிதாபமாய்ப் பார்க்கப்பட்டவர்

பத்து வயதில் பரிகாசிக்கப்பட்டவர்!

இருபதுகளில் நாற்பது நாடுகளில் நாற்பது இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களைச் சந்தித்து மனங்களில் தன்னம்பிக்கை ஊற்றாய் நிரம்புகிறாரெனில் அவர் கடந்து சென்ற பாதை அப்படி. அவருடைய வீல்சேரின் பயணம் அப்படி.! அவருடைய பாதச் சுவடுகள் மண்ணில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மக்களுடைய மனங்களில் இருக்கிறது.

**உங்களை நீங்கள் நம்புங்கள். ஊனம் என்று மனதில் நினைப்பது தான் ஊனம். இறைவன் நம்மால் தாங்க முடியாத அளவுக்கு கஷ்டத்தைத் தருவதே இல்லை. எறும்புக்கு அதன் எடை மலையாய்த் தோன்றும், அது மனிதனுக்கு தூசு போலத் தோன்றும். மனிதனுக்கு மலையாய்த் தோன்றும் விஷயங்கள், கடவுளுக்குத் தூசு போலத் தோன்றும். அது தான் யதார்த்தம். அதைப் புரிந்து கொள்ளும் போது நாம் நம்பிக்கையைக் கடவுளில் வைக்கிறோம்.**

எல்லோரையும் போல தான் இல்லை எனும் தாழ்வு மனப்பான்மை நிக்கின் மனதில் முன்பெல்லாம் அடிக்கடி எழும். எல்லோரையும் போல தன்னால் செயல்பட முடியாதே எனும் ஏக்கமும் எழும். ஆனால் அது தேவையற்ற ஏக்கம் என்பது அவருக்கு நாட்கள் செல்லச் செல்ல விளங்கத் துவங்கியது!

**தன்னை முழுமையாய் ஏற்றுக் கொள்வதில் தான் வாழ்க்கையின் முழுமை இருக்கிறது.** புல்லாங்குழல் ஓட்டைகள் இருக்கிறதே என கவலைப்படக் கூடாது! மிருதங்கம் ஓட்டையே இல்லையே எனக் கவலைப்படக் கூடாது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு இயல்பு. இசையின் தன்மையும் வேறு வேறு. இசையின் அழகும் வேறு வேறு. எல்லாம் இணைகையில் தான் புதிய அழகிய இசைக் கோர்வையே உருவாகும்.

ஒவ்வொரு மலருக்கும் ஒவ்வொரு அழகு. அரளிப் பூவும், ரோஜாப் பூவும் ஒரே போல இருப்பதில்லை. தாழம்பூவும், முல்லைப் பூவும் ஒரே மாதிரி வாசம் வீசுவதில்லை. ஒவ்வொரு மனிதனும் அப்படியே! இயல்புகள் வேறுவேறு, குணாதிசயம் வேறு வேறு, மனதிடம் வேறு வேறு! அதில் தனது இயல்பை அப்படியே ஏற்றுக் கொண்டு அதில் சிறக்க வேண்டும் என விரும்புபவர்கள் வெற்றிகளை பெற்றுக் கொள்கிறார்கள்.

நிக் தன்னை ஏற்றுக் கொண்டார். அதற்கு அவருக்கு சிறிது காலம் பிடித்தது. தன்னை ஏற்றுக் கொள்வதற்கு அவருக்கு இறைநம்பிக்கை துணை செய்தது. இறைவன் தன்னைப் படைத்திருக்கிறார், நேசிக்கிறார் எனும் சிந்தனையே அவரை தெம்பூட்டியது.



**தன்னைப் போல மற்றவரையும் நேசி** – எனும் இறை போதனை அவரை உலகெங்கும் சுற்றித் திரிந்து உரையாற்ற வைத்தது. அப்படி உரையாற்றிய காலங்களில் பல்வேறு சுவையான நிகழ்வுகள் நடந்ததுண்டு. அதிர்ச்சிகரமான விஷயங்களும் நடந்ததுண்டு.

சிலி – எனுமிடத்தில் நடந்த ஒரு நிகழ்வு நிக்கின் வாழ்க்கையில் மறக்கவே முடியாத அனுபவமாகிப் போனது! அதை இப்போது நினைத்தாலும் அவருடைய கண்களில் அதிர்ச்சி மின்னுகிறது!

செப்டம்பர் 2011 ல் நடந்தது அந்த நிகழ்வு.

அது நிக்கின் இரண்டாவது சிலி பயணம். சிலி தென் அமெரிக்காவிலுள்ள ஒரு நகரம்.




சிலி நகரின் அரசு தொலைக்காட்சியான டி.வி.என் சேனலில் ஒரு மிகப் புகழ்பெற்ற ஒரு புரோக்ராம் உண்டு. Buenos Dias a Todos எனும் பெயரில் அழைக்கப்படும் அந்த நிகழ்ச்சியின் பெயரைத் தமிழில் சொன்னால் **"எல்லோருக்கும் காலை வணக்கம்"** என்று அர்த்தம் வரும்.

அந்த நிகழ்ச்சியை நடத்துபவர்கள் இரண்டு பேர். **ஃபெலிப் மற்றும் கரோலினா.** இருவரும் மிகப் பிரபலமான ஊடகவியலார்கள். அந்தத் தொலைக்காட்சியிலுள்ள ஒரு உரையாடல் நிகழ்ச்சிக்காகத் தான் நிக் சிலி சென்றிருந்தார்.

அது ஒரு 20 நிமிட நேரம் நீளக் கூடிய ஒரு நிகழ்ச்சி. ஆனால் நிக்கின் அனுபவங்களைப் பேசுகையில் அது 40 நிமிடமாக நீட்டிக்கப்பட்டது. அந்தத் தொலைக்காட்சி வரலாற்றிலேயே ஒரு சிறப்பு விருந்தினர் 40 நிமிடங்கள் பேசியது இது தான் முதல் முறை. நிக் தன்னுடைய உரையாடலில் மிகவும் திருப்தியாக உணர்ந்தார்.

அவருடைய பேச்சு முக்கியமாக எப்படி இறை நம்பிக்கை அவரை வழிநடத்தியது, எப்படி அவர் தனது நம்பிக்கைக்குச் செயல்வடிவம் கொடுத்தார் என்பதன் அடிப்படையில் அமைந்தது. அவருடைய வாழ்க்கை அனுபவங்களும், சவால்களும் அவருடைய தன்னம்பிக்கை சிந்தனைகளும் நிகழ்ச்சியை அர்த்தமுள்ளதாக்கின.

ஃபெலிப் அந்த நிகழ்ச்சியை ரொம்ப ஆர்வமாய் செய்தார். நிகழ்ச்சியில் மிகவும் அர்த்தமுள்ள கேள்விகளைக் கேட்டு நிகழ்ச்சியை வலிமையாக்கினார். அவருடைய ஆன்மீக சிந்தனைகளும், மனித நேய சிந்தனைகளும் நிக்கை வியக்க வைத்தன. இதுவரை ஏதோ ஒரு தொலைக்காட்சிப் பிரபலம் எனும் நிலையில் இருந்த ஃபெலிப் அப்போதுதான் தன்னை ஒரு ஆன்மீக சிந்தனை உடையவராகவும் வெளிப்படுத்திக் கொண்டார்.

“நான் கடவுளை எப்படிக் கண்டு கொள்வது?”

“கடவுளைக் கண்டுகொள்ள காணாமலேயே விசுவசிக்கும் மனம் வேண்டும். சரியான பதில்களையல்ல, சரியான கேள்விகளை நாம் கொண்டிருக்க வேண்டும். எனது வாழ்க்கை இந்த பூமியில் சில ஆண்டுகள் முடிவதோடு முடிந்து போவதல்ல. விண்ணகத்தில் நிலை வாழ்வு

வேண்டுமென்றே நான் செயல்படுகிறேன். எனக்கு அற்புதங்களில் நம்பிக்கை உண்டு. அதனால் தான் வீட்டில் ஒரு ஜோடி செருப்புகளை வாங்கி வைத்திருக்கிறேன். ஆனாலும் ஒரு மனிதனை ஆன்மீக வாழ்வுக்குள் அழைத்து வருவது ஒரு அற்புதமே”

நிக் பேசிக்கொண்டே போக ஃபெலிப்பின் கண்கள் கலங்கின. கண்ணீர் வழிந்தது. கரோலினும் நிக்கின் பேச்சை மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டே இருந்தாள்.

**“மகிழ்ச்சிக்கு எல்லை என்பதில்லை. அது உள்ளுக்குள் உருவாகும் விஷயம். எனக்கு என்ன நேர்ந்தாலும் நாம் மகிழ்ச்சியாய் இருக்க முடியும். சோதனைகள், துயரங்கள் நிச்சயம் வரும். ஆனாலும் மகிழ்ச்சி போய்விடாது. அது ஆழமான நம்பிக்கையில் வேர் கொண்டிருக்க வேண்டும்.”**

நிக்கின் பேச்சு பலரையும் தொட்டது. கையும் காலும் இல்லாத ஒரு மனிதன் ஆனந்தத்தையும், நன்றியுணர்வையும் கொண்டிருக்கிறான் என்றால் நாமும் நிச்சயம் நன்றிமறந்தவர்கள் ஆகக் கூடாது என பலரும் சிந்தித்தனர்.

நிகழ்ச்சியின் இறுதி கட்டத்தில் நிக்கின் இசை வீடியோ ஆல்பம் திரையிடப்பட, ஃபெலிப், கரோலின் இருவருக்கும் நீண்ட நேரம் நன்றி கூறி நெகிழ்வுடன் விடை பெற்றார் நிக்.

அந்த பொழுது இனிதே கடந்தது!

நிகழ்ச்சி முடிந்து ஹோட்டல் திரும்பினார் நிக். அன்று மாலை ஹோட்டல் தொலைபேசி அழைத்தது!

“நிக்.. ஒரு ஆக்ஸிடன்ட்... டிவியைப் பாருங்க”

நிக் தொலைக்காட்சியை இயக்கினார்.

அதில் ஃப்ளாஷ் நியூஸ்!

ஃபெலிப் ஒரு ஓரத்தில் புகைப்படத்தில் புன்னகைக்க, பெரும் விமான விபத்து என செய்தி கீழே அலறியது!

நிக் அதிர்ந்தார்! அவரால் நம்பவே முடியவில்லை. மீண்டும் மீண்டும் வாசித்தார்.

ஃபெலிப்பும் அவருடன் ஐந்து தொலைக்காட்சி நிகழ்ச்சியாளர்களும் ஒரு தீவுக்கு விமானத்தில் சென்றிருக்கிறார்கள். சுனாமி பாதித்த இடங்களைக் குறித்த ஒரு நிகழ்ச்சிக்காக, அப்போது தான் இந்த விபத்து நிகழ்ந்திருக்கிறது!

நிக் மயக்கம் வராத குறையானார். ஃபெலிப்பை சில மணி நேரங்கள் மட்டுமே அவர் பார்த்திருந்தார். ஆனாலும் உள்ளுக்குள் ஒரு மிகப்பெரிய அபிப்பிராயமும், அன்பும் உருவாகியிருந்தது. நெருங்கிய நண்பர் ஒருவரை இழந்தது போல அவர் துடித்துப் போனார்!

அவர் கலந்து கொண்ட நிகழ்ச்சியை "ஃபெலிப்பின் கடைசி நிகழ்ச்சி" என்று ஒளிபரப்பினார்கள்.

ஃபெலிப் எனும் மனிதரை அறியவும், அவரோடு உரையாடவும், ஆன்மீகப் பகிர்வுகளை அளிக்கவும் நிக்கிற்குக் கடவுள் கொடுத்த ஒரு வாய்ப்பாகவே அது நிக்கின் மனதில் இருந்தது!

சுவர்க்கம் உண்மை, கடவுள் உண்மை, கடவுளோடு ஃபெலிப் நடப்பது உண்மை என அவர் தனது இரங்கல் செய்தியை வெளியிட்டார்.

அந்த இனிமையும், அதிர்ச்சியும் கலந்த நிகழ்வு நிக்கின் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நிகழ்வாக அமைந்துவிட்டது!

## ௯




கொஞ்சம் பின்னோக்கிப் போவோம்!

2007! அது தான் நிக் வாயிச்சஸ் ஆஸ்திரேலியாவை விட்டு அமெரிக்காவின் கலிபோர்னியாவில் குடியேறிய ஆண்டு! அதுவரை அவருடைய வாழ்க்கை ஆஸ்திரேலியாவில் தான் இருந்தது!

சின்ன வயதில் பள்ளிக்கூடத்தில் சேர்வதற்கே கஷ்டப்பட்ட நிக் படித்துக் கொண்டே இருந்தார். தனது 21வது வயதில்

ஆஸ்திரேலிவாயிலுள்ள குயீன்ஸ்லேன்டில் அமைந்துள்ள கிரிஃப்த் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். அதுவும் இரட்டைப் பட்டம். அக்கவுன்டன்ஸி மற்றும் ஃபைனான்ஸ் பிளானிங் எனும் இரண்டு பிரிவுகளில் பட்டம்!

2005ம் ஆண்டு அவரை ஆஸ்திரேலிய அரசு கௌரவப்படுத்தியது! "யங் ஆஸ்திரேலியன் ஆஃப் த இயர்" – ஆண்டின் சிறந்த ஆஸ்திரேலிய இளைஞர் – எனும் பட்டத்தை அரசு அவருக்குச் சூட்டியது!

1960ல் ஆரம்பித்து வழங்கப்பட்டு வரும் இந்த விருது ஆஸ்திரேலியாவின் உயர்ந்த விருதுகளில் ஒன்று. ஆஸ்திரேலியாவைக் கவுரவப்படுத்தும் ஆஸ்திரேலிய இளைஞர்களுக்கான விருது அது!

19வது வயதில் நிக் பெரிய அளவில் உரையாற்றவும், பிறரோடு தனது வாழ்க்கை அனுபவங்களை மேடைகளில் பெரிய அளவில் எடுத்துச் செல்லவும் தொடங்கினார்.

கலிஃபோர்னியாவில் **"லைஃப் வித்தவுட் லிம்ப்"** எனும் லாபநோக்கமில்லா நிறுவனத்தை அவர் தொடங்கினார். அதன் தலைவராகவும், நிறுவனராகவும் நிக் இருக்கிறார்.

LIFE WITHOUT LIMBS

P.O. Box 2430 Agoura Hills, CA 91376

இந்த நிறுவனத்தின் நோக்கம் ஒன்றே ஒன்று தான்.

நம்பிக்கையையும், வாழ்வின் மீதான பிடிப்பையும் ஒவ்வொருவருக்கும் வழங்குவது. உலக மக்கள் மீதான அன்பைப் பகிர்ந்து கொள்வது. கைகள் இல்லாதவருக்குக் கதவுகள் விரைவில் திறக்கும் என்று சொல்வது போல, நிக்கின் வாழ்க்கையில் கதவுகள் திறந்து கொண்டன. அவை கடவுளால் திறந்து வைக்கப்பட்டன என்பது நிக்கின் அசைக்க முடியாத நம்பிக்கை!

43 நாடுகளுக்கும் மேலாக பயணித்து பல இலட்சம் மக்களைச் சந்தித்து அவர்களுக்கு வாழ்க்கையை எதிர்கொள்ளும் வலிமையையும், இறை சிந்தனைகளையும் வழங்கியிருக்கிறார் நிக். அந்த எண்ணிக்கைகள் வளர்ந்து கொண்டே செல்கின்றன. இப்போது இருபத்து ஒன்பது வயதாகும் நிக் இன்னும் பல நீண்ட நெடிய ஆண்டுகள் பணியாற்றுவார் எனும் உறுதி அவர் கண்களில் தெரிகிறது!


**லைஃப் வித்தவுட் லிம்ப்** எனும் நிறுவனத்தின் மூலமாக அவருடைய வாழ்க்கை அனுபவங்களைப் புத்தகமாகவும் எழுதி வெளியிடுகிறார். **ஆட்டிடியூட் ஈஸ் ஆல்டிடியூட்** எனும் அவருடைய நிறுவனம் வழியாக டிவிடிக்களயும் வெளியிடுகிறார்.

லைஃப் வித்தவுட் லிமிட்ஸ் (எல்லைகளில்லா வாழ்க்கை) எனும் அவருடைய நூல் உலக அளவில் அதிகம் விற்பனையாகும் புத்தகங்களின் பட்டியலில் இடம்பெற்று பலரையும் சந்தித்தது. அதில் அவர் தனது இளமைக்கால அனுபவங்கள், இறை அனுபவங்கள் போன்றவற்றைக் குறிப்பிட்டிருந்தார்.

அன்ஸ்டாப்பபில் (நிறுத்தமுடியாதது) எனும் சமீபத்திய புத்தகம் ஒன்றில், செயலாற்றும் நம்பிக்கை குறித்து எழுதியிருந்தார். அதுவும் அவருடைய வாழ்க்கை அனுபவங்கள். அவர் சந்தித்த உயர்வு தாழ்வுகள் போன்ற பல விஷயங்களைக் குறிப்பிட்டிருந்தார்.

நிக் : எ பயோகிராஃபி ஆஃப் எ டிடர்மின்ட் மேன் (நிக் : வாழ்க்கை வரலாறு) எனும் நூலில் அவருடைய வாழ்க்கை அனுபவங்கள் பகிரப்பட்டுள்ளன. பல நாடுகளிலும் இவர் நடத்தும் ஊக்கமூட்டும் உரைகளும் டிவிடி வடிவில் விற்பனை செய்யப்படுகின்றன!

இவற்றைத் தவிர இசை ஆல்பம் இவருடைய நிறுவனத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. இப்படி எழுத்து, பேச்சு, இசை, பயணம் எனும் பல விதங்களில் இவருடைய லைஃப் வித்தவுட் லிம்ப் எனும் நிறுவனம் தினம் தோறும் பல்லாயிரம் மக்களைச் சந்தித்துக் கொண்டே இருக்கிறது என்பது வியப்பூட்டும் சமாச்சாரமாகும்!




**த பட்டர்ஃப்ளை சர்க்கஸ்** – எனும் குறும்படம் ஒன்றில் நிக் நடித்திருக்கிறார். அது 2009ம் ஆண்டு **டூர்போஸ்ட் ஃபிலிம் விருது** பெற்றது! சிறந்த குறும்படத்துக்கான விருதை படமும், சிறந்த நடிகருக்கான விருதை நிக்கும் பெற்றுக் கொண்டார்கள்! 2010ல் ஹாலிவுட்டிலும் இந்த குறும்படம் விருது பெற்றது!

**கைகளும் கால்களும் இல்லாத ஒரு மனிதனைக் கடவுள் அவருடைய கைகளாகவும் கால்களாகவும் பயன்படுத்துவாரெனில், கடவுள் எதிர்பார்ப்பது நமது விருப்பமுடைய மனதை மட்டும் தான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்** – என்கிறார் நிக்!

இப்படி இனிமையான பயணமாய் இருந்த நிக்கை மன அழுத்தத்திலும், சோகத்திலும், அச்சத்திலும் தள்ளியது ஒரு விஷயம்!

அது பொருளாதார வீழ்ச்சி!

தன்னம்பிக்கையும், வெற்றிகளும், இறை நம்பிக்கையும் நிறைந்து உதடுகளில் புன்னகையும், உள்ளம் தனில் மகிழ்ச்சியுமாய் உலவி வந்த நிக்கை புரட்டிப் போட்டது பொருளாதார வீழ்ச்சி!

வருடத்துக்கு 270 உரைகள்!

புத்தக விற்பனை

டிவிடி விற்பனை

நிறுவனத்தில் பணியாற்றும் மக்களின் தேவைகள்! என எல்லாமே சுமூகமாய்ப் போய்க்கொண்டிருந்தபோது தான் பொருளாதார வீழ்ச்சி வந்து புரட்டிப் போட்டது.

எப்போதுமே கீழே பார்த்து நடந்து கொண்டிருக்கும் மனிதர்கள் மேலே பார்க்க வேண்டும் என்பதற்கான கடவுளின் ஏற்பாடு இந்த வீழ்ச்சிகள் என்றொரு பழைய பாடல் உண்டு!

எல்லாம் சரியாய் இருக்கும். உடல் ஆரோக்கியமாய் இருக்கும். திடீரென ஏதோ ஒரு சின்ன காய்ச்சல் என ஆஸ்பத்திரி போனால் டாக்டர் திடீரென

அதிர்ச்சியாய் ஒரு நோயின் பெயரைச் சொல்லுவார். ஒரு வாரம் பெட்டில் படுக்க வைப்பார். அவ்வளவு தான். அத்தனை நாள் முக்கியமாய் இருந்த விஷயங்களெல்லாம் முக்கியமில்லாமல் போய்விடும். அதுவரை பணத்தையோ, புகழையோ தேடி ஓடும் வேட்கை நடந்திருக்கும். படுக்கும் போது வேறு ஏதும் முக்கியத்தில் வராது! மேல் நோக்கிக் கடவுளைப் பார்க்கும் வாய்ப்பு மட்டுமே வாய்க்கும்!

நிக்கின் வாழ்க்கையையும் அப்படித் தான் புரட்டிப் போட்டது அந்த வீழ்ச்சி.

மிகப்பெரிய சிக்கல் இல்லை. கொஞ்சம் நஷ்டம். வழக்கமாய் வந்து கொண்டிருந்த ஸ்மூத் வழியில் பணம் வரவில்லை. தண்ணீர் நாலு நாள் வராவிட்டாலே பச்சையம் இழந்து போகும் பயிர்களைப் போல நிறுவனம் கொஞ்சம் ஆடிப்போய் விட்டது. இத்தனைக்கும் பெரிய நஷ்டம் ஏதும் இல்லை. நிறுவனத்தின் கணக்கு ஒரு இருபத்து ஐந்து இலட்சம் ரூபாய்கள் நஷ்டம் என்றது!

நிக்கின் மனதுக்குள் பழைய காலத்தின் சோகமும், பயமும், மன அழுத்தமும் வந்து சேர்ந்து விட்டது. எத்தனை சமாதானம் சொன்னாலும் மனம் கேட்க மறுத்தது. உலகெங்கும் சுற்றி சுமார் ஐம்பது இலட்சம் பேருக்கு தன்னம்பிக்கையை விதைத்து வந்தவருக்கே தன்னம்பிக்கை சட்டென இல்லாமல் போய்விட்டது!

இந்த உண்மையை வெளியே சொன்னால் தனது “**தன்னம்பிக்கை**” இமேஜ் என்னவாகும் என்பதையெல்லாம் பற்றி நிக் கவலைப்படவில்லை. அதை வெளிப்படையாகவே தனது நூலில் எழுதுகிறார். பலவீனங்களையும்,

பலங்களையும் அப்படியே ஏற்றுக் கொள்வதும் அதை வெளிப்படையாய் அறிவிப்பதும் தன்னம்பிக்கையின் மிகப்பெரிய உயரங்கள்!

நிக்கின் அங்கிள் வந்து தோள் தொட்டார். “இதெல்லாம் ஒரு சின்ன விஷயம். எவ்வளவு பணம் வேணும்ன்னு சொல்லு தரேன். நீயே உடைஞ்சு போயிட்டா நிறுவனம் சோர்ந்து போயிடும்” என்றார். அந்த லைஃப் வித்தவுட் லிம்ப் நிறுவனத்தின் போர்ட் ஆஃப் டைரக்டர்களில் அவர் முதன்மையானவர்!

நிக் மனதை நிலைப்படுத்த ரொம்பவே தடுமாறினார் வாரங்கள் அப்படியே ஓடின. தனது முதல் புத்தகம் “பெஸ்ட் செல்லர்” என உலகெங்கும் பரபரப்பாய் விற்றுத் தீர்ந்தது. அடுத்து ஒரு இசை ஆல்பம் வெளியிடும் முயற்சியில் இருந்தார். எல்லாமே படுவேகமாய்ப் போய்க்கொண்டிருந்த வண்டி சடர்ன் பிரேக் போட்டது போல நின்று போய்விட்டது!

ஏன்? ஏன்? ஏன்?

நிக்கின் மனதில் கேள்விகள் கரை புரண்டு ஓடின. ஆனால் எதுவும் பிடிபடவில்லை!

ஒருவேளை வெற்றிகளினால் என்னுடைய தாழ்மையான மனது கறைபட்டுவிட்டதா? கர்வம் வந்து விட்டதா? நான் இறைவனின் பாதையை விட்டு விலகிச் சென்று விட்டேனா? நான் தவறான பாதையில் பயணிக்கிறேனா? என அவருடைய மனம் ஆன்மீகத் தேடலையும், சுய பரிசோதனையையும் செய்து கொண்டிருந்தது!.

பயணம் செய்து கொண்டே இருக்கும் போது வருகின்ற திடீர் தடை தடுமாற வைத்துவிடும். சிக்கல்கள் இல்லாமல் வாழ்க்கை ஓடிக்கொண்டிருப்பதில்லை. காரணம் வாழ்க்கை குழாயில் ஓடும்

கார்ப்பரேஷன் தண்ணீர் அல்ல. அது காடுகளில் பாயும் ஆற்றுத் தண்ணீர் போன்றது. அது தடைகளைச் சந்திக்கும், வீழ்ச்சிகளைச் சந்திக்கும், வேகத்தைச் சந்திக்கும். உருமாற்றங்கள் பெறும், கடைசியில் இலட்சியம் வெல்லும்!

அந்தப் பயணத்தின் அனுபவங்களிடையே விழுந்து அழிந்து போய்விடக் கூடாது என்பதே முக்கியம். எத்தனையோ இலட்சம் பேருக்கு தன்னம்பிக்கை அளித்தாலும், தனக்கென ஒரு சிக்கல் சட்டென முளைக்கும் போது தடுமாறிப் போய்விட்டார் நிக்.

ஒரு நாள், ஒருவாரமல்ல.. ஒரு மாதத்திற்கும் மேலாக அவரை மன உளைச்சல் ஆட்கொண்டது. பெரும்பாலும் அவருடைய கேள்விகள் ஆன்மீகத்தைச் சுற்றியே வந்தன. “தான் தவறான பாதையில் செல்கிறோமோ?” எனும் கேள்வியே அவரை அதிகம் அலட்டியது!

அன்று இரவு ஒரு உரையாற்ற வேண்டியிருந்தது! இரண்டு மணிநேரம் அழுகையுடன் பிரார்த்தித்த பிறகே அவரால் அந்த நிகழ்ச்சிக்குச் செல்ல முடிந்தது.

“நிக்.. உன்னோட பேச்சிலேயே சிறப்பான பேச்சு இதுதான்” கூட இருந்தவர்கள் தோள்தட்டி உற்சாகப்படுத்தினார்கள்.

நிக்கின் மருத்துவர் நிக்கிடம் சொன்னார். “உன்னோட உடலைப் பார்த்துக்கோ நிக். நீ ஆரோக்கியமா இல்லேன்னா எதுவுமே ஆரோக்கியமா இருக்காது” அந்த வார்த்தைகள் நிக்கின் உள்ளத்தை சட்டெனத் தாக்கின! நீண்டநேரம் அவருக்குள்ளேயே குழப்பங்கள்.

குழப்பங்களோடு அமைதியான தியானத்தில் இருந்தவருடைய மனதில் சிந்தனை தெளிந்தது.

“கடவுள் என்னைத் நேசிப்பது நான் ஆண்டுக்கு 270 நாட்கள் பேசுவேன் என்பதால் அல்ல. நான் புக் எழுதுகிறேன் என்பதால் அல்ல. என்னுடைய நிறுவனம் லாபத்தில் ஓடுகிறது என்பதால் அல்ல. அவர் நேசிப்பது, அவர் எனது கடவுளாய் இருப்பதால். நான் அவருடைய பிள்ளையாய் இருப்பதால்”

அந்த சிந்தனை நிக்கின் சோர்வுகளை மீண்டும் கழுவிக் களைந்தன. ஒரு இருட்டுப் பாதையில் நடந்தவருக்கு முன்னால் மின்மினி வெளிச்சப் புள்ளியாய் தோன்றிய ஒளி மெல்ல மெல்ல விரிவடைந்தது!

“நீ மேலே பார்த்தாயானால் உன்னால் எழும்ப முடியும்”

நிக் **அடிக்கடி தனது உரையில் பயன்படுத்தும் தன்னம்பிக்கை வார்த்தைகள். கடைசியில் அவையே அவரை எழ வைத்தன!** சிலவேளைகளில் நமது தன்னம்பிக்கையை தட்டி எழுப்ப நமது வாழ்க்கையே உதாரணமாய் இருந்து விடுகிறது என்பதை நிக் உணர்ந்தார்.

**வெற்றிகள் கோப்பைகளைத் தரும். தோல்விகள் நமது பலவீனங்களை நமக்கு அடையாளம் காட்டும். வெற்றிகளையும் தோல்விகளையும் சந்திக்கவும், அதனூடாகப் பயணிக்கவும் தெரிந்தவனே உண்மையான வெற்றியாளன்.** நிக் அந்த தோல்வியின் காலத்தை மறக்க விரும்பவில்லை. காரணம் அந்த நாட்கள் அவருக்கு நிறைய பாடங்களைச் சொல்லிக் கொடுத்தது. வாழ்க்கையில் எதை முதன்மைப்படுத்தவேண்டும், எது முக்கியமான பணி, எப்படிச் செயல்பட வேண்டும், சறுக்கல்களில் எப்படி

நடந்து கொள்ளவேண்டும் எனும் ஏகப்பட்ட பாடத்தை அவருக்கு அந்தக் காலகட்டம் தான் கற்றுக் கொடுத்தது!.

வாழ்க்கையின் சவால்களையும், துயரங்களையும் வெற்றி கொள்ள வேண்டுமென்றால் ஒரே வழி நம்பிக்கையோடு தொடர்ந்து நடப்பது. ஒரு நேரம் ஒரு சுவடு எடுத்து வைப்பது. பாதங்களுக்குக் கீழே பரவும் வெளிச்சத்தைப் பின்பற்றுவது! ஒரு நேரம் ஒரு சுவடு!

ஒரு மிகப்பெரிய யானையைச் சாப்பிடும் வழி தெரியுமா?

“ஒரு நேரம் ஒரு துண்டு”!

# 10



காதலுக்குக் கண் உண்டா?

இல்லை, காதலுக்குக் கண் மட்டும் தான் உண்டா?

நிக் வாயிச்சஸின் இதயத்துக்குள் காதல் பறவை ஒன்று சட்டெனச் சிறகடித்த கதை சுவாரஸ்யமானது! ஒரு அட்டகாசமான ரொமான்டிக் சினிமாவுக்குரிய அத்தனை இலக்கணங்களும் அந்தக் கதையில் உண்டு.

அமெரிக்காவின் டாலாஸ் மாநிலத்தில் டெக்ஸான் எனுமிடத்தில் “பெல் டவர்” ல் நிக் உரையாற்றிக் கொண்டிருந்தார். ஏப்ரல் மாதம் 2010ம் ஆண்டு. பேசிக்கொண்டே இருந்தவருடைய கண்களில் திடீரென ஒரு மின்னல்!

இப்படி ஒரு வசீகர அழகையோ, அழகின் வசீகரத்தையோ கண்டதில்லை என அவருக்குள் சட்டென ஒரு சிலிர்ப்பு. அவருடைய பேச்சே கொஞ்சம் திகைத்துப் போய் தான் தொடர்ந்தது!

முதல் பார்வையில் காதல் வராது என்று சொல்லும் தத்துவத்துக்கு உரியவர்கள் மன்னிப்பார்களாக! நிக் முதல் பார்வையிலேயே வசப்பட்டார். காதல் வயப்பட்டார்! அந்தக் கண்களை விட்டுத் தனது கண்களை எடுக்க முடியாமல் சிரமப்பட்டார். தூண்டில் போடும் கண்களா? இல்லை அவை வலையை வீசும் மீன்களா? அல்லது தூண்டிலும் வலையும் மீனும் என சர்வமும் அடங்கிக் கிடக்கும் ஆழ்கடலா? அவருக்குள் காதல் உணர்வுகள் கொழுந்து விட்டு எரியத் துவங்கின.

**கானி மயாகரா** (Kanae Miyahara) எனும் இளம் பெண் தான் அந்த வசீகரப் பார்வைக்குச் சொந்தக்காரி. அவள் தனது அக்கா யோஷீயுடன் அந்த மீட்டிங்கிற்கு வந்திருந்தாள். பல இலட்சம் பேர்களுக்கு மத்தியில் நிக் பேசியிருக்கிறார். பல இலட்சம் பெண்களுடன் உரையாடியிருக்கிறார் ஆனால் யாரும் அவருடைய மனசுக்குள் கூடாரம் போட்டுக் குடியேறியதில்லை. கானி தான் முதல் பெண்!

பேச்சு நடந்து கொண்டிருந்தது. பார்வைகள் சந்தித்துக் கொண்டே இருந்தன. பேச்சு முடிந்தபின் மக்கள் கலையத் துவங்கினார்கள். சிலர் நிக்கின் முன்னால் வந்து அறிமுகம் செய்து கொள்ளவும், பேசவும் தொடங்கினார்கள். நிக்கின் மனமோ கானியின் கண்களுக்குள் தான் விழுந்து கிடந்தது. அவள் போயிருப்பாளா? மறுபடியும் ஒரு முறை பார்க்க முடியுமா என மனதுக்குள் தவிப்பு.

“நிப் எப்படி இருக்கீங்க” அருகில் வந்து குரல் கொடுத்தார் டாமி. நிக்கின் நெருங்கிய தோழி.

நல்லாயிருக்கேன் என்று சொல்லிக் கொண்டே திரும்பியவருக்குள் இனிய அதிர்ச்சி. அருகிலேயே கானியும் அவளுடைய அக்கா யோஷியும்! இருவருமே அசரடிக்கும் அழகிகள். மெக்ஸிகன் அம்மாவுக்கும், ஜப்பானிய அப்பாவுக்கும் பிறந்ததாலோ என்னவோ அழகை வழித்து வைத்திருந்தார்கள். நிக் வழியத் துவங்கினார்.

அப்போது தான் கானியை அருகில் முழுமையாய்ப் பார்க்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. கண்ணுக்குள் விழுந்த காதல் விதை இதயம் முழுதும் சட்டென அசுர வளர்ச்சியடைந்தது. கொஞ்ச நேரம் தான் அந்தச் சந்திப்பு நீடித்தது.

விடை பெறும் கணத்தில் நிக், கானியிடம் தனது தைரியத்தையெல்லாம் அழைத்துக் கொண்டு கேட்டார்.

“என்னோட மெயில் ஐடி வாங்கிக்கோங்க, நாம தொடர்பில இருப்போமே”

அவளோ சிரித்தாள். “பரவாயில்லை. நான் டாமி கிட்டே வாங்கிக்கறேன்”

விடைபெறும் கணங்கள் வலிமிகுந்தவை. அதுவும் சொல்லாத வார்த்தைகளையும், மொழிபெயர்க்காத மௌனங்களையும் சுமந்து கொண்டு பயணிப்பதோ ரொம்பவே கஷ்டமான விஷயம். ஆனால் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் விடைபெறுதல்கள் நடந்து கொண்டு தானே இருக்கின்றன.

நிக்கின் மன ஓட்டம் டாமிக்குப் புரிந்தது.

விடைபெற்று சில மணி நேரங்களுக்குப் பிறகு ஒரு எஸ்.எம்.எஸ் வந்தது டாமியிடமிருந்து.

“நீ என்ன நினைச்சுட்டு இருந்தே”

நிக்கிற்குத் திடுக்கிட்டது.

ஆனாலும் இனிமேலும் பொத்தி வைக்க வேண்டாம் மனசு திறந்து விடுவோம் என அவர் ஒரு குறுஞ்செய்தி திருப்பி அனுப்பினார்.

“இவளைப் போல அழகியை கடவுள் படைப்பில் நான் கண்டதேயில்லை. எனக்கு மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது”

ஒரு வழியாக செய்தியை அனுப்பியாகிவிட்டது. கானியின் கண்களிலும் காதல் மிதந்ததா? பார்வைகள் பரிமாறிக்கொண்டபோது அங்கிருந்து பாய்ந்த மின்சாரம் எனக்குள் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அவளுக்குள் ஏதேனும் தோன்றியிருக்குமா? அவளுக்குள் காதல் இருந்திருக்குமா?

எப்படி இருந்தாலும் அது தெரிந்து விடத்தான் போகிறது. நமது மனதைத் தான் டாமியிடம் சொல்லிவிட்டோமே! என மனதுக்குள் சொல்லிக் கொண்டார் நிக்.

இது நடந்தது ஒரு ஞாயிற்றுக் கிழமை.

அடுத்த நாள் கானியிடமிருந்து மின்னஞ்சல் நிச்சயம் வரும் என நிக் நம்பினார்.

வரவில்லை!

அதற்கடுத்த நாளாவது வரும் என மனதில் நம்பிக்கை வளர்த்தார்.

வரவில்லை.

ஒவ்வொரு பத்து நிமிடத்துக்கு ஒரு முறையும் விரல்களும், விழிகளும் அனிச்சைச் செயலாய் மின்னஞ்சலைச் சோதித்துக் கொண்டே இருந்தன!

வரவில்லை.

நாட்கள் கடந்தன.

வாரங்கள் கடந்தன

மாதங்களும் கடந்தன.

மூன்று மாதங்கள் கடந்தன.

நிக்கின் மனதில் வெறுமை வந்து நிறைந்தது. காதலின் உணர்வுகளும், காத்திருப்பின் படபடப்பும் அவருக்குள் பின்னிவிட்டிருந்தது. கானிக்குள் காதல் இருக்கிறது என மனதுக்குள் போட்ட கணக்கு தப்பாகிவிட்டதில் அவருக்குள் ஏக்கம் வந்து நிரம்பிவிட்டது.

ஜூலை மாதம்

மறுபடியும் டாலாஸில் ஒரு உரையாற்ற வேண்டி இருந்தது.

உரையாற்றுவதை விட அதிகமாய் நிக்கின் மனதில் கானியைச் சந்திக்க முடியுமா எனும் எதிர்பார்ப்பு தான் வளர்ந்தது.

தனக்கு ஒரு மின்னஞ்சல் கூட அனுப்பாத பெண்ணைப் பற்றி ஏன் நினைத்துத் தொலைக்கிறோம் என மனம் ஒரு வினாடி நினைக்கும். மறுவினாடி அவளுடைய கண்கள் அவருக்குள் வந்து சிரிக்கும்.

“நான் விமானத்தில் ஏறிவிட்டேன். டாலாஸ் வருகிறேன். எல்லாரும் அங்கே இருக்காங்க தானே?” நிக் எஸ்.எம்.எஸ் அனுப்பினார். அவர் வருவதைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருந்தார்.

“நானும், யோஷியும் சமைச்சிட்டு இருக்கோம். லசானியா!” டாமி பதில் அனுப்பினாள்.

“கானி.. என்ன பண்றாங்க?”

கானி வந்திருக்கிறாளா? அவளைச் சந்திக்க முடியுமா? எனும் கேள்விகள் தான் அவருக்குள்.

டாமி பதில் அனுப்பினாள்.

“அவளும் அவளுடைய காதலனும் பைக்கில் ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள்”

செய்தியைப் படித்த நிக் நிலைகுலைந்தார்.

அது ஒருவேளை ஜோக்காக இருக்குமோ என நினைத்தார். ஆனால் உண்மையிலேயே கானி அவளுடைய காதலனுடன் பைக்கில் ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தாள்!

★

**தோல்விகள் நமது தன்னம்பிக்கையை உடைக்கும் வேலையைச் செய்து விடுகின்றன. நிராகரிப்புகள் சத்தமில்லாமல் நமது மன வலிமையை வலுவிழக்கச் செய்கின்றன. அதையும் தாண்டி, அதையும் மீறி நாம் தன்னம்பிக்கையோடு இருப்பதில் தான் நமது வலிமை வெளிப்படும்.**

நிக்கின் மனதில் அந்த வினாடி எழுந்த உணர்ச்சிகளின் கொந்தளிப்பை எப்படிச் சொல்வதென தெரியவில்லை. பிடிமானம் இல்லாத குழியில் விழுந்து கொண்டே இருப்பது போல ஒரு உணர்வு அவருக்கு.

எப்படி இந்தச் சூழலைச் சமாளிக்கப் போகிறேன். யாரையும் காயப்படுத்தாமல், இயல்பாய்ப் புன்னகைத்து, இயல்பாய் இந்தச் சூழலைச் சமாளிக்க முடியுமா?

விமானப் பயணம் முடிந்தது.

டாமியின் வீட்டை அடைந்தார் நிக்.

டாமியும், யோஷியும் சமையலறையில் லசானியா செய்வதில் பிஸியாக இருந்தார்கள். கானியைக் காணோம்.

கொஞ்ச நேரம் கடந்தபின் நிக் மீண்டும் கேட்டார்.

“ஆ... கானி நெஜமாவா இங்கே இல்லையா?”

டாமி அவரை உற்றுப் பார்த்தாள்.

“யா.. சொன்னேனே.. அவ காதலனோட பைக்ல ஊர் சுத்தறா?”

நிக் முகத்தில் எழுந்த சோகத்தைக் கண்ட டாமியின் முகத்தில் டன் டன்னாய் குழப்ப ரேகைகள்.

அவள் நிக்கின் அருகே வந்து காது கடித்தாள்.

“ஏய்.. நீ யோஷியைத் தானே லவ் பண்றே, ஏன் கானி பற்றிக் கேட்டுட்டே இருக்கே”!

நிக்கால் நம்ப முடியவில்லை.

“நோ...” என அலற வேண்டும் போல் இருந்தது. யோஷி மூத்தவள். ஏறக்குறைய எனது வயது. எனவே எனக்கு யோஷியைப் பிடித்திருக்கிறது என எப்படியோ டாமி தப்புக் கணக்குப் போட்டிருக்கிறாள். நிக்கின் மனதில் சட்டென குழப்ப ரேகைகள் தெளிய ஆரம்பித்தன. ஆனால் கவலை ரேகைகள் அதிகரித்தன.

அதே நேரத்தில் கானி அவளது காதலனுடன் அந்த வீட்டுக்குள் நுழைந்தாள்.

நிக் பிரம்ம பிரயர்த்தனம் செய்தார் சின்னதாய் ஒரு புன்னகை சிந்த. அதில் எத்தனை சதவீதம் யதார்த்தம் இருந்ததென்பது கடவுளுக்கே வெளிச்சம்.

அமைதியே பெரும்பாலான நேரத்தை ஆக்கிரமித்தது.

சாப்பிட்டார்கள்.

வரவேற்பறையில் அமர்ந்துகொண்டிருந்தபோது நிக், கானியிடம் கேட்டார்.

“எவ்ளோ நாளா ல...லவ் பண்றீங்க?”

“ஒரு வருஷமா”

“ஒரு வருஷமாவா?”

“ஆமா”

திடீரென அவளுடைய காதல் முதிர்ச்சியடைந்த ஒரு நிலையில் இருப்பது போலவும். அவளைப் பற்றி மனதில் நினைப்பது கூட பாவம் என்பது போலவும் நிக்கின் மனதுக்குள் சிந்தனைகள் எழ ஆரம்பித்தன.

அங்கே அப்போது யாரும் இல்லை.

கானியின் காதலன் விடை பெற்றுச் சென்று விட்டான்.

மற்றவர்கள் தூங்கச் சென்று விட்டார்கள்.

“நான் உங்க கிட்டே ஒண்ணு கேட்கணும்” கானி ஆரம்பித்தாள்.

“சொல்லுங்க”

“என்னோட காதலைப் பற்றி”

“சொல்லுங்க”

“இந்தக் காதல் சரிவருமா என தெரியலை. அவனை எனக்குப் புடிச்சிருக்கு, ஆனா வீட்டுல நிறைய எதிர்ப்பு. எனக்கு அவனைப் பிடிச்சிருக்கே தவிர அவனையே என்னோட வாழ்க்கைத் துணையா ஏற்றுக் கொள்ளத் தயக்கமா இருக்கு. என்ன செய்யலாம்?”

நிக்கின் மனதுக்குள் சட்டென ஒரு சின்னச் சாரல் மழை. சே, ஒருத்தரோட வேதனையிலும், குழப்பத்திலும் கூட குளிர்காய்கிறோமே எனும் சின்ன உறுத்தலும் கூடவே எழுந்தது. இருந்தாலும் எதையும் அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

ஒரு வினாடி மௌனமாய் இருந்தார்.

இது சுயநலத்தின் நேரமல்ல. ஒரு உதவியோ, ஆலோசனையோ கேட்டு வருகிறாள் இந்தப் பெண். இவளுக்கு சரியான ஆலோசனை சொல்வதே சிறந்தது. இல்லாவிட்டால் எதுவும் சொல்லாம் இருக்கலாம். நிக் மனதில் குழப்பங்கள்.

“நீ, கடவுளிடம் பிரார்த்தனை செய். ஒரு நல்ல முடிவை எடுக்க அவர் உதவுவார்” நிக் சொன்னார்.

சற்று நேர மவுனத்துக்குப் பின் நிக் கேட்டார்.

“பெல் டவர்” எனும் வார்த்தைகளைக் கேட்டால் உன் மனதில் என்ன வருகிறது?

“நமது கண்கள்” சட்டென பதில் சொன்னாள் கானி. பெல் டவர் தான் அவர்கள் முதலில் பார்வை பரிமாறிக் கொண்ட இடம்.

“என்ன சொன்னே”

“நமது கண்கள்” அவள் மீண்டும் சொன்னாள். “நமது கண்கள் சந்தித்தபோது மனசுக்குள் ஏதோ ஒரு மின்னல் வந்தது நிக். இப்படி நான் இதற்கு முன் உணர்ந்ததேயில்லை”

நிக்கின் மனசில் சட்டென பூக்கள் விரிந்தன.

“நிக், அன்றிலிருந்து நான் ஜெபித்துக் கொண்டிருக்கிறேன். எது சரியானதோ, எது கடவுளின் விருப்பமோ அது நடக்கட்டும்”

“உனக்கு ஒரு காதலன் இருக்கும் விஷயத்தை நீ சொல்லவே இல்லையே”

“நிக், நான் சொல்லணும்ன்னு தான் நெனச்சேன். முதல் நாளே மின்னஞ்சல் அனுப்ப நினைச்சேன். டாமி தான் நீங்க யோஷியை விரும்பறீங்கன்னு சொன்னா.. அதான் நான் எதுவும் சொல்லல”

“நோ..நோ..நோ.. நான் அப்படிச் சொல்லவேயில்லை. நான் விரும்பியது உன்னைத் தான்” நிக் சொன்னார். ஒரு பெரிய கண்ணாடித்

தொட்டி கீழே விழுந்து உடையும் பரபரப்பில் அவர் சொல்லி முடிக்க பெரும் அமைதி அங்கே நிலவியது.

“நெ..நெஜமாவா “

“ஆமா.. சத்தியமா. டாமி அதைத் தப்பா புரிஞ்சுகிட்டா போல”

நிக் தொடர்ந்தார்.

“என்ன பண்ண, உனக்கு ஒரு காதலன் இருக்கான். இந்த உணர்வுகளை நாம வளர்க்காம விட்டு விடுவது நல்லது” நிக் சொன்னார். அவராலேயே நம்ப முடியவில்லை. ஆனால் அந்த நேரத்தில் அப்படிச் சொல்வதே சரியானது என்று அவருக்குத் தோன்றியது.

“நேரமாச்சு கிளம்பு” நிக் சொன்னார்.

கானி நெருங்கினாள். நிக்கை ஸ்நேகமாய் அணைத்துக் கொண்டு விடைபெற்றார். இருவருடைய உள்ளங்களிலும் நேரம் தளும்பியது.

மறு நாள் மீண்டும் ஒரு விடைபெறுதல் நிகழ்வு.

மீண்டும் ஒரு ஆறு வாரங்கள். கானியிடமிருந்து அழைப்பே இல்லை.

நிக் மீண்டும் சோர்வடைந்தார். கானியின் முடிவு என்னவாய் இருக்கும் என்பதை அவரால் கணிக்க முடியவில்லை. அவள் ஒரு அழகான பெண் என்பதையும் தாண்டி அவள் மீது நிக்கின் நேசம் வளர பல காரணங்கள். அந்த குட்டிக் குட்டிச் சந்திப்புகள் அவளுடைய பல நல்ல குணாதிசயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டின. அழகு, அறிவு, கடவுள் மீதான பக்தி, குடும்பம் மீதான அன்பு, நம்பிக்கை என பல பரிமாணங்கள் அவளிடம் இருப்பதைக் கண்டு நிச் நிஜமாகவே வியந்தார்.

ஆறு வாரங்களுக்குப் பின் மீண்டும் ஒரு பயணம். மீண்டும் அதே சூழல். இந்த முறை டாமியின் வீட்டிலிருந்த கானியைப் பார்த்தபோது ஏதோ நெருங்கிய தோழியைக் காண்பது போல பூரித்தார் நிக்.

அன்று மாலையில் கானி சொன்னார்.

“நான் கடவுளிடம் நீண்ட நாட்கள் பேசினேன். முடிவெடுத்திருக்கிறேன்”

நிக் அமைதியானார்.

“கடவுள் என்னிடம் தெளிவாய்ச் சொன்னதாய் உணர்கிறேன்”

சீக்கிரம் சொல்லேன் என நிக்கின் மனம் துடித்தது. ஆனாலும் சொல்லவில்லை அமைதியாய் இருந்தார்.

“நான் என்னுடைய வாழ்க்கையை யாருடன் செலவிடுவது என முடிவெடுத்து விட்டேன். என் காதலனைப் பிரியப் போகிறேன்”

நிக் சட்டென மலர்ச்சியானார். தனது காதல் வெற்றியடைந்து விட்டதா? உள்ளுக்குள் சட்டென உணர்ச்சிப் பிரவாகம் கொந்தளித்தது. கடவுளே கானியை தன்னிடம் ஒப்படைத்திருப்பதாக மகிழ்ந்தார். காலம் முழுதும் இனிமேல் கானியுடன் தான் வாழ்க்கையா? நினைப்பே அவரை ஆனந்தத்துக்குள் தள்ளியது. அவருடைய சிந்தனைக்கிடையே கானி கேட்டாள்.

“என்னைத் திருமணம் செய்து கொள்கிறீர்களா”

“நிச்சயமாய்!”

அதன் பிறகு காரியங்கள் படு வேகமாய் நகரத் துவங்கின. கானியின் பெற்றோர் காதலுக்கு பச்சைக் கொடி காட்டினார்கள். கானியின் தந்தை உயிருடன் இல்லை. தாய் மகள் சரியான முடிவை எடுத்திருப்பதாய் நம்பினாள். கைகளும் கால்களும் இல்லாத ஒருவரை திருமணம் செய்யப் போவதாய் அவர் நினைக்கவே இல்லை. ஒரு தன்னம்பிக்கை மிக்க இறை பக்தியுடைய மனிதனைத் தான் தனது மகள் திருமணம் செய்து கொள்ளப் போகிறாள் என்றே அவளது மனம் நினைத்தது!

நிக்கின் வீட்டிலும் காதலுக்கு எதிர்ப்பு எழவில்லை. இத்தனை குறைகளையும் மீறி வாழ்வில் சாதிக்கும் தங்கள் மகன் காதலையும் சரியாகவே அணுகுவான் எனும் நம்பிக்கை அவர்களிடமும் இருந்தது.

நிக்கின் தாய் கானியிடம் ஒரே ஒரு கேள்வி கேட்டார்.

**“ஒரு வேளை உங்களுக்குப் பிறக்கும் குழந்தை நிக்கைப் போலப் பிறந்தால் என்ன செய்வீர்கள்?”**

**“கவலையில்லை. எனது ஐந்து குழந்தைகளும் நிக்கைப் போல பிறந்தாலும் ஐந்து பேரையும் நன்றாக வளர்த்துவேன். நிக் பிறக்கும் போது உங்களுக்கு நிறைய கஷ்டங்கள் இருந்திருக்கும். இப்போது நிக்கின் வாழ்க்கை அனுபவம் அப்படி ஒரு குழந்தை பிறந்தாலும் வளர்க்க உதவும். கடவுள் நிச்சயம் எதைச் செய்தாலும் அதில் ஒரு அர்த்தம் இருக்கும்”** என்றார் கானி.

அந்தப் பதில் நிக்கின் பெற்றோரை வசீகரித்தது!

இருவருக்கும் இடையே இருப்பது வெறும் வயதுக் கவர்ச்சியல்ல, இறைவன் இணைத்த காதல் என்பதில் அவர்களுக்கு நிம்மதி ஏற்பட்டது!

பிப்ரவரி 12, 2012! நிக் வாயிச்சஸ், கானி மயாகரா திருமண நாள்!




அழகிய கடற்கரையில் அவர்களுடைய திருமணம் கிறிஸ்தவ முறைப்படி இனிதே நடந்தது.

நிக், கானியின் கரங்களில் மோதிரம் அணிவித்தார்.

கானி, நிக்கின் கழுத்தில் செயின் அணிவித்தார்!

சின்ன வயதில் நிக்கை அச்சுறுத்தும் ஒரு விஷயம் திருமணம். தனக்குத் திருமணம் நடக்குமா? என்னை யாராவது விரும்புவார்களா? கைகளும் கால்களும் இல்லாத ஒருவனைக் கல்யாணம் பண்ண யாருக்கேனும் தலையெழுத்தா? என்னால் ஒரு குடும்பத்தைக் கட்டியெழுப்ப முடியாதா? என்றெல்லாம் அவருடைய மனம் குழம்பித் தவிக்கும்.



இன்றைய தினத்தில் அந்த சஞ்சலங்கள் எல்லாம் மறைந்து விட்டன. ஒரு அழகான மனைவி, இறைவனின் விருப்பப்படியே எல்லாம் நடக்கிறது! நிக் மிகவும் மகிழ்ந்தார்.

வாழ்க்கையில் நம்மைச் சுற்றி எத்தனையோ பயங்கள் குழி பறிக்கும். என்ன நடக்குமோ ஏது நடக்குமோ எனும் கலக்கம் நம்மைச் சுற்றி வேட்டை நாய்களைப்போல பற்களைக் காட்டிச் சுற்றி வரும். அவற்றைக் கண்டு பயந்து ஓடினாலோ, ஒளிந்து படுத்துக் கொண்டாலோ வாழ்க்கையின் உன்னதமான பக்கங்களைப் பார்க்கவே முடியாது!

அதை விட்டு விட்டு, அதை எதிர்கொண்டு தொடர்ந்து நடக்கும் போது வாழ்க்கை சுவாரஸ்யமான அனுபவங்களை நமக்கு நிச்சயம் தரும். இறைவனில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தால் கிடைக்கும் வாழ்க்கை நிச்சயம் நல்லதாகவே இருக்கும். அவர் தான் நல்லோர் மேலும் தீயோர் மேலும் மழையைப் பொழியச் செய்யும் அன்புள்ளவர். ஆதியும் அந்தமும் ஆனவர். எல்லாமே அவரால் தான் உண்டாக்கப்பட்டன. இல்லாமைக்கு முன்னாலும் அவர் இருந்தார், நிறைவுக்குப் பின்னாலும் அவர் இருப்பார். அவருக்குத் தெரியாமல் எதுவும் நடப்பதில்லை! நிக்கின் மனதில் வேரோடிய ஆழமான ஆன்மீக உணர்வு அவரை தொடர்ந்து பயணிக்க வைத்தது!

நமது வாழ்க்கையில் வரும் துயரங்கள் நம்மை தடுக்கி விழச் செய்கிறதெனில் நாம் நிக்கின் வாழ்க்கையைக் கொஞ்சம் அலசக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர் ஏதோ ஒரு உடல் குறையை வென்று வாழ்ந்தவர் அல்ல. குறைகள், பலவீனங்கள் எனும் அனைத்து விஷயங்களையும் விசுவாசத்தினாலும், நம்பிக்கையினாலும் கடந்தவர்.

திருமணம் முடிந்த நிக் கடவுளுக்கு இதயத்தில் நன்றிகளை நிறுத்தாமல் சொன்னார். அவருடைய இதயம் ஆனந்தத்தில் மிதந்தது,

எனினும் எல்லாவற்றுக்கும் மேலாக கடவுளை நேசி எனும் போதனையை அவர் உள்ளத்தில் ஏற்று கடவுளைப் புகழ்ந்தார்.

அவருடைய வாழ்க்கை கிறிஸ்துவின் இரண்டு போதனைகளால் வழிநடத்தப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாய் இறைவனை நேசிப்பது. தன்னைப் போல பிறரையும் நேசிப்பது. இந்த இரண்டு விஷயங்களுமே நிக்கின் ஆன்மீக வாழ்வின் அடிப்படையாக ஆகிப் போனது. அதுவே கிறிஸ்தவத்தின் அடிப்படையும் கூட.



திருமணம் முடிந்தபின் நிக் தம்பதி ஹனிமூன் போனார்கள்.

ஹவாய் தீவுக் கரைகளில் ஹாயாய் உலா வந்த அவர்களைக் கண்டவர்கள் வியந்தனர். சாதாரண தம்பதியரைப் போல கேலி, கிண்டல், ரொமான்ஸ் என அவர்களுடைய ஹனிமூன் இருந்தது.



தனது தோளில் லாவகமாய்க் கேமராவைத் தூக்கி காதல் மனைவியை கிளிக்கித் தள்ளினார் நிக்!

வாழ்க்கையின் இன்னொரு பக்கத்தை நிக் வாசித்துக் கொண்டிருந்தார். தன்னோடு

உயிரையும், உணர்வுகளையும், கனவுகளையும் பகிர்ந்து கொள்ள ஒரு இணை.! கடவுள் ஆணும் பெண்ணுமாய் மனிதரைப் படைத்தார். அவர்கள் இணைந்து வாழ வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம். அந்த விருப்பத்தை இதயத்தில் ஏற்றனர் தம்பதியர்.



ஆகஸ்ட் 10, 2012-ல் நிக் ஆனந்தமாய் ஒரு செய்தியை அறிவித்தார்!

“நான் அப்பாவாகப் போறேன்!”



# 11




"நீங்கள் எப்படி எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்கிறீர்கள்"

நிக்கை நோக்கி அடிக்கடி நீட்டப்படும் கேள்வி இது!. கைகளும் இல்லை, கால்களும் இல்லை, சாதாரண மனிதர்களைப் போல செயல்படவும் முடியாது, அப்படியெனில் சந்தோசம் இருக்காது என்பதே பலருடைய சிந்தனை. ஆனால் நிக்கின் வாழ்க்கையோ தலை கீழ். ஆனந்தம், உற்சாகம் மகிழ்ச்சி என உற்சாகமாய் இருக்கிறார். அது மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு பகுதியிலும் உள்ள மக்களிடமும் உற்சாகத்தை ஊற்றெடுக்க வைக்கிறார்.

எனது மகிழ்ச்சிக்குக் காரணம் நான் இறைவனில் வைத்திருக்கும் நம்பிக்கை தான். எல்லா சூழல்களையும், எல்லா செயல்களையும் கட்டுப்படுத்தும் சக்தியுடைய இறைவனிடம் முழு நம்பிக்கை வைப்பது வாழ்க்கையில் மிகப்பெரிய பாதுகாப்பு உணர்வைக் கொடுக்கும். பாதுகாப்பு உணர்வு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கும். அது அப்படியே மனதுக்குள் நிலையான மகிழ்ச்சியையும் கொடுக்கும்.

உலக விஷயங்களில் கிடைக்கும் மகிழ்ச்சியை விட இறைநம்பிக்கையில் கிடைக்கும் மகிழ்ச்சி ஆழமானது, வலுவானது, நிலையானது என்பதை நான் எனது வாழ்க்கையில் உணர்ந்தேன். அதற்காக நிக் என்பவனுக்கு சோகம் இல்லை, கோபம் இல்லை, எரிச்சல் இல்லை, பயம் இல்லை என்பது அர்த்தமல்ல. எல்லா உணர்வுகளின் கலவை தான் நான். ஆனால் எல்லா உணர்ச்சிகளையும் விட இறைவனில் வைத்திருக்கும் நம்பிக்கை அதிகமாய் இருக்கிறது. அதனால் தான் எல்லாவற்றையும் வென்று வரும் வலிமை கிடைத்திருக்கிறது.

எப்போதும் நமது உணர்வுகளையோ, நமது எமோஷனையோ நம்பக் கூடாது. பலவேளைகளில் அது நம்மைத் தவறான வழியில் இட்டுச் செல்லும். சட்டென நமது மனதில் எழும் உணர்வுகள் சரியாய் இருக்க வேண்டுமென்பதில்லை.

உதாரணமாக நமக்கு ஒரு நெருங்கிய நண்பர் இருக்கிறார் என வைத்துக் கொள்வோம். அவர் பல நாட்களாகத் தொடர்பு கொள்ளவில்லை. மின்னஞ்சலுக்குப் பதில் சொல்லவில்லை. போன் பண்ணவில்லை. நமது மனதில் ஏராளம் உணர்வுகள் எழும். அந்த நண்பர் நம்மை மறந்து விட்டார். அல்லது அவருக்கு நம்மீது கோபம். அல்லது நம் மீது பொறாமை, இப்படி

ஏதேதோ எண்ணங்கள் நம்மை ஆக்கிரமிக்கும் இல்லையா? உண்மையில் ஒருவேளை அவருடைய அன்பு அணுவளவும் குறைந்திருக்காது!

கடவுளிடம் மன்றாடுகையிலும் அப்படியே. உடனுக்குடன் பதில்கள் கிடைக்க வேண்டுமென்பதில்லை. அப்படி வராத பொழுதுகளில் நாம் ஆண்டவரையே சந்தேகிக்கிறோம். அவருடைய இருப்பையே கேள்விக்கு உள்ளாக்குகிறோம். அதுவே நமது ஆனந்தம் உடையக் காரணம். இறைவனில் முழுமையாய் சரணடைகையில், நம்பிக்கை வைக்கையில் வாழ்க்கை ஆனந்தமாகிவிடுகிறது. எனது ஆனந்தம் இறைவன் மீதான நம்பிக்கையில் தான் கட்டியெழுப்பப் பட்டிருக்கிறது!

இதுவே எனது மகிழ்ச்சிக்குக் காரணம்!


“உங்கள் புத்தகங்களையெல்லாம் எப்படி எழுதுகிறீர்கள்? கைகள் இருக்கும் மனிதனுக்கே அது ஒரு சவாலான விஷயம் இல்லையா?”

நிக் புன்னகையுடன் பதில் சொல்கிறார்.

“ஒரு நிமிடத்துக்கு 40 முதல் 53 வார்த்தைகள் வரை என்னால் டைப் செய்ய முடியும். முடியும் எனும் சிந்தனை இருந்தால் நம்மால் எதையும் சாதிக்க முடியும். முடியாது என முயற்சியை விடும்போது தான் நமது தோல்வியும், சோகமும் ஆரம்பமாகும்!”

பலவீனங்கள் என நாம் நினைக்கும் பல விஷயங்களைப் பலமான விஷயங்களாக மாற்றும் வலிமை கடவுளுக்கு உண்டு. எது இல்லை என நினைத்து நாம் முடங்குகிறோமோ, பிறகு ஒரு காலத்தில் அது இல்லாமல் போனது பலமாய் மாறியிருக்கும் வியப்பையும் நாம் சந்திப்போம். அந்த நிலையை அடைய வலிமையான நம்பிக்கை அவசியம்.

**ஏமிகார் மைக்கேல்** என்றொரு பெண்மணி இருந்தார். வெளிநாட்டுக்காரரான அவருடைய கண்கள் மட்டும் பிரவுனாக இருக்கும். இந்தியர்களுடைய கண்களைப் போலவே இருக்கும். அதில் அவருக்கு பெரிய வருத்தம். மற்றவர்களைப் போல தனது கண்




இல்லையே என வருந்துவார். கண்கள் நீலமாக இருக்க வேண்டும் என்பது அவருடைய விருப்பம். அது ஒரு குறையாகவே இருந்தது அவருக்கு. ஆனால் பிற்காலத்தில் அவர் இந்தியாவில் வந்து சமூக, ஆன்மீகப் பணி ஆற்ற வேண்டிய சூழல் வந்தது!

அப்போது பார்த்தால் இந்தியாவிலுள்ள பெண்களின் கண்களைப் போலவே தனது கண்கள் இருப்பதில் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள். இறைவன் தனது கண்ணை நீலமாகப் படைக்காததன் காரணம் அந்த நிமிடத்தில் அவருக்குப் புரிந்தது!

இறைவன் தன்னை கை கால்களோடு படைக்காமல் இருந்தது கூட தன்னை ஒரு தன்னம்பிக்கை மனிதனாக வளர்க்கவும், இறைவனின் அன்பையும், ஆறுதலையும் துயரப்படும் மக்களுக்கெல்லாம் பகிரவுமே என நிக் உறுதியாக நம்புகிறார். பலவீனங்கள் பலங்களாய் மாறும் அதிசயத்தை வாழ்க்கை நமக்கு அவ்வப்போது தந்து கொண்டே தான் இருக்கிறது!

பல்லு சரியா இல்லை என நினைத்து அழுது கொண்டிருக்கும் பெண்ணுக்கு அந்தப் பல்தான் திருப்பு முனையாய் இருக்கும்! காதல் தோல்வியடைந்ததே என கலங்கும் பெண்ணுக்கு மிகச் சிறப்பான

கணவனும், குடும்பமும் அமைந்து இறைவனின் அன்பை பறைசாற்றும். இப்படி எல்லா விஷயங்களுமே உண்மையில் நமக்கு இறைவனால் தரப்படுபவையே. **நாம் பல வேளைகளில் மனிதர்களின் அளவீடுகளை வைத்தே வாழ்க்கையை அளவிடுகின்றோம். இறை அளவீடுகளால் அளவிடுவதில்லை! அதனால் தான் நம்மை எரிச்சலும், மன அழுத்தமும் பிடிக்கிறது.**

ஒரு கதை ஞாபகத்துக்கு வருகிறது.

ஜப்பானில் பத்து வயதுப் பையன் ஒருவன் இருந்தான். ஜூடோ சாம்பியனாக வேண்டும் என்பது அவனுடைய கனவு. ஆனால் அவனுக்கு இடது கை கிடையாது. கையும் காலும் வலுவாய் இருப்பவர்களுக்கே ஜூடோ சாம்பியன் ஆவது சிம்ம சொப்பனம். கையில்லாத பையன் என்ன செய்வான்? பல மாஸ்டர்களிடம் போனான்.




எல்லோரும் அவனை பரிதாபமாய்ப் பார்த்துவிட்டு திருப்பி அனுப்பிவிட்டார்கள். கடைசியில் ஒரு குரு அவனுக்கு ஜூடோ கற்றுத் தர ஒப்புக் கொண்டார்.

பயிற்சி ஆரம்பமானது. குரு ஒரே ஒரு தாக்குதலை மட்டும் அவனுக்குக் கற்றுக் கொடுத்தார். நாட்கள், வாரங்கள், மாதங்கள் ஓடின. குரு வேறு எதையும் கற்றுக் கொடுப்பதாகத் தெரியவில்லை. பையன் சோர்ந்து போனான்

“குருவே.. ஜூடோ சேம்பியன் ஆக இந்த ஒரு தாக்குதல் தெரிந்தால் மட்டும் போதாதே. வேறு எதுவும் சொல்லித் தருவீர்களா?” என்றான்.

“இந்த ஒரே ஒரு தாக்குதலில் நீ வல்லவன் ஆனால் போதும்” என்றார் குரு. குரு சொல்லிவிட்டால் மறு பேச்சு ஏது? பையனும் பயிற்சியைத் தொடர்ந்தான். சாம்பியன்களுக்கான போட்டி ஆரம்பமானது!

முதல் போட்டி. சர்வமும் கற்றுத் தேர்ந்த எதிராளி. ஒரே ஒரு தாக்குதல் மட்டும் தெரிந்த இந்தப் பையன். போட்டி ஆரம்பமானது. எல்லோரும் ஆச்சரியப்படும் விதமாக பையன் வெற்றி பெற்றான். இரண்டாவது போட்டி. அதிலும் அவனுக்கே வெற்றி. அப்படியே முன்னேறி அரை இறுதிப் போட்டி வரை வந்தான். அதிலும் கொஞ்சம் போராடி ஜெயித்து விட்டான்.

கடைசிப் போட்டி. எதிரே இருப்பவன் பலமுறை சேம்பியன் பட்டம் பெற்றவன். ஒரு கை இல்லாத எதிராளியைப் பார்த்து அவனுக்கு கொஞ்சம் பரிதாபமும், இளக்காரமும். பையன் சளைக்கவில்லை. போட்டி ஆரம்பமானது. முதல் சுற்றில் பையனை அடித்து வீழ்த்தினான். பையனின் நிலையைக் கண்டு பார்வையாளர்களுக்கு அதிர்ச்சி. போட்டியை நிறுத்திவிடலாமா என்கின்றனர் போட்டி நடத்துபவர்கள். “வேண்டாம்., பையன் சண்டையிடட்டும்” என்கிறார் குரு. இந்தப் பையனோடு போரிட இனிமேல் பாதுகாப்புக் கவசம் தேவையில்லை என எதிராளி அலட்சியமாய் வந்திறங்கினான்.



பையன் தனக்குத் தெரிந்த அந்த ஒரே தாக்குதலை பலமாய் நிகழ்த்தினான். எதிராளி வீழ்ந்தான். பையன் சாம்பியனானான்.

பார்வையாளர்கள் நம்ப முடியாமல் பார்த்தார்கள், போட்டியாளர்களுக்கு ஆச்சரியம். அந்தப் பையனுக்கே தனது வெற்றியை நம்ப முடியவில்லை. அன்று மாலை குருவின் பாதங்களில் பணிந்த அவன் கேட்டான்


"குருவே. நான் எப்படி இந்த போட்டியில் வெற்றி பெற்றேன்? ஒரே ஒரு தாக்குதலை மட்டும் வைத்துக் கொண்டு வெற்றி பெற்றிருக்கிறேனே" என்றான்.

புன்னகைத்தபடியே குரு சொன்னார் "உனது வெற்றிக்கு இரண்டு காரணங்கள். ஒன்று ஜூடோவிலுள்ள மிகக் கடுமையான ஒரு தாக்குதலை நீ கற்றுத் தேர்ந்திருக்கிறாய். இரண்டாவது இந்தத் தாக்குதலைத் தடுக்க வேண்டுமானால் எதிராளிக்கு ஒரே ஒரு வழி தான் உண்டு. உனது இடது கையைப் பிடிக்க வேண்டும். உனக்குத் தான் இடது கை கிடையாதே! உன்னுடைய அந்த பலவீனம் தான் பலமானதாய் மாறி உன்னை சாம்பியன் ஆக்கியிருக்கிறது!"

குரு சொல்லச் சொல்ல பையன் வியந்தான். தனது பலவீனமே பலமாய் மாறிய அதிசயத்தை நினைத்து நினைத்து ஆனந்தித்தான்.

**நம்முடைய வாழ்க்கை பல வேளைகளில் இப்படித் தான் இருக்கிறது. இல்லாத ஒன்றை நினைத்து நாம் கலங்குகிறோம். ஆனால் அது ஏன் என்பதை பொறுமையும், நம்பிக்கையும் கொண்டு வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கும் போது தான் புரியும்!.**

## 12




எதிர்நோக்கு!

அது இல்லாத வாழ்க்கை ஆனந்தமாய் இருக்க முடியாது. நம்பிக்கை இல்லாத வாழ்க்கை வெறுமனே இலக்கு இல்லாமல் ஓடிக் கொண்டிருக்கும். **ஒரு இலக்கை நோக்கிய ஓட்டத்துக்கோ, பயணத்துக்கோ நம்பிக்கை அவசியம். இன்னும் சொல்லப் போனால், எந்தப் பயணத்திற்கும் அடிப்படையாய் இயங்குவது ஏதோ ஒரு நம்பிக்கையே!**

நிக்கின் சின்ன வயது வாழ்க்கை நம்பிக்கை, எதிர்நோக்கு, விசுவாசம் போன்ற நல்ல சிந்தனைகளால் நிரம்பியிருக்கவில்லை. காரணம், அதற்குரிய பக்குவம் அவருக்கு வரவில்லை. பலருக்கும் அந்த விஷயங்கள் பெரியவர்கள் ஆன பிறகு கூட வருவதில்லை என்பது வேறு விஷயம்.

சின்ன வயதில் விமர்சனங்களைக் கண்டு முடங்கி விட்டார் நிக். இந்த உடலைக் கொண்டு நான் என்ன செய்ய முடியும்? எப்படி என்னால் சாதாரணமாக வாழ முடியும் எனும் சிந்தனையே அவருக்குள் நிரம்பியிருந்தது. ஏதோ உயிரைப் பிடித்து வைத்துக் கொண்டு செயல்படாத ஒரு வாழ்க்கை தான் வாழ முடியும் என அவர் உறுதியாக நம்பினார். அதனால் தான் தற்கொலைச் சிந்தனைகள் அவரை அலட்டின.

**தற்கொலைச் சிந்தனைகள் நம்பிக்கை உடையும் போது உருவாகிறது. வாழ்க்கையை எதிர்கொள்ள முடியாத பயங்கள் வரும்போது எழுகிறது.** அந்தப் பயங்கள் எப்படி எழுகின்றன? அடிமனதில் தன்னைக் குறித்தும், தன்னுடைய எதிர்காலம் குறித்தும் எழுகின்ற நிலையாமையிலிருந்தே எழுகின்றன. ஒரு தோல்வி வந்தால் அத்துடன் துவண்டு போவது இதனால் தான். ஒரு குறைபாடு இருந்தால் அத்துடன் முடங்கிப் போவது இதனால் தான். **ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் ஸ்பெஷலானவன் எனும் சிந்தனை மனதுக்குள் வளர்ந்தால் மட்டுமே இந்த சிந்தனைகளைத் தாண்ட முடியும்.**

அத்தகைய வலிமையான சிந்தனை உருவாக பல விஷயங்கள் நமக்குத் துணை செய்யும். நிக்கைப் பொறுத்தவரை அந்த நம்பிக்கை இறைவனில் கிடைத்தது. கடவுள் தன்னை இப்படிப் படைத்திருப்பதற்கு ஏதோ ஒரு தீர்க்கமான காரணம் உண்டு எனும் அடிப்படையில் உருவானது.

இறைவன் என்னையும் நேசிக்கிறார். நான் அவருடைய குறைப் பிரசவப் பிள்ளை அல்ல. **ஏதோ ஒரு ஸ்பெஷல் காரணத்துக்காகத் தான் நான் இப்படி ஸ்பெஷலாகப் பிறந்திருக்கிறேன். இந்த சிந்தனை அவருக்குள்**

**ஆழமாக வேரூன்றிய பிறகு தான் அவர் தனது செயல்களை செம்மைப்படுத்த முயன்றது. வாழ்க்கையை எதிர்கொள்ள முடிந்தது.**

அந்த நம்பிக்கை அவருக்குள் வரும் வரை அவருக்கு தற்கொலைச் சிந்தனைகளும், தாழ்வு மனப்பான்மையும் இருந்து கொண்டே தான் இருந்தது.

சின்ன வயதில் ஒரு முறை அம்மா சமைத்துக் கொண்டிருந்தார். இவர் உயரமான ஒரு சேரில் அமர்ந்திருந்தார். அங்கிருந்து விளிம்பில் விழுந்து கழுத்தை முறித்திக் கொண்டு செத்துப் போகலாமா எனும் சிந்தனை அவருக்குள் தீவிரமாக எழுந்தது!

இன்னொரு முறை குளியல் தொட்டியில் மூழ்கிச் செத்துவிடலாம் என முடிவு செய்து ஏறக்குறைய சாவின் கைப்பிடியைப் பிடித்தார். ஆனால் அந்தக் கணத்தில் அவருடைய கண்ணுக்கு முன்னால் அழுகின்ற பெற்றோரும், சகோதரரும் வந்தார்கள்.

“உன்னை நாங்க ஒழுங்கா கவனிக்கலையே.. “ என அவர்கள் அழுவதாக அவருக்குத் தோன்றியது. அந்தக் குற்ற உணர்ச்சிக்கு அவர்களை காலம் முழுதும் இட்டுச் செல்ல வேண்டாம் என்பதால் அந்த முடிவையும் அவர் விட்டு விட்டார்.

நிக்கின் பெற்றோர் நிக்கின் மீது அளவு கடந்த பாசத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். அவரை ஒரு சாதாரண குழந்தையாகத் தான் பார்த்தார்கள்.

உடல் ஊனமுற்ற பிள்ளைகளை பொதுவாக அப்படிப்பட்ட “ஊனமுற்ற” குழுக்களோடு தான் விளையாட விடுவார்கள். அதனால்

அவர்களுடைய தன்னம்பிக்கை உடையாது என்பது ஒரு மூட நம்பிக்கை. அந்த நம்பிக்கையை நிக்கின் தந்தை உடைத்தார்.

“என் பையன் சாதாரணமான பையன் தான். அவனுக்கு ஸ்பெஷல் குழுக்களெல்லாம் தேவையில்லை. எல்லாரையும் போல அவனும் இருப்பான். சாதாரண மாணவர்களோடு தான் விளையாடுவான்” என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அதனால் நிக்கிற்கும் மனதளவில் அந்த குறைபாடுச் சிந்தனை குறைந்து விட்டது. ஆனால் என்ன நள்ளிரவில் தனியே படுக்கும்போது தூக்கம் வராமல் புரள்வார். கலங்குவார்.

அவருடைய தந்தை சொல்வார் “கடவுள் உன்னைப் படைத்ததில் ஒரு ஸ்பெஷல் காரணம் நிச்சயம் உண்டு”

நிக்கின் சின்ன வயது மூளைக்கு அது புரியவில்லை. அவருடைய சிந்தனை எப்படி இருந்தது தெரியுமா?

“கடவுள் ஒரு ஸ்பெஷல் காரணத்துக்காகத் தான் இப்படிப் படைத்திருக்கிறார். சட்டென ஒரு நாள் எனக்குக் கைகளும் கால்களும் முளைத்து விடும். அப்போது நான் எல்லோரிடமும் போய் கடவுளின் அதிசயத்தைச் சொல்வேன்” என்றே நினைத்தார். அதையே உறுதியாக நம்பினார். தினமும் காலையில் எழுந்ததும் கையும் காலும் வளர்ந்திருக்கிறதா என்று தான் பார்ப்பார்!

இரண்டு கைகளும் ஒரே நேரத்தில் வளராவிட்டாலும் ஏதேனும் ஒரு கை, அல்லது ஒரு காலாவது வளரும் என்பதில் அவருக்கு சந்தேகமே இருக்கவில்லை.

“கடவுளே உங்க ஐடியா எனக்குப் புரிஞ்சு போச்சு. எனக்கு நீங்க அதிசயமா கையையும், காலையும் தரப் போறீங்க. அப்படித் தந்த உடனே நான் எல்லா இடத்துலயும் போய் உங்களோட அதிசய செய்கையைச் சொல்வேன். டிவில எல்லாம் பேட்டி கொடுப்பேன்” எனும் ரீதியில் தான் அவருடைய ஆரம்ப காலப் பிரார்த்தனைகள் இருந்தன!

ஆனால் அதெல்லாம் ஒரு காலகட்டத்தில் நின்று போய்விட்டது!

**கடவுளின் சிந்தனை தன்னைக் குணமாக்கி அதன் மூலம் ஒரு அதிசயத்தைச் செய்வதல்ல. தன்னை இப்படியே வைத்திருந்து என் மூலமாய் பல அதிசயங்களைச் செயல்படுத்துவது எனும் உண்மையை அவர் காலப் போக்கில் கண்டு கொண்டார்.**

மனித சிந்தனை எப்போதுமே தெரிந்த தீர்வுகளையும் வழிகளையும் சுற்றியே வரும். இறை திட்டமோ சிந்தனைக்கு அப்பாற்பட்ட நிலையில் பல வேளைகளில் நிலை பெற்று விடும். நம்மால் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைக் கணிக்கத் தான் முடியும். அதுவும் நம்முடைய சிற்றறிவுக்கு எட்டிய வரையில். கடவுளால் தான் எதிர்காலத்தை மிகத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

நமது பிரார்த்தனைகள் எப்போதும் **கேட்கப்படுவதில்லை. கிடைக்காமல் இருப்பது நல்லது எனும் நேரங்களில் கடவுள் நமக்கு நாம் கேட்பதைத் தருவதில்லை. அல்லது அந்த நேரத்தில் கிடைப்பதை விட கிடைக்காமல் இருப்பதே நல்லதாய் இருக்கும். ஆனால் அதைப் புரிந்து கொள்ள இறை நம்பிக்கையும், அவரில் ஆழமாய் வேரூன்றி இருப்பதும் அவசியம்.**

**பதில் கிடைக்காத பிரார்த்தனைகள் என நாம் நினைக்கும் பலவும் பதில் கிடைத்த பிரார்த்தனைகளாய் இருக்கும்.** தந்தையிடம் சாக்லேட் கேட்டு அடம்பிடிக்கும் குழந்தையைப் போல நம் சிந்தனை. சாக்லேட் கிடைக்காவிட்டால் தந்தை மோசமானவர் என முடிவு கட்டுகிறோம். தந்தை அன்பில்லாதவர் என கருதிக் கொள்கிறோம். ஆனால் கிடைக்காமல் இருந்தது நமக்கு நல்லது என்பதை வளர்ந்தபின் கண்டு கொள்வோம்.

எனினும் பல விஷயங்களை நம்மால் புரிந்து கொள்ள முடியாது. உதாரணமாக இயற்கை அழிவுகள். அது கூட மக்களிடம் இருக்கும் மனித நேயத்தைத் தட்டி எழுப்பும் தருணங்களாகவே நிக் பார்க்கிறார். அத்தகைய துயரங்களின் போதெல்லாம் கைகோர்த்துக் கொள்ளும் மனித இனமும், சுற்றமும், நாடுகளும் அவருடைய





பார்வையில் மனிதாபிமானம் முளைத்த தருணங்கள். எனினும் அத்தனை உயிரழப்புகள் ஏன்? எதற்காக எனும் கேள்விகள் மனித சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டவை என்பதே அவருடைய நம்பிக்கை.

அவருடைய சகோதரர் (நேரடிச் சகோதரர் அல்ல) ராய் என்பவர் தனது 27வது வயதில் கேன்சர் வந்து இறந்து போனார். நிக் துயரத்தில் வாடினார். ராயின் மரணம் ஏன் என்பது அவருக்கு விடைதெரியாத விஷயம். நெருக்கமான ஒரு சகோதரனை இழப்பது வலி மிகுந்த நிகழ்வு.

ஆனால் அதையும் நிக் கடவுளின் திட்டத்தின் பாகமாகவே பார்க்கிறார். தன்னால் தாங்கிக் கொள்ள முடியாத அளவு துயரத்தைக் கடவுள் தருவதே இல்லை என்பதில் அவருடைய நம்பிக்கை வெளிப்படுகிறது!

நம்பிக்கை, எதிர்நோக்கு! அது தான் வாழ்க்கையை அழகாக்குகிறது. வாழ்க்கையை பாதுகாப்பாகவும், இனிமையாகவும் கடத்த உதவுகிறது!

## 13




சீனா! 2008ம் ஆண்டு

சீனா ஒரு மிகப்பெரிய நிலநடுக்கத்தைச் சந்தித்துத் துவண்டு போயிருந்த சமயம். நிக் சீனாவுக்கு பயணம் செய்தார். சீனாவிற்கு யார் வந்தாலும் பார்க்கத் தவறாத ஒரு இடம் சீனப் பெருஞ்சுவர் இல்லையா? நிக் அந்த இடத்தைப் பார்த்தார். ரசித்தார். பின் சீனாவின் இயற்கை அழகு மிளிரும் பல இடங்களையும் பார்த்தார்.

பின்னர் அவர்கள் ஒரு நடனக் காட்சியைப் பார்க்க வந்தார்கள். அவருடன் அவருடைய உதவியாளரும் உண்டு. நிக் பொது உரைகளிலும்,

எழுத்திலும், சமீக ஆன்மீக ஈடுபாட்டிலும் அதிகரித்தபின் இந்த உதவியாளர், கவனிப்பாளர் எப்போதும் கூடவே இருக்கிறார். அவருடைய கைகளாகவும், கால்களாகவும் அவருக்கு பல உதவிகள் செய்தும் வருகிறார்.

நடனக் காட்சியைப் பார்த்தார்கள்.

பிரமிக்க வைத்த நடனம். அழகான அசைவுகள், குழுவாக ஒரே சுதியில், மிக நேர்த்தியாக செய்யப்பட்ட நடனம்!

எல்லோரும் கை தட்டினார்கள். நிக் கண்ணீர் சிந்தினார். தட்டுவதற்குக் கைகள் இல்லாததால் அல்ல! அந்த சிறுமிகளின் நிலையை நினைத்து!

நடனமாடிய சிறுமியர் அந்த பூகம்பத்தில் சிக்கி அனாதையாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான சிறுமியரில் சிலர். கடந்த ஆண்டு வரை குடும்பத்தோடு ஆனந்தமாய் ஆடிப் பாடியவர்களிடம் இப்போது குடும்பம் இல்லை. தனியே பிய்த்து எறியப்பட்ட பூக்களைப் போல அவர்களுடைய வாழ்க்கை மாறியிருந்தது!

இவர்களிடையே உரையாற்ற வேண்டும். இவர்களுடைய துவண்டு போயிருக்கும் மனதுக்கு ஆறுதலும் தன்னம்பிக்கையும் தரவேண்டும் – என்பது தான் அவருடைய வருகையின் நோக்கம்.

நிக்கின் மனதில் போராட்டம்.

இவர்களுக்கு நான் என்ன ஆறுதலைச் சொல்லமுடியும்? இவ்வளவு கொடூரமான பாதிப்பில் இருப்பவர்களை எனது வார்த்தைகள் ஆறுதலுக்குள் அழைத்துச் செல்ல முடியுமா? இவர்களை எதிர்கொள்ள இயலாதோ? என பல்வேறு குழப்பங்களும், சோகமும் அவருடைய மனதை ஆக்கிரமித்துக் கொண்டன.

நேரம் வந்தது. அவர்கள் இருந்த அந்த நிலையத்துக்குள் அவர் நுழைந்தார். அவரால் நம்பவே முடியவில்லை. அத்தனை கண்களிலும் நம்பிக்கையின் ஒளி.

அவர்கள் ஒவ்வொருவராக வந்து நிக்கை அணைத்தார்கள். வரவேற்றார்கள். சிரித்தார்கள். தோள் தொட்டார்கள்.

நிக்கின் கண்களில் கண்ணீர்.

இந்த மக்களுடைய தன்னம்பிக்கையை அதிகரிக்க வந்தவர். இந்த மக்களுடைய உற்சாகத்தை அதிகரிக்க வந்தவர். ஆனால் உண்மையில் நிக் தான் தேற்றப்பட்டார்! நிக் தான் ஆறுதல் கொடுக்கபட்டார். நிக்கை அந்த நிலையத்திலுள்ளவர்கள் ரொம்பவே உற்சாகப்படுத்தினார்கள்.

என்ன ஒரு நம்பிக்கை!

எல்லாவற்றையும் ஒரே நொடியில் இழந்து விட்டபின்னும் எதிர்நோக்குதலோடு இருக்கும் அவர்களுடைய கண்களுக்கு முன்னால் நிக் மௌனமாய் இருந்தார். அவரால் எதுவும் சொல்ல இயலவில்லை.

உடை இழந்து, உடமை இழந்து, உறைவிடம் இழந்து, உறவுகளையும் இழந்தபின் எப்படி நம்பிக்கையை மீட்டெடுத்திருக்கிறார்கள் இந்த மக்கள்? அவருடைய மனம் ஆழமாய் தொடப்பட்டது.

நிக் உரையாற்றத் துவங்கினார்.

அவர்களுடைய நம்பிக்கையைப் பாராட்டினார். அவர்களுடைய உற்சாகத்தையும், சோகத்தின் எல்லைகளில் கூட ஆனந்தத்தைக் கண்டடைந்த அவர்களுடைய மனதிடத்தையும் பாராட்டினார்.

தொடர்ந்து நடப்பதற்கான நம்பிக்கை உள்ளத்தில் இருந்தால் மட்டுமே வாழ்க்கை அழகானதாய் இருக்கும். வாழ்க்கை நிச்சயம் அழகானது. நாம் பார்க்கப் போகும் நாட்களும் நிச்சயம் வசீகரமானவை. அந்த அழகான, வசீகரமான வாழ்க்கையைச் சந்திக்க வேண்டுமெனில் தொடர்ந்து நடக்க வேண்டும். நம்பிக்கையுடன் நமது எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். எந்தக் கணத்திலும் “போதும், இனிமேல் முடியாது” எனும் எதிர் சிந்தனைகளுக்குள் நுழைந்து விடக் கூடாது!

நிக் பேசினார். அவர்கள் கேட்டார்கள்.

ஒரு அற்புதமான சந்திப்பாய் அது அமைந்தது! அவருடைய பயண அனுபவங்களில் அந்த சந்திப்பு நீங்க முடியாத இடத்தையும் பெற்று விட்டது!

★

2009ம் ஆண்டு ஹெய்தியில் நிலநடுக்கம்!



அந்த நிலநடுக்கத்தின் போது நடந்த ஒரு உண்மைச் சம்பவம் உயிரை உருக்குகிறது!

நிலம் கோரமாக நடுங்கியதில் கட்டடங்கள் அப்படியே மண்ணுக்குள் புதைந்து போயின. உள்ளுக்குள் உயிர்கள் சமாதியாகின. எந்த ஒரு எச்சரிக்கையும், எந்த ஒரு ஆபத்து அறிகுறியும் தெரிந்திருக்கவில்லை.

இயல்பாக அமைதியாக இருந்த குடும்பங்களெல்லாம் மண்ணுக்குள் நொடியில் சமாதியாகிவிட்டன!

மேரி அந்தக் குடியிருப்பில் தனது மகன் இம்மானுவேலோடு வசித்து வந்தார். மகனுக்கு வயது 21. தையல் வேலை செய்து வந்தார் அவர். மகனும் தாயும் மிகுந்த அன்போடு வாழ்ந்து வந்தார்கள். நிலநடுக்கம் வந்தபோது இருவருமே அந்தக் குடியிருப்பில் இருந்தார்கள். அதிர்ஷ்டவசமாக தாய் தப்பிவிட்டார். மகனோ உயிரோடு புதையுண்டார்.

தாயின் உள்ளம் உடைந்தது. புத்தி பேதலித்தவர் போலானார். ஓடிச் சென்று கேம்ப்களில் தேடினார். இடிபாடுகளிலிருந்து காப்பாற்றி வரப்பட்ட மனிதர்களின் கூட்டத்தில் தன் மகனும் இருப்பானோ எனும் ஏக்கம் அவளை அங்கும் இங்கும் ஓடியாட வைத்தது.

மகன் இல்லை.

நாட்கள் கடந்தன. பல நாட்களுக்குப் பின் ஒரு நாள் திடீரென உள்ளுணர்வு உந்தித் தள்ள இடிபாடுகளிடையே நடந்தாள் தாய்.

திடீரென மகனின் குரல் கேட்பது போல இருந்தது!

உடனே இடிபாடுகளிடையே மீட்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மக்களை ஓடிச் சென்று அழைத்தாள்.

“என் மகனின் குரலை நான் கேட்டேன். இதோ இந்த இடம் தான். தயவு செய்து காப்பாற்றுங்கள்”

அவர்களோ அவருடைய வேண்டுகோளைப் பொருட்படுத்தவில்லை. இத்தனை நாட்களுக்குப் பிறகு ஒருவர் உயிரோடு இந்த

இடிபாடுகளிடையே இருப்பதில் சாத்தியமே இல்லை. அது மட்டுமல்ல, அவர்கள் நீண்ட நேரம் காதுகளைக் கூர்மையாக்கிக் காத்திருந்தும் அவர்களுக்கு எந்த ஒரு குரலும் கேட்கவில்லை.

தாயோ விடவில்லை. எல்லோரிடமும் ஓடி ஓடி உதவி கேட்டாள். வெளிநாடுகளிலிருந்து மீட்புக்காக வந்திருந்தவர்களிடம் மன்றாடினாள். தாயின் தொடர் வேண்டுகோளையும், கெஞ்சலையும் பார்த்தவர்கள் முயன்று பார்க்க முடிவு செய்தார்கள்.

காங்கிரீட் கம்பிகள், பெரிய கட்டைகள், கற்கள், என அந்த இடம் நெருங்கவே முடியாமல் பயமுறுத்தியது.

மீட்புப் படையினர் கம்பிகளை வெட்டினார்கள். கற்களை அகற்றினார்கள் கொஞ்சம் கொஞ்சமாக கீழே சென்றார்கள். கொஞ்ச நேரத்தில் ஒரு கை தெரிந்தது!

உயிருடன்.

மீட்புக் குழுவினர் ஆச்சரியப்பட்டார்கள்.

பத்து நாட்கள்! முழுசாய் பத்து நாட்களுக்குப் பிறகு மீட்கப்பட்டான் இம்மானுவேல். மரணத்தின் விளிம்பில் இருந்தவனை மருத்துவமும், தாயின் அன்பும், காப்பாற்றியவர்களின் கவனமும் மீட்டுக் கரையேற்றியது!

எல்லாம் முடிந்து விட்டது என்று முற்றுப் புள்ளி போட்ட இடத்தில் கூட நம்பிக்கை முளை விட முடியும். வாழ்க்கை துளிர் விட முடியும் என்பதை அன்று நிரூபணமானது. ஒரு தாயின் தவிப்பும், தாயின் தேடலும், தாயின் நம்பிக்கையும் அந்த இளைஞனை மீட்டுக் கொண்டு வந்தது என்று கூடச் சொல்லலாம்.

**நம்பிக்கை நம்மை இயங்க வைக்கிறது! நம்பிக்கை நம்மை செயலாற்ற வைக்கிறது. செயலுடன் கலந்த நம்பிக்கையானது வாழ்க்கையில் வெளிச்சத்தைக் கொண்டு வருகிறது.**

வாழ்க்கையின் சூழல்கள் எத்தனையோ இடங்களில் நம்மைப் பின்னுக்கு இழுக்கலாம். நமது முயற்சிகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கத் தூண்டலாம். ஆனால் நம்பிக்கையும், தொடர்ந்த முயற்சியும் நமக்கு எதிர்பாராத ஆச்சரியங்களைக் கொண்டு வந்து சேர்க்கும்.

பத்து நாட்கள் புதையுண்ட பின்பும் வாழலாம் எனும் நம்பிக்கை இம்மானுவேலுக்கு இருந்தது. பத்து நாட்களுக்குப் பிறகும் மகன் வருவான் எனும் நம்பிக்கை தாய்க்கு இருந்தது! நமது நம்பிக்கைகள் பெரும்பாலும், நடக்காது எனும் எதிர் சிந்தனைகளின் பக்கத்தில் போய் அமர்ந்து கொண்டிருக்கின்றன.

98 சதவீதம் முடியும், 2 சதவீதம் முடியாது எனும் ஒரு சூழல் இருந்தால் கூட நமது மனம் அந்த இரண்டு சதவீதத்தை நினைத்து 98 சதவீதத்தையும் கூட இழந்து விடுகிறது.

நம்பிக்கை, நிச்சயம் நமக்குள் இருக்கவேண்டும். அது செயலுடன் கலந்து இருக்க வேண்டும்.

நிக்கின் மனதில் அந்த நிகழ்வு பல ஆனந்த அதிர்வுகளையும், பல வாழ்க்கைப் பாடங்களையும் கற்றுத் தந்தது. அவருடைய நூலிலும், உரைகளிலும் அந்தக் கதை இடம் பிடித்தது!

# 14



**செ**யற்கைக் கை கால் பொருத்த முடியாதா?

பலரும் கேட்கும் இந்தக் கேள்வி நிக்கின் பெற்றோருக்கு முதலிலேயே எழுந்தது!

நிக் சின்ன வயதாக இருக்கும்போதே செயற்கைக் கையை மாட்டினால் நன்றாக இருக்கும் என நினைத்தார்கள். பதினெட்டு மாதப் பருவம் வந்தபோது ஒரு செயற்கைக் கையை மாட்டினார்கள். என்ன செய்ய செயற்கைக் கையைத் தூக்கிக் கொண்டு நடப்பதே மிகப்பெரிய கஷ்டமாகிப் போனது நிக்கிற்கு. அதை விட வேகமாக கைகள் இல்லாமல் எல்லா செயல்களையும் கொஞ்சம் கொஞ்சம் செய்யத் துவங்கியிருந்தான். நிக்கிற்கு

தோள்கள், கன்னம், நாடி, குட்டிப் பாதம் இவையே கைகால்கள் செய்யும் வேலைகளைச் செய்யத் துவங்கியிருந்தன.

அதனால் அப்போதையை செயற்கைக் கை திட்டம் கைவிடப்பட்டது!

ஆனால் அதன் பிறகும் முயற்சி நிற்கவில்லை. கனடாவில் அதி நவீன சிகிச்சை செய்யலாம். செயற்கைக் கைகால்கள் பொருத்தலாம். அதன் பின் சாதாரண மனிதரைப் போல ஆகலாம் என முயற்சி மேற்கொண்டார்கள். அதுவும் சரிவரவில்லை. செயற்கையாய் எதுவும் பொருத்தாமல் இயற்கையாய் எது இருக்கிறதோ அது தான் இவனுக்குச் சரிவரும் என விட்டு விட்டார்கள்.

ஆனால் நிக்கின் மனதில் இன்னும் நம்பிக்கை இருக்கிறது! என்றேனும் ஒரு நாள் அது சாத்தியமாகலாம். ஒரு அதி நவீன ரோபோட்டிக் தொழில் நுட்பம் செயற்கைக் கைகளையும் கால்களையும் உருவாக்கலாம். அன்று ஒருவேளை கால்களால் நடப்பதும், கைகுலுக்கிக் கொள்வதும் சாத்தியமாகலாம் என்று நம்புகிறார்.

ஆனால் அது நடக்காமல் போனாலும் அவர் கவலைப்படப் போவதில்லை. காரணம் அந்த கட்டத்தை அவர் தாண்டிவிட்டார். அவருடைய தன்னம்பிக்கை பல மடங்கு வளர்ந்திருக்கிறது. ஒரு வெளிச்சம் ஒரு விளக்கிலிருந்து இன்னொரு விளக்குக்குத் தாவி, அது பல நூறு விளக்குகளுக்குத் தாவி, பின் கோடிக்கணக்கான விளக்குகளுக்குப் பரவுவது போல இருக்கிறது அவருடைய தன்னம்பிக்கை.

அது உலக மக்களின் இதயங்களில் வெளிச்சமாக பரவிக் கொண்டே இருக்கிறது! அந்த வெளிச்சம் இனிமேல் அணையப் போவதில்லை.

காரணம் அவருடைய நம்பிக்கைகள் வெறுமனே மனித இயல்புகளை மட்டுமே சாராமல் இறைவனின் மேல் வைக்கும் ஆழமான நம்பிக்கையாக வெளிப்படுகிறது!

**கடவுள் மேல் வைக்கும் நம்பிக்கை என்பது அடுத்தவர்களுடைய உதவிகளைப் புறக்கணிப்பதில் அல்ல. அடுத்தவருடைய அருகாமையை நேசிப்பதும், அன்பு செலுத்துவதுமே கடவுள் நம்பிக்கையின் அடிப்படை.** அதனால் தான் தனக்குக் கதவைத் திறந்து விடவோ, ஒரு பொருளை எடுத்துத் தரவோ அல்லது அத்தகைய சின்னச் சின்ன உதவிகளைச் செய்ய யாராவது முன்வந்தால் நிக் மறுப்பதில்லை. அன்புடனும், புன்னகையுடனும் அதை ஏற்றுக் கொள்கிறார்.

நிக்கின் மீது மக்கள் வைக்கும் நம்பிக்கையானது அவருடைய வாழ்க்கையைப் பார்த்து வந்தது. கைகளும் கால்களும் இல்லாத ஒரு நபர் இத்தனை தூரம் ஆனந்தமாகவும், நம்பிக்கையாகவும் வாழ முடியுமெனில் நம்மால் வாழ முடியாதா? எனும் கேள்வியை நிக்கின் வாழ்க்கை பல கோடி மக்களின் இதயங்களில் கிளறி விட்டிருக்கிறது!

காரணம் நிக் பல்வேறு கடின நிலைகளைக் கடந்திருக்கிறார்.

பதின் வயதுகளில் அவருடைய இதயத்தில் அலட்டும் கேள்வி காதல் சார்ந்தது! தன்னால் ஒரு பெண்ணுடன் காதல் கொள்ள முடியுமா? கையில்லாத ஒருவனை யாரேனும் காதலிக்க முடியுமா? காதலிப்பார்களா? அப்படி ஒரு அதிசயம் நிகழுமா? எனும் கேள்விகள் அவருடைய மனதில் எழுந்து கொண்டே இருக்கும்!

படிக்கும் காலத்தில் வேலை சார்ந்த சிந்தனைகள் எழும். தன்னால் என்ன வேலை செய்ய முடியும் என்பது அவருடைய வருத்தம். பெற்றோரோ “அக்கவுண்டிங்” பண்ணுப்பா என அறிவுரை சொன்னார்கள். இவருக்கு எண்களோடு நல்ல பரிச்சயம் உண்டு. அதை வைத்துக் கொண்டு வாழ்க்கையை ஓட்டி விடலாம் என்பதே அவர்களுடைய சிந்தனை.

சக நண்பர்களுடைய கேலியையும், கிண்டலையும் பொறுத்துக் கொள்ளவும், எதிர்கொள்ளவும் நகைச்சுவைத் திறன் வேண்டும். அதை நிக் வளர்த்துக் கொண்டார். பின்னர் அவர்களே வியக்கும் அளவுக்கு விமர்சனங்களை வெகு இலகுவாக எடுத்துக் கொண்டார்.

இவையெல்லாம் ஏதோ ஒரு நள்ளிரவில் கதவைத் தட்டி கடவுள் வந்து கொடுத்துவிட்டுப் போகவில்லை. அவருடைய ஒவ்வொரு நாள் வாழ்க்கை அனுபவங்களும், இறை நம்பிக்கையும், பிரார்த்தனைகளும் தான் உருவாக்கிக் கொடுத்தன.

பின் நண்பர்கள் குழுவில், பள்ளிக்கூடத்தில், சர்ச் மீட்டிங்களில் பேச ஆரம்பித்தபிறகு தான் அவருடைய தன்னம்பிக்கை இன்னொரு பரிமாணத்தை எட்டியது.

**கைகள் இல்லாத தன்னால் இன்னொரு மனிதனுக்கு நம்பிக்கை கொடுக்க முடிகிறதே என அவர் வியந்தபோது தான் அவருடைய வாழ்க்கையின் அர்த்தமும் புரிந்தது!**

மக்களோடு பேசுவது, மக்களுக்கு நம்பிக்கை அளிப்பது போன்ற செயல்களே தனக்கு மனநிறைவை அளிப்பதை நிக் கண்டுகொண்டார். தனக்கு வருமானம் வரக்கூடிய வேலையை விட தனக்கு மன நிறைவு தரக்

கூடிய வேலையைச் செய்ய வேண்டும் எனும் அவருடைய பிடிவாதம் தான் அவரைப் பேச்சாளர் ஆக்கியது.

இத்தனைக்கும் பெற்றோர் எதிர்த்தார்கள். ஒரு வருமானம் வர வேலையைப் பாரு. அப்போது தான் உன்னால் வாழ்க்கையை இனிதாக ஓட்ட முடியும் என அட்வைஸ் வேறு சொன்னார்கள். நிக்கோ பிடிவாதமாய் இருந்தார். தன்னைக் கடவுள் அழைத்தது கணக்கு போட அல்ல, பிறருடைய சோகங்களுக்கு ஆறுதலாக என்பதை அவர் உணர்ந்தார்.

முதலில் வருமானத்தையோ, சம்பாத்தியத்தையோ அவர் பார்க்கவில்லை. முழு ஆனந்தமாய் எல்லாவற்றையும் செய்தார். அவருக்கு இறை ஆசீர் கூடவே இருந்தது. உலகம் முழுவதும் சுற்றவும், உலக மக்களோடு பழகவும், கூடவே நல்ல வாழ்க்கை வாழவும் வாய்ப்பு உருவானது. தான் மட்டுமல்லாமல் இன்னும் பலரையும் வாழ வைக்கக் கூடிய அளவுக்குப் பொருளாதார பலமும் அவருக்கு வாய்த்தது!

என்ன வந்தாலும் அவர் மனதளவில் எளிமையாகவே இருக்கிறார். என் பணி பிறரை ஊக்குவிப்பது. அதுவே எனது இறையழைத்தல் எனும் மிக எளிய சிந்தனை அடிப்படையில் தான் அவருடைய வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது.

# 15




ஆக்சிஜனைப் பார்த்திருக்கீங்களா?

இப்படி ஒரு கேள்வியைக் கேட்டால் என்னை வித்தியாசமாகப் பார்ப்பீர்கள் என ஆரம்பிக்கிறார் நிக். நமது உயிருக்கும், வாழ்க்கைக்கும் மிக முக்கியமான விஷயம் இந்த ஆக்சிஜன். மூச்சை உள்ளிழுக்கும் போது ஆக்சிஜன் நமது உடலுக்குத் தேவையான சக்தியாக மாற்றம் பெறுகிறது. நாம் சுவாசிக்கும் ஆக்சிஜனில் பெரும்பகுதி மூளைக்குச் சென்று மூளையைச் சுறுசுறுப்பாக வைத்திருக்க உதவுகிறது. மூளைக்கு நிறைய ஆக்சிஜன் வேண்டும் என்பது தான் "மூச்சுப் பயிற்சி"யின் அடிப்படை.

எல்லோருக்குமே ஆக்சிஜனைப் பற்றித் தெரியும். அதன் பயன்கள் தெரியும். அது இல்லாவிட்டால் வாழ்வது இயலாத காரியம் என்பது தெரியும். ஆனால் யாரேனும் அதைப் பார்த்ததுண்டா? ஐயையோ ஆக்சிஜனைப்

பார்க்கவில்லை, அதனால் என்னால் அதை நம்ப முடியாது என்று நினைப்பதுண்டா? இல்லை!

நாம் ஆக்சிஜன் நம்மைச் சுற்றி இருப்பதாக நம்புகிறோம். அந்த நம்பிக்கை நமது சுவாசத்தை வலுவாக்குகிறது. வாழ்க்கையை நகர்த்துகிறது. நம்முடைய விருப்பம் இல்லாமலேயே சுவாசம் நமக்குள் பயணம் செய்து கொண்டே இருக்கிறது!

**ஆக்சிஜனை நம்பும் நாம், கடவுளை பலவேளைகளில் நம்புவதில்லை.** கண்டால் தான் நம்புவோம் என பிடிவாதம் பிடிக்கிறோம். கடவுள் இருக்கிறார் என்பதை நிரூபித்தால் தான் அதுவும் தனிப்பட்ட முறையில் நிரூபிக்கப்பட்டால் தான் பலரும் கடவுளை நம்பவே தயாராவார்கள். நம்பிக்கை வாழ்க்கையின் அடிப்படை. எனது வாழ்க்கைப் பாதையில் இறை நம்பிக்கை எவ்வளவு தூரம் உண்மையானது எவ்வளவு தூரம் வலிமையானது என்பதை உணர்ந்தேன் என்கிறார் நிக்.

பலரும் இறை நம்பிக்கையை தன்னம்பிக்கையோடும், உளவியல் தைரியத்தோடும் ஒப்பிடுகிறார்கள். நிக்கைப் பொறுத்தவரை இவை வெகு தூரத்தில் இருக்கின்றன. அவருடைய வாழ்க்கையை இறைநம்பிக்கை வழிநடத்திச் செல்கிறது. காரணம் “காணாமலேயே நம்பும்” மனம் அவருக்கு வாய்த்திருக்கிறது.

“நாளைய தினம் தனது கையில் என்ன வைத்திருக்கிறது என்பது தெரியாது, ஆனால் நாளைய தினம் என்பதே கடவுளின் கையில் தான் இருக்கிறது என்பதை நான் நம்புகிறேன்” என தத்துவார்த்தமாய்ப் பேசுகிறார் நிக்.

கண்ணுக்குத் தெரியாத ஒரு விஷயத்தின் மீது நம்பிக்கை வைப்பதற்கு மிகுந்த மன வலிமையும், ஆழமான பற்றுறுதியும் அவசியமாகிறது. சில வேளைகளில் எந்தப் பாதை நம்மை எங்கே கொண்டு சேர்க்கும் எனும் விஷயமே தெரியாது. பாதை சரியானதா, தவறானதா என்பதே புலப்படாது. நாம் செல்வது பாதை தானா என்பதே புரியாத கும்மிருட்டாய்க் கூட இருக்கலாம். **அந்த நேரங்களிலெல்லாம் நமது பாதங்களுக்குக் கீழே பரவும் வெளிச்சமாக, நமது தூரத்துக் கலங்களை வெளிச்சத் துளியாகத் தெரிவது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை தான்.**

**அத்தகைய உயர்வான ஆழமான நம்பிக்கை கொள்பவர்கள் வாழ்க்கையின் சின்னச் சின்ன துயரங்களில் விழுந்து உடைவதில்லை. தற்கொலை செய்து கொள்வதில்லை. அழுது புரண்டு வாழ்க்கையைச் சபிப்பதில்லை. எதிர்நோக்குடன் வாழ்வார்கள்.**

ஒருமுறை கேத்தி எனும் பெண்ணிடமிருந்து நிக்கிற்கு ஒரு கடிதம். சோகத்தைச் சுமந்து வந்திருந்தது. அப்போது தான் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தார் கேத்தி. அதுவல்ல பிரச்சினை, அவளுக்கு ஒரு கால் இல்லை. சின்ன வயதில் ஏற்பட்ட ஒரு நோயினால் அவருடைய கால் எடுக்கப்பட்டிருந்தது.

இப்போது காலும் போய், வேலையும் போய்விட்ட இரட்டைச் சோகம் அவளுக்கு. வாழ்க்கையில் பிடிமானம் இல்லாத போது பல்வேறு சிந்தனைகள் அலட்டும். அப்படியே அவளையும் சிந்தனைகள் அலட்டின.

“எனக்கு மட்டும் ஏன் இப்படி?”

இந்தச் சிந்தனை தான் அவளை அலட்டினது. ஏற்கனவே ஒரு கால் போய்விட்டது. இப்போது இருக்கும் வேலையும் போய்விட்டது. ஏன் சோதனைகள் என்னைத் துரத்தித் துரத்திக் கொத்துகின்றன என்பது அவளுடைய இதயத்தில் ஓடிய சிந்தனை.

விரக்தியின் விளிம்பில் இருந்த ஒரு நாள் எதேச்சையாய் நிக்கின் வீடியோ ஒன்றைக் கிளிக்கினாள். அது அவளுடைய வாழ்க்கையைப் புரட்டிப் போடும் என அவள் நினைத்திருக்கவில்லை. வீடியோவில் கைகளும் கால்களும் இல்லாத நிக் உற்சாகமாய் பேசிக்கொண்டிருந்தார். சிரித்துக் கொண்டிருந்தார். ஜோக் அடித்துக் கொண்டிருந்தார்.

அவளால் நம்பவே முடியவில்லை! மீண்டும் மீண்டும் பார்த்தாள். அவளுடைய இதயத்தைச் சுற்றிப் பதியமிடப்பட்டிருந்த இருட்டுகள் எல்லாம் வினாடி நேரத்தில் பறந்தோடிப் போயின. கண்களில் தன்னம்பிக்கையும், இதயத்தில் வாழ்க்கையின் மீதான ஆர்வமும் அதிகரித்தது.

“நிக்.. என்னுடைய வாழ்க்கையைப் புரட்டிப் போட்டு விட்டீர்கள். உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை. உங்களைக் கட்டியணைத்துக் கண்ணீர் விடவேண்டும் போலிருக்கிறது” என்று எழுதினாள்.

நம்மில் பலரும் சோதனைகள் வரும்போது “எனக்கு மட்டும் ஏன் இப்படி?” எனும் கேள்வியையே எழுப்புகிறோம் இல்லையா? எனக்கு ஒரு நிகழ்வு ஞாபகத்துக்கு வருகிறது!

ஆர்தர் ஆஷேக்கு இருதய அறுவை சிகிச்சை! டென்னிஸ் உலகின் சூப்பர் ஸ்டார். ஏராளமான போட்டிகளில் வெற்றிக் கோப்பைகளைத் தட்டிச் சென்றவர். விம்பில்டன் வெற்றிக் கோப்பையை முத்தமிட்டவர். அவருக்கு இருதய அறுவை சிகிச்சை நடந்தபோது அவருடைய ரசிகர்களெல்லாம் பரபரப்புடனும், துடிக்கும் மனதுடனும் காத்திருந்தார்கள். சிறந்த மருத்துவக் குழு அறுவை சிகிச்சையை நடத்தியது. அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது. ஆஷே ஆனந்தமடைந்தார். அவருடைய ரசிகர்கள் உற்சாகக் கூக்குரல் எழுப்பினார்கள். ஆனால் அவர்கள் அறிந்திருக்கவில்லை அவருடைய அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தப்பட்ட இரத்தத்தில் எய்ட்ஸ் நோய்க் கிருமிகள் இருந்தன என்பதை!



நாட்கள் நகர்ந்தன. ஆஷேயின் உடலில் மாற்றங்கள் ஏற்படத் துவங்கின. இரத்தப் பரிசோதனை செய்த ஆஷே அதிர்ச்சியின் உச்சத்துக்கு எறியப்பட்டார். அவருக்கு எயிட்ஸ் நோய்.

மரணத்தின் வாசல் கதவுகள் தனக்கு முன்பாக அகலத் திறந்து கிடப்பதை ஆஷே கண்டார். அவருடைய மனதுக்குள் கண்ணீர் அணை உடைத்துப் பாய்ந்தது. இதய நோயாளியாய் இறந்தால் சமூகம் வித்தியாசமாய்ப் பார்க்காது. ஆனால் எயிட்ஸ் நோயினால் இறந்தாலோ தன்னுடைய வாழ்க்கையை அல்லவா வேடிக்கை பார்க்கும் ? பத்திரிகைகள் ஆஷேயின் நோயைக் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பின. ஆஷே

ஆத்திரப்படவில்லை. நம்பியவர்கள் பலர் அருவருத்தார்கள் ஆஷே தற்கொலை செய்து கொள்ளவில்லை.

டென்னிஸ் விளையாட்டில் எத்தனையோ இளைய தலைமுறை வீரர்களுக்கு வழிகாட்டியாகவும், உந்துதலாகவும் இருந்த வீரருக்கு எயிட்ஸ் நோய் என்றதும் அவருக்கு முன்னால் விரிந்து கிடந்த பூஞ்சோலை திடீரென தீப்பிடித்தத் தோட்டம் போல கருகிப் போய்விட்டது. ஆனாலும் அவர் தன்னுடைய நேர் சிந்தனைகளையும், மன தைரியத்தையும், மகிழ்ச்சியையும் இழந்து விடவில்லை.

உண்மை அறிந்த பத்திரிகை நண்பர் ஒருவர் ஆஷேயிடம் கேட்டார்.

‘உங்களுக்கு மட்டும் ஏன் இப்படி?’

ஆஷே புன்னகையுடன் சொன்னார்.

‘எனக்கு மட்டும் ஏன் இப்படி என்று நான் இப்போது கேட்க மாட்டேன். அப்படிக் கேட்டால் நான் மேலும் பல எனக்கு மட்டும் ஏன் இப்படி?களைக் கேட்க வேண்டும்..’

‘நீங்கள் சொல்ல வருவது எனக்குப் புரியவில்லை’ பத்திரிகை நண்பர் நெற்றி சுருக்கினார்.

**‘சோகமான செய்திகள் வரும்போது எனக்கு ஏன் இப்படி? என்று கேட்பது நியாயம் என்றால் மகிழ்ச்சியான தருணங்கள் வரும்போதும் அதே கேள்வியை எழுப்பவேண்டும் அல்லவா? ஆனால் நான் எழுப்பவில்லையே! என்னுடன் விளையாடிய எத்தனையோ பேரை வெற்றி கொண்டேன். அப்போது –எனக்கு மட்டும் ஏன் இப்படி? –என்று நான் கேள்வி எழுப்பவில்லை! எனக்கு அழகான மனைவி வாய்த்த போது நான் இந்தக்**

**கேள்வியைக் கேட்கவில்லை. அழகான குழந்தை பிறந்த போது இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. இன்னும் எத்தனையோ நல்ல வரங்கள் எனக்கு வழங்கப்பட்டபோது நான் கேட்காத எனக்கு மட்டும் ஏன் இப்படி என்னும் கேள்வியை நான் இப்போதும் கேட்க மாட்டேன்'** ஆஷே சொல்ல பத்திரிகை நண்பர் ஆச்சரியப்பட்டுப் போனார்.

இந்த வார்த்தைகள் நம் ஒவ்வொருவர் மனதிலும் கல்வெட்டாய் பொறித்து வைக்க வேண்டிய வார்த்தைகள். நம்முடைய வாழ்க்கையில் நாம் எத்தனையோ நல்ல வரங்களைப் பெற்றிருக்கிறோம். எத்தனையோ நல்ல வளங்களைப் பெற்றிருக்கிறோம். நல்ல நண்பர்கள், நல்ல உணவு, நல்ல உடை, நல்ல பெற்றோர், நல்ல உறைவிடம் இவையனைத்துமோ, இவற்றில் பலவோ நாம் பெற்றிருக்கிறோம்.

வாழ்க்கையைத் தன்னம்பிக்கையோடு எதிர்கொள்ளப் பழகும்போது **"எனக்கு மட்டும் ஏன் இப்படி?"** எனும் நெகடிவ் சிந்தனைகள் ஒதுங்கி வழிவிடும்.

கைகளோ, கால்களோ இல்லாமலேயே நிக்கின் வாழ்க்கை அதை நமக்கு எடுத்துக் காட்டுகிறது!

இந்த உடல் குறைபாடுகளை வைத்துக் கொண்டு அவர் தண்ணீரில் "**ஷர்ஃபிங்**" செய்த கதையைப் பார்க்க வேண்டுமே!

## 16



பெத்தனி ஹாமில்டன்.

இந்தப் பெயர் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அமெரிக்காவிலுள்ள பிரபல ஸர்ஃபர். கடலலைச் சறுக்கல் பார்த்திருப்பீர்களே அது தான் ஆங்கிலத்தில் ஸர்ஃபிங் எனப்படுகிறது. 1990ம் ஆண்டு பிப்பிரவரி 8ம் தியதி பிறந்தவர். கடலலைச் சறுக்கல் அவருடைய சுவாரஸ்யமான ஹாபி. அதில் அவருக்கு அதீத ஆர்வம்.

2003ம் ஆண்டு அக்டோபர் 31ம் தியதி. அதிகாலையிலேயே கடலலைச் சறுக்கல் ஆர்வம் காரணமாக கடலுக்குச் சென்றார். ஹவாய்த் தீவுகள் ஒன்றில் அவரும் அவருடைய தோழி அலானா பிளாஞ்சர்ட்,

அலானாவின் தந்தை மற்றும் சகோதரர் என நான்கு பேரும் அந்த கடலில் காலையிலேயே அலைச்சறுக்கலில் லயித்திருந்தார்கள்.

சுமார் 7.30 மணிக்கு அந்த அதிர்ச்சிச் சம்பவம் நிகழ்ந்தது!

பெத்தனி தனது கடலலைச் சறுக்கலுக்கான கட்டையில் ஹாயாகப் படுத்துக் கிடந்தார். அவருடைய இடது கை கடல் நீரில் விளையாடிக் கொண்டிருந்தது. திடீரென ஒரு சுறாமீன் அவருடைய இடது கையைக் கடித்துத் துண்டாக்கியது. அதிர்ச்சியிலும், வலியிலும் கதறினார் பெத்தனி.

கூட இருந்தவர்கள் அவரை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். ஆனால் மருத்துவமனையைச் சென்றடையும் முன்னே அவருடைய உடலிலிருந்த 60 சதவீதம் இரத்தமும் வடிந்து விட்டிருந்தது. ரொம்பவே ஆபத்தான நிலையில் இருந்தார் அவர். போதாக்குறைக்கு அந்த மருத்துவமனையில் எல்லா ஆபரேஷன் அறைகளும், டாக்டர்களும் பிஸி.

நல்ல வேளையாக ஒரு மனிதர் தன்னுடைய மூட்டு ஆபரேஷனைத் தள்ளி வைத்து பெத்தனியில் ஆபரேஷனை நடத்த சம்மதித்தார். ஆபரேஷனை நடத்தியது யார் தெரியுமா? பெத்தனியின் சொந்தத் தந்தை! அதிர்ச்சி, கலக்கம், அழுகை, துயரம் பயம் எனும் எல்லா உணர்ச்சிகளோடும் அவர் அந்த ஆபரேஷனைச் செய்தார். அதாவது பெத்தனியில் இடது கையைத் துண்டித்து!

ஏழு நாட்கள் பெத்தனி மருத்துவமனையில் இருந்தார். எல்லோரும் நினைத்தார்கள் அவருடைய கடலலைச் சறுக்கல் ஆர்வமும், முயற்சியும் அத்துடன் முடிந்து போய்விடும் என்று! ஆனால் அது தான் நடக்கவில்லை.

கையில்லாமல் அதிர்ச்சியுடன் விழித்த பெத்தனியின் மனதில் அதைத் தொடர்ந்து எழுந்த கேள்வி “இனிமேல் எப்போது ஸர்ஃபிங்” என்பது தான்!

ஒரு மாதம் கூட முடிந்திருக்கவில்லை. மீண்டும் ஸர்ஃபிங் கட்டையில் காலை வைத்தார். முதலில் கொஞ்சம் பெரிய கட்டை, ஸ்பெஷல் கட்டை என்றெல்லாம் பழகி விரைவிலேயே சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்ளவும் ஆரம்பித்தார். அதன் பின் பத்துக்கும் மேற்பட்ட பதக்கங்களையும் வாங்கி வியக்க வைத்திருக்கிறார்!



பதின் மூன்று வயதில் அதிர்ச்சியான ஒரு நிகழ்வு. அதைத் தாண்டி வந்து வாழ்க்கையில் வெற்றியாளராகப் பரிமளிப்பதில் அவருடைய நம்பிக்கை இருக்கிறது! என்னைக் கடவுள் தான் காப்பாற்றினார். அவருடைய அன்பையே நான் மக்களிடம் சொல்கிறேன் என்கிறார் தன்னம்பிக்கை மிளிர.

“எனக்கும் கொஞ்சம் ஸர்ஃபிங் சொல்லிக் கொடுங்களேன்” நிக் கேட்டார்.

“கண்டிப்பா” என பெத்தனி ஒத்துக் கொள்ள, நிக் உற்சாகமானார். அவருக்கு ஆச்சரியமாக இருந்தது!

பெத்தனி கூடவே இருந்த இரண்டு கடலலைச் சறுக்கு வீரர்களுக்கு நிக்கை அறிமுகம் செய்து வைத்தார். நிக்கிற்கு உள்ளுக்குள் உதறல் எடுத்தது. ஆனாலும் அவருக்கு ஸர்ஃபிங் போகவேண்டும் எனும் ஆர்வம் அதிகமாய் இருந்தது.

முதலில் புல் தரையில் ஸர்ஃபிங் போர்டை வைத்து அதன் மீது அமர்வது எப்படி, பேலன்ஸ் செய்வது எப்படி என பழக்கினார்கள்.

அதன்பிறகு பயிற்சியாளர்களின் போர்டில் அமரவைத்து அவரை கடல் அலையில் ஒரு சுற்று சுற்றி வந்தார்கள். நிக் விழுந்துவிடுவோமோ எனும் நிலையில் அமர்ந்திருந்தார். ஆனாலும் அவருக்குள் உற்சாகம் பெருகி வழிந்தது.

பின்னர் பெத்தனி தனது போர்டில் அவரை அமரவைத்து கடலலையில் சறுக்க ஆரம்பித்தார். இவருக்கு உள்ளுக்குள் உதறல். 360 டிகிரி சுற்று, அது இது என பயணம் இனிதே முடிந்தது! நிக்கிற்குத் திருப்தியில்லை.

“நான் தனியா போலாமா?”

நிக்கின் கேள்விக்கு அருகில் இருந்தவர்களெல்லாம் கொடுத்த பதில் என்ன தெரியுமா?

“நெசமாவே போறீங்களா?”

“உங்களால பேலன்ஸ் பண்ண முடியுமா?”

“கரணம் தப்பினா மரணம் தான் தெரியும்ல...”

போற வழிக்கு ஒரு நல்ல வார்த்தை சொல்லத் தெரியாத பசங்க என உள்ளுக்குள் நினைத்தாலும் கட்டையில் ஏறி அலையில் சுழன்றே தீர்வது என அவர் முடிவெடுத்தார்.

தனியே அமர்ந்தார்.

கடலுக்குள் நுழைந்தார்.

முதல் அலை வந்தது! அலையில் சறுக்க முனைந்தவரை அப்படியே அலேக்காகத் தூக்கிக் கீழே போட்டுப் புரட்டியது!

இரண்டாவது முறை!

மூன்றாவது முறை!

இப்படி தொடர்ச்சியாக ஆறு முறை தோல்வி. ஆனாலும் விட்டு விடவில்லை. ஏழாவது முறை அலை வந்தபோது அந்த அலையில் சறுக்கி அதன் மேலே சென்றார் நிக். அவருடைய உற்சாகம் கடல் அலையை விட உயரமாய் எழுந்தது. ஆனந்தக் கூச்சலிட்டார்!









எது இல்லாவிட்டாலும், நம்பிக்கை இருந்தால் எதையும் சாதிக்கலாம்! என்பதையே நிக்கின் கடலலைப் பயணம் சொல்கிறது!

17



ஒரு கதை சொல்லப் போறேன்!

ஒரு ஊர்ல ஒரு அம்மா யூனிகார்ன் இருந்தது. யூனிகார்ன் என்பது ஒற்றைக் கொம்புள்ள பறக்கும் குதிரை. அந்த அம்மா யூனிகான் ஒரு குட்டியிட்டது. அந்தக் குட்டிக்கு சிறகுகளே இல்லை.

அந்த குட்டி யூனிகார்ன் வெளியே சென்று பார்த்தபோது வானத்தில் குதிரைகள் பறந்து கொண்டே இருந்தன. இதற்கு மட்டும் சிறகுகளே இல்லை.

“ஏன்மா எனக்குச் சிறகுகளே இல்லை”

“உனக்குச் சிறகுகள் முளைக்கவில்லை”

ஒரு சின்னப் பையன் இந்த குட்டி யூனிகார்னின் வருத்தத்தைப் பார்த்தான். அதன் அருகில் சென்று அன்புடன் பேசினான்.

“கவலைப்படாதே. நான் உனக்கு பிளாஸ்டிக் சிறகுகளை உருவாக்கித் தருகிறேன்.”

கொஞ்ச நாள் கஷ்டப்பட்டு அந்தப் பையன் ஒரு ஜோடிச் சிறகுகளை உருவாக்கி அதற்கு மாட்டி விட்டான்.

“நானும் உன் முதுகில் ஏறிக் கொள்ளலாமா?”

“கண்டிப்பா” சொன்னது யூனிகார்ன்.

சிறுவன் அதன் முதுகில் ஏறினான். குதிரை பறக்க முயன்றது. கொஞ்சம் கொஞ்சமாய் அது பறந்தது!

“வாவ்.. சிறகு வேலை செய்கிறது, நான் பறக்கிறேன்” என அது ஆனந்தக் கூச்சலிட்டது!

அது சிறுவனை பின்னர் கீழே இறக்கி விட்டது.

சிறுவன் வீடு திரும்பினான்.

யூனிகார்ன் வானத்தில் பறந்தது. உற்சாகமாய், ஆனந்தமாய். அதன் பிறகு அது மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்தது.

இந்தக் குட்டிக் கதை நிக் எழுதியது! இதை அவர் எழுதியபோது அவருக்கு வயது ஆறு!

கைகளும், கால்களும் இல்லாத நிலை அவரை எந்த அளவுக்கு பாதித்திருந்தது. சிந்தனைகளை அது எப்படி ஆக்கிரமித்திருந்தது என்பதன்

உதாரணமாக இதைப் பார்க்கலாம். ஆனால் அந்தக் கதையின் முடிவு சொல்லும் ஆனந்த விஷயம் கவனிக்கத் தக்கது!

ஆனந்தமாய் வாழ்வதும், ஒரு நம்பிக்கைக் குறியீடாய் அந்த கதை முடிவதும் மகிழ்ச்சியான விஷயங்கள்.

ஒருவன் விதைக்கச் சென்றான். சில விதைகள் வழியோரமாய் விழுந்தன. வானத்துப் பறவைகள் வந்து அந்த விதைகளை தின்று விட்டன. சில விதைகள் முட்செடிகளிடையே விழுந்தன. விதைகள் வளர்ந்தபோது முட்செடிகள் அவற்றைக் கிழித்து அழித்து விட்டன. சில விதைகள் பாறை மீது விழுந்தன. முளைத்தன, ஆனால் வேர் பிடிக்க முடியாமல் காய்ந்து விட்டன. சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவை முப்பது மடங்கு, அறுபது மடங்கு, நூறு மடங்கு என பயன் கொடுத்தன!

இந்த விவிலியக் கதையை நிக் அடிக்கடிக் குறிப்பிடுகிறார். விதைகளை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த விதைகள் நமது இதய நிலத்தில் பதியமிடப்பட வேண்டும். அது விளைச்சல்களைத் தரவேண்டும்.

ஒவ்வொரு நாளும் நமது வாழ்க்கை ஒரு எதிர்நோக்குடன் ஆரம்பிக்க வேண்டும். அது பயந்தராத நாளாய் இருக்கக் கூடாது! வாய்ப்புகள் எல்லா இடங்களிலும் உண்டு. நாம் எப்படி வேண்டுமானாலும் மாறுவதற்கான வாய்ப்புகளும் உண்டு. அத்தகைய வாய்ப்புகளைக் கண்டறியவும் வேண்டும்.

தினமும் காலையில் நிக்கின் பெற்றோர் விதைகளை விதைப்பதுண்டு.

**“நிக்கோலஸ் இந்த நாள் நல்ல நாளாய் அமையட்டும். உன்னால முடிஞ்சதை நீ செய். மிச்சத்தைக் கடவுள் பார்த்துக் கொள்வார்”** எனும்

நம்பிக்கையை தினமும் விதைப்பார்கள். அந்த விதை அவருடைய மனதுக்குள் ஆழமாக விழும்.

கூடவே இருப்பவர்கள் முட்செடிகளைப் போல நெரித்து விடாமல் இருப்பது விதைக்கும் கிடைக்கும் நல்ல சூழல். விவிலியத்தில் வரும் அந்த உவமை இறை வார்த்தையை இதயத்தில் பதியமிடுவது, அது செயலாற்றும் விதையாய் மாறுவது எனும் இரண்டு பாகங்களை உள்ளடக்கியது!

நிக்கின் வாழ்க்கைக்கு உரமூட்டும் செய்தியாக அதை அவர் பார்க்கிறார். அதன் பின் அவருடைய யூனிகார்ன்களுக்கு பிளாஸ்டிக் சிறகுகள் தேவையிருக்கவில்லை. அவை சுயமாகவே பயணிக்கும் வல்லமையைப் பெற்று விட்டன.

**எல்லாம் இருந்தால் தான் மகிழ்ச்சியும் ஆனந்தமும் எனும் நிலையைத் தாண்டி, இருப்பதில் நிறைவையும், மகிழ்வையும் பெற்றுக் கொள்ளலாம் எனும் சிந்தனைத் தளத்தில் அவருடைய வாழ்க்கை அமைந்து விட்டது!**

# 18




சிங்கப்பூரில் ஒரு உரையாற்றிக் கொண்டிருந்தார் நிக்.

அந்த நிகழ்ச்சி சிறப்பாக உயர் அதிகாரிகள், தொழிலதிபர்கள் போன்றவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒன்று. அந்த நிகழ்ச்சி சிறப்பாக முடிந்தது. நிகழ்ச்சி முடிந்த போது நிக்கை நோக்கி ஓடி வந்தார் ஒருவர். மிக நேர்த்தியாக கோட் சூட் போட்டிருந்தார். அவர் மூன்று வங்கிகளுக்குச் சொந்தக்காரர்.

“நிக் எனக்கொரு உதவி வேணும்”

“சொல்லுங்க”

“என்னோட மகள் ரொம்ப அழகான சூட்டிகையான பெண். பதினாலு வயசாகுது. ஆனா எப்போ கண்ணாடி முன்னாடி போய் நின்னாலும் நான் அழகா இல்லைன்னு சொல்றா மூட் அவுட் ஆயிடறா. என்ன சொன்னாலும் புரிஞ்சுக்க மாட்டேங்கறா. நீங்க தான் ஹெல்ப் பண்ணனும்”

அது ஒரு தந்தையின் துயரம். தன் மகளுடைய மன நிலையை மாற்ற வேண்டும் என துடிக்கின்ற தந்தையின் ஏக்கம். இன்றைக்கு நிறைய இளைஞர்கள் பலர் இத்தகைய மனநிலையில் தான் வாழ்கிறார்கள். தன்னையே ஏற்றுக் கொள்ளாத நிலை. தான் சரியாக இல்லை எனும் ஒரு தவறான மனநிலை. ஒருவகையான தாழ்வு மனப்பான்மை.

சின்ன வயதிலேயே நாம் நம்மை ஏற்றுக் கொள்வது ரொம்ப முக்கியம். நம்மை நாமே ஏற்றுக் கொள்ளாவிட்டால் பிறர் நம்மை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. நம்மை நாமே பாராட்டாவிட்டால் பிறர் பாராட்டப் போவதில்லை. பறவையாய் இருந்தால் கூட நம்மை ஒரு நத்தை ஓட்டுக்குள் அடக்கிக் கொண்டு ஒரு நத்தையாகவே வாழ்ந்து விடும் மனநிலை இது!

அந்த சிங்கப்பூர் தந்தை ரொம்பவே அன்பானவர். மகள் கேட்டு எதையும் மறுத்திருக்க நியாயமில்லை. பொருளாதார ரீதியாக எதுவும் குறைவுபட்டிருக்க வாய்ப்பே இல்லை. இருந்தாலும் அவருடைய மகள் குற்ற உணர்வில் இருக்கிறாள். தான் எதிலோ குறைவு உள்ளவராய் இருக்கிறோம் எனும் ஒருவிதமான ஆழ் உணர்வு அவளை ஆக்கிரமித்திருக்கிறது.

நிக் பதின் வயதுக் குழுக்களில் பேசும்போது அதைக் குறித்து அதிகமாய்ப் பேசுகிறார்.

“எத்தனை பேர் என்னுடன் நட்பாய் இருக்க விரும்புகிறீர்கள்?”

எல்லா கைகளும் உயரும்.

“அப்படியா! மகிழ்ச்சி. அப்படியானால் நான் எப்படி இருந்தாலும், என்னென்ன குறைபாடு இருந்தாலும் என்னோடு நட்புடன் இருக்க உங்களுக்கு விருப்பம் தானே”

“ஆம்…”

கொஞ்ச நேர மவுனம்.

“பின் ஏன் உங்கள் சக தோழனையோ தோழியையோ வெறுக்கிறீர்கள். கையே இல்லாத என்னை நட்புடன் பார்க்கிறீர்கள். அருகில் ஒருவர் உங்களைப் போல முடி வெட்டிக் கொள்ளவில்லையேல் ஒதுக்குகிறீர்கள். உங்களைப் போல வசதி இல்லையேல் வெறுக்கிறீர்கள். உங்களைப் போல ரசனை இல்லையேல் வெறுக்கிறீர்கள் ..ஏன்?”

கேள்வி பதின் வயதினரிடையே ஒரு அனலாய் உலவும்.

“இன்னும் ஒரு படி மேலே சொல்ல வேண்டுமெனில், ஏன் உங்களை நீங்களே ஏற்றுக் கொள்ளவில்லை. உங்களுடன் ஏன் நீங்களே நட்பாக இல்லை? உங்களுடன் நீங்கள் நட்பாக இல்லையேல் வேறு யார் நட்பாக இருக்க முடியும்?”

நிக்கின் பேச்சு இளம் மனதை தட்டி எழுப்பும்.

“நான் உங்களை நேசிக்கிறேன். நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அப்படியே நேசிக்கிறேன். நீங்கள் ஒரு கடுகளவு கூட மாற வேண்டாம். அப்படியே, உள்ளபடியே நீங்கள் அழகானவர்கள். ஏனெனில் நீங்கள் கடவுளின் பிள்ளைகள். கடவுள் தப்பு செய்வதில்லை. கடவுள் படைப்பில் பிழை இருப்பதில்லை. அவர் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு திட்டத்துக்காக படைத்திருக்கிறார். நம்மை நாமே ஏற்றுக் கொள்ளாதது கடவுளை அவமதிப்பதற்குச் சமம். நான் உங்களை நேசிக்கிறேன். நிஜமாகவே, உங்களை உள்ளபடியே நேசிக்கிறேன்”

**உண்மையான மகிழ்ச்சி அடுத்தவர்களை மகிழ்ச்சிப் படுத்துவதில் இருக்கிறது. உண்மையான மகிழ்ச்சி அடுத்தவர்களுடைய சோர்ந்து போன மனதை உற்சாகம் ஊட்டுவதில் இருக்கிறது. உண்மையான மகிழ்ச்சி இயலாதவர்களுக்கு வழங்குவதில் இருக்கிறது. அப்போது தான் நமது வாழ்க்கை அர்த்தம் அடைகிறது. அதில் தான் வாழ்க்கையின் மகத்துவம் இருக்கிறது.** அதை விட்டு விட்டு வெறுமனே நம்முடைய உடல் குறித்தோ, சூழல் குறித்தோ தாழ்வு மனப்பான்மையில் உழல்வது மிகவும் தவறு.

**அழகு என்பது வெளியே இருந்து வரும் வெளிச்சத்தினால் கிடைப்பதல்ல. உள்ளே ஒளிரும் வெளிச்சத்திலிருந்து வருவது. நமது உள்ளம் ஒளிவீசிக் கொண்டிருக்க வேண்டும். அப்போது தான் அந்த ஒளி பிறரையும் ஒளிர்விக்கும்.** உள்ளிருக்கும் ஒளி கண்களின் ஊடாக வெளிப்படும். நமது உற்சாகத்தின் மூலம் வளரும்.

உள்ளே வெளிச்சம் இல்லாவிட்டால் நமது ஆனந்தத்தை வெளியே இருக்கும் காரணிகளே நிர்ணயிக்கும். அப்போது நான் வெளிக் காரணிகளையே எப்போதும் சார்ந்து இருக்க வேண்டிய நிலை வரும். அது

நமது தொடர் ஆனந்தத்தைப் பாதிக்கும். எனவே உள்ளுக்குள் வெளிச்சத்தைக் கொண்டிருக்க வேண்டியது ரொம்ப ரொம்ப முக்கியம்.

இன்றைக்கு ஊடகங்களும், மீடியாக்களும் ஒரு தவறான தோற்றத்தை நம்மிடையே உருவாக்கிவிட்டன. கார் இருந்தால் தான் கவுரவம். ஃபேர் அன்ட் லவ்லி தேய்த்தால் தான் அழகு. காஸ்ட்லி நகை தான் வசீகரம். இப்படியெல்லாம் விற்பனையாளர்களின் சில்மிஷ விஷம் நமது இதயங்களில் நுழைந்து வேர் விட்டு வளர்ந்திருக்கிறது. அதனால் தான் மதிப்பீடுகளை விட்டு விட்டு அத்தகைய அளவீடுகளை நோக்கி நாம் ஓடுகிறோம். அது தவறான ஒரு பழக்கம்.


**நாம் எப்படி இருக்கிறோமோ அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். கடவுளின் கண்களுக்கு நாம் அழகு. பிறருடைய கண்களுக்கு அழகில்லையேல் பிழை நம்மிடமல்ல, அவர்கள் கண்ணில் தான்.** காரணம் படைத்தவருக்குப் பிடித்திருக்க வேண்டியதே முக்கியம். படைப்புக்குப் பிடிக்காவிட்டால் நமக்கென்ன கவலை?

பல வேளைகளில் நமக்கு இருக்கும் குட்டிக் குட்டிப் பிரச்சினைகளை பூதாகரமாய்ச் சிந்திக்கிறோம். நிக் ஒரு தடவை அப்படித் தான் செய்தார்.

மூக்கில் வந்த முகப்பரு அவருடைய தன்னம்பிக்கையைத் தகர்த்ததுண்டு. கைகள், கால்கள் இல்லாததை விட ஒரு முகப்பரு அவருடைய அழகைக் கெடுப்பதாய் நினைத்தார். அதை விலக்க ஆஸ்பத்திரியும் போனார். ஆனால் பின்னர் அத்தகைய சிந்தனைகளிலிருந்து முற்றிலும் விடுபட்டார். இப்போது கேட்டால்,. “சூப்பர் ஸ்டாருக்கே முகப்பரு வரும்” அதுக்கென்ன? என்பார்!

நாம் ஒரு வித்தியாசமான பிறவி. நாம் பிறர் நம்மை ஏற்றுக் கொள்ள வேண்டும் அந்தக் குழுவில் இணைய வேண்டும் என பாதி நேரத்தைச் செலவிடுவோம். பிறகு நாம் தனித்துத் தெரியவேண்டும் என்பதற்காக மீதி நேரத்தைச் செலவிடுவோம். பிறருடைய விமர்சனங்களைத் தூக்கிச் சுமக்கும் குப்பைத் தொட்டியா நமது மனசு. விமர்சனங்களை ஒதுக்குங்கள். அவை உங்கள் தன்னம்பிக்கையை உடைக்க அனுமதிக்காதீர்கள். நீங்கள் யார், எப்படி இருக்க வேண்டும் என்பதை நீங்களே தீர்மானியுங்கள். உங்களை நீங்கள் நேசியுங்கள்!

# 19




தென் அமெரிக்காவிலுள்ள கொலம்பியாவில் நடந்த விஷயம் ரொம்ப சுவாரஸ்யமானது!

2009ம் ஆண்டு, நிக் கொலம்பியாவுக்குச் சென்றார். பத்து நாட்கள் பயணம். ஒன்பது நகரங்களில் பேசவேண்டும். நிறைய தூரம் பயணிக்க வேண்டும். நகரங்கள் தூரம் தூரமாக இருந்தன.

நம்பிக்கை இருக்கும் இடத்தில் எல்லாமே சாத்தியமாகும். நம்பிக்கையை எட்டிப் பிடிக்க மனசு இருந்தால் போதும் என்பதில் நிக் எப்போதும் உறுதியாக இருப்பார். அவரைப் பொறுத்தவரை அவரை இயக்கும் சக்தியாக இறைவன் இருக்கிறார்.

எப்படி ஒன்பது இடங்களுக்கும் சென்று உரையாற்றுவது. ஒரே வழி பறப்பது தான்! ஏற்பாடு செய்தவர்கள் எட்டு பேர் அமரக் கூடிய ஒரு குட்டி விமானத்தை ஏற்பாடு செய்தார்கள். பைலட் இருவரைத் தவிர 6 பேர் அமரலாம்.

பைலட்களுக்கு ஆங்கிலம் தெரியவில்லை. பின் இருக்கையில் ஆறு பேர் அமர்ந்திருக்கிறார்கள். சட்டென விமானம் பிடிப்பை விட்டு விட்டு சரேலென தரையை நோக்கிப் பாய்கிறது. விமான அறிவிப்பு “மேலே போ, மேலே போ” என ஆங்கிலத்தில் அலறுகிறது.

நிக் திடுக்கிட்டார். “ஐயோ விமானம் விழப் போகிறதா?” என உள்ளுக்குள் உதறல். பைலட்களுக்கோ ஆங்கிலம் தெரியாது. இந்த அறிவிப்பு அவர்களுக்குப் புரியுமா புரியாதா? என அவருக்குள் ஒரு நடுக்கம்.

அருகில் இருந்தவரைத் தட்டிச் சொன்னார்.

“நாம வேகமா கீழே போறோம், பைலட்களுக்கு ஆங்கிலம் புரியாது. மேலே போன்னு சிஸ்டம் சொல்றதை மொழிபெயர்த்துச் சொல்லலாமா?”

அவர் நிக்கை ஒரு பார்வை பார்த்தார்.

“மொழி தான் தெரியாது. விமானம் கீழே போறது கூடவா பைலட்களால உணர முடியாது?” என்றார்.

கொஞ்ச நேரத்தில் விமானம் தரையிறங்கியது!

அப்போதுதான் ஒரு நிம்மதி வந்தது நிக்கிற்கு.

அருகில் இருந்தவர் பைலட்டிடம் நிக்கின் பதட்டத்தைக் குறித்துச் சொன்னபோது அவர் விழுந்து விழுந்துச் சிரித்தார்.

“விமானம் கீழே போவது எங்களுக்குத் தெரியும். ஏன்னா நாங்க தான் அதைக் கீழே இறக்கினோம். பொதுவா கீழே இறங்கும்போது இந்த மெஷின் சத்தம் போட்டு மேலே போன்னு சொல்லும், அதை நாங்க கண்டுக்கிறதில்லை. நீங்க பைலட்டை நம்பணும் நிக்” என்று சிரித்தார்.

நம்பிக்கை. எத்தனை இடங்களில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டியிருக்கிறது. **வாழ்வின் ஒவ்வோர் கணத்தையும் ஏதோ ஒரு நம்பிக்கை தான் நகர்த்துகிறது.** பெரும்பாலும் நாம் கண்ணால் காண்பதை மட்டுமே நம்புகிறோம். நிக்கின் இடது பாதத்தைப் போல. வலது பக்கமும் ஒரு குட்டிப் பாதம் உண்டு. ஆனால் அது வெளியே தெரியாது. எப்போதும் நிக்கின் ஆடைகளுக்குள் மறைந்து கொள்ளும். பலருக்கும் அப்படி ஒரு குட்டிப் பாதம் இருப்பதே தெரியாது!

காரணம் நாம் காணாத விஷயங்களில் நம்பிக்கை வைப்பதில்லை.

**நடக்கும் எனும் நம்பிக்கை தான் நம்மை வழிநடத்துகிறது.** அதில் சில குறிப்பிட்ட விஷயங்களை மட்டும் கவனத்தில் கொள்ளவேண்டும். சச்சின் டென்டுல்கரைப் போல ஒரு விளையாட்டு வீரராக வேண்டும் என நிக் ஆசைப்படுவதில்லை. ஒரு என்.பி.ஏ கூடைப்பந்து வீரராக வேண்டும் என விரும்புவதில்லை. காரணம் அவற்றுக்கான அடிப்படைத் தகுதிகள் வேறு. உலகின் பெரும்பாலான மக்கள் அந்த நிலைக்கு வருவதும் இல்லை.

ஆனால் ஆனந்தங்களைக் கண்டு கொள்ளமுடியும். தனது குறைகளைத் தாண்டிய, குறைகளுக்கு வெளியே உள்ள பல விஷயங்களை எட்டிப் பிடிக்க

முடியும். அதற்கு மிக முக்கியமான தேவை ஒன்று உண்டு. **“நமக்கு என்ன குறை இருக்கிறது என்பதைப் பார்த்து முடங்குவதை விட்டு விட்டு, நம்மால் என்னென்ன செய்ய முடியும் என்பதை நோக்கிப் பயணிப்பது”.** அந்தக் கனவுகள் நம்மை வழிநடத்தும்.

நல்ல ஒரு மகிழ்ச்சிகரமான நிறைவான வாழ்க்கைக்கு ‘எல்லாம் சரியாக இருக்கவேண்டும் எனும் அவசியமில்லை”. எல்லாம் சரியாக இருந்தபின் தான் வாழ்க்கையில் இன்பம் வருமெனில் இந்த உலகில் யாருமே இன்பமாய் இருக்க முடியாது! அது நமது வாழ்க்கை இறைவனால் கொடுக்கப்பட்டது, அதில் ஒரு அர்த்தம் உண்டு, இறையில் சரணடைந்து அந்த நிறைவை நோக்கிப் பயணிப்போம் எனும் சிந்தனையில் தான் அடங்கியிருக்கிறது!

நிக்கின் வாழ்க்கையின் ஆனந்தம், இல்லாமையைக் குறித்த சிந்தனைகளில் அல்ல. நில்லாமை எனும் முயற்சியில்!

## 20

# 1 Year = 365 Opportunities

தலைவராய் இருக்க வேண்டும் எனும் விருப்பம் பலருக்கும் உண்டு. ஆனால் எல்லோரும் நல்ல தலைவர்களாய் இருப்பார்களா என்றால் இல்லை! தலைவராக ஆக வேண்டுமெனில் பல விஷயங்கள் மனதுக்குள் இருக்க வேண்டியது அவசியம். உங்களைச் சுற்றி உங்களைப் போன்ற சிந்தனையுடைய மனிதர்களை வைத்திருங்கள்.

தலைவர்களாக இருக்க விரும்புகிறவர்கள் பெரிய கனவுகளைக் காண்பார்கள். பிறரை அந்த கனவை நோக்கி நடத்துவார்கள். இப்போது இருக்கும் நிலையிலிருந்து அந்த கனவை நோக்கி செல்வதற்கு என்னென்ன தேவை என்பதை உருவாக்குவார்கள். அதை பிறருக்கும் அளிப்பார்கள். ஒரு மிகத் தெளிவான பார்வை தலைவர்களுக்கு இருக்க வேண்டியது அவசியம். அதை பிறகு ஒரு வரைபடமாக்கி அந்த இடத்தை எப்படி அடைவது என்பதை பிறருக்கும் சொல்வார்கள். தலைவர் தெளிவான பார்வையோடு முன்னே செல்லாமல் இருந்தால் பயணம் தோல்வியடையும்!

தலைவர்கள் குழுவை கட்டியமைக்கும் திறமை வேண்டும். தனியே ஒரு தலைவரால் பெரிய வெற்றிகளை அடைய முடியாது. குழுவை நம்ப வேண்டியது தலைவரின் மிக முக்கியமான பண்பு. நம்பிக்கை இல்லாத ஒரு குழுவை வைத்திருப்பதும், தனியே இருப்பதும் ஒன்று தான். ஒவ்வொரு குழு உறுப்பினருக்கும் ஒரு சிறப்புத் தகுதி இருக்கும். அதை அறிந்து கொள்வதும், அந்த திசையில் அந்த நபரை வழிநடத்துவதும் ஒரு தலைவருக்கு இருக்க வேண்டிய முக்கியமான தகுதி! நல்ல குழு இருக்கும் மனிதரே ஒரு நல்ல தலைவராய் இருக்க முடியும்!

குழுவில் இருக்கும் தனி நபர்களுக்கும் சுதந்திரம் கொடுப்பதும், பொறுப்புகளைக் கொடுப்பதும் நம்பிக்கைக்கு அடுத்தபடியாக இருக்க வேண்டிய விஷயங்கள். உண்மையான தலைவர்கள் தங்கள் தவறுகளை ஏற்றுக் கொள்வார்கள். குழுவினர் செய்யும் வேலைகளைத் தொடர்ந்து பாராட்டுவதும், அங்கீகரிப்பதும், அவர்கள் வேலையில் சிறப்பாய் பணியாற்ற உதவுவதும் மிக முக்கியம். அதற்கு தலைவர் என்பவர் மற்றவர்களுடைய சிந்தனைகளைக் கேட்பது, கவனிப்பது போன்றவை ரொம்ப முக்கியம்.

தலைவர்கள் தியாகம் செய்ய முன்வரவேண்டும். அவர்களுடைய நேரம், உழைப்பு போன்றவற்றை நிச்சயம் தியாகம் செய்ய வேண்டி இருக்கும். தங்களுடைய பாதுகாப்பான வளையத்தை விட்டு வெளியே வர தயாராய் இருப்பவர்கள் மட்டுமே நல்ல தலைவர்களாய் இருக்க முடியும்! தங்கள் தனிப்பட்ட பல விஷயங்களைத் தியாகம் செய்ய முன் வராதவர்கள் நல்ல தலைவர்களாய்ப் பரிமளிக்க முடியாது. உதாரணமாக ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு இடம் பெயரக் கூட முன் வராதவர்கள் தலைவர்கள் ஆக முயலக் கூடாது. ஒரு வருடத்துக்கு 250 முறை நான் பல

நாடுகளுக்கும் பறந்து சென்று உரையாற்றியிருக்கிறேன். ஏகப்பட்ட தனிப்பட்ட, குடும்ப நேரங்களை அதற்காகச் செலவிட்டிருக்கிறேன். காரணம் பல மக்களைச் சந்தித்து அவர்களுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டும் என்பதற்காகத் தான்.

ஒரு நல்ல தலைவர் என்ன செய்தாலும் அதை ரொம்பவே விரும்பிச் செய்வார். மிகவும் சிறப்பாகத் தயாராவது அவர்களுடைய முக்கியமான குணாதிசயம். ஒரு நாள் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ள ஆண்டுக் கணக்காய் தயாராகும் ஒரு வீரரைப் போல ஒரு தலைவர் இருக்க வேண்டும். என்னுடைய இலட்சியம், உலகெங்கும் மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள் போன்றவை அமைக்க வேண்டியது தான். அந்த இலட்சியத்துக்காகவே நான் தயாராகிறேன். அதற்காகவே நான் தியாகங்கள் செய்கிறேன். என்னுடைய இலட்சியத்திலிருந்து விலகாமல் இருக்க அடிக்கடி எனது இலட்சியம் குறித்து என்னிடமே பேசுகிறேன்.

ஒரு பயணம் நீளமானது. ஆனால் ஒவ்வொரு சுவடும் சின்னதே. சின்னச் சின்ன சுவடுகள் ஒரு மிகப்பெரிய பணத்தை இட்டுச் செல்லும். எனவே மிகப்பெரிய சுவடு வைக்காத கவலையை விடுங்கள்.

தலைவர் என்பவர் ஒவ்வொரு சின்ன விஷயத்தையும் கவனிப்பார். நான் என்னுடைய ஒவ்வொரு உரையையும் மிகச் சிறப்பாகத் தயாரிகிறேன். காரணம் என்னுடைய உரை மக்களைத் தொடவேண்டும் என்பதே! என்னுடைய உரையை நான் முதலில் ரொம்பவே ரசிக்க வேண்டும், நேசிக்க வேண்டும், அது முதலில் என்னைத் தொடவேண்டும். ஒரு மிகப்பெரிய ஆர்வம் இல்லாத, விருப்பம் இல்லாத செயலை ஒரு தலைவர் செய்யக் கூடாது! அப்படிச் செய்தாலும் அது வெற்றியடையாது!

வெற்றி முற்றுப் புள்ளியல்ல, தோல்வி விதியல்ல. தொடர்ந்து பயணிப்பது தலைவருக்கான மிக முக்கியமான பண்பு. தலைவர் என்பவர் வீழ்ச்சியில் அங்கே கிடப்பதில்லை. தலைவர் தொடர்ந்து தங்கள் குழுவை வழிநடத்திச் செல்ல வேண்டும். தோல்விகளைச் சந்தித்து, தோல்விகளைத் தாண்டி வெற்றிகளை நோக்கிப் பயணிப்பவரே உண்மையான தலைவர்.

தடைகளைத் தாண்டாத தலைவரே கிடையாது! பயணம் ஒரு நல்ல நதியில் படகில் செல்வது போல அல்ல. அது ஒரு காட்டு வழிப் பயணம் போல. அதை விருப்பப் பட்டுச் செய்ய வேண்டும். விழுந்தாலும் தொடர்ந்து செயல்படுபரே தலைவர். இன்றைய பல வெற்றிகரமான நிறுவனங்கள் ஆரம்ப காலத்தில் பணமில்லாமல் முடங்கி தயங்கி கலங்கியவையே. பல வெற்றியாளர்கள் தோல்விகளை அடுக்கடுக்காய் சந்தித்தவர்களே. தோல்விகளை எப்படி ஏற்றுக் கொள்ளவேண்டும், எப்படி அதைத் தாண்டிப் பயணிக்க வேண்டும் என்பது தலைவருக்குத் தெரிய வேண்டும்.


ஒரு பாதை தவறு என தெரிந்தால் அதை சட்டென மாற்றிக் கொள்ளும் திறமை தலைவருக்கு இருக்க வேண்டும். அதற்கு அவரிடம் திட்டம் ஏற்கனவே இருக்க வேண்டும். ஏற்கனவே திட்டம் தயாராக்காமல் இருந்தால் நடுக்கடலில் தனியே தவிக்க வேண்டியிருக்கலாம். சின்னச் சின்ன விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டியது தலைவரின் பண்பு! தன்மீதான நம்பிக்கையும், தான் நினைத்தால் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் எனும் உறுதியும் அவரிடம் இருக்க வேண்டும்.

மாற்றங்களை ஏற்றுக் கொள்ள தயங்காதவர்கள் தான் தலைவர்கள். அதிக ரிஸ்க் எடுக்கத் தயங்காதவர்கள் தான் தலைவர்கள். அதற்காக அவர்கள் விமானத்திலிருந்து பாராசூட் இல்லாமல் குதிப்பவர்கள் அல்ல.

தயாராகவும், திட்டத்தோடும் செல்பவர்கள். அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு ரிஸ்க் எடுக்கத் தயங்காதவர்கள். எங்கே ரிஸ்க் எடுக்க வேண்டும், எப்போது ரிஸ்க் எடுக்க வேண்டும் என்று தெரிய வேண்டியது ஒரு தலைவரின் முக்கியமான பண்பு.

இவையெல்லாம் ஒரு தலைவராய் இருப்பதற்குரிய சில குணாதிசயங்கள். இதைத் தாண்டிய பல குணாதிசயங்களுக்கு இருக்க வேண்டும். ஆனால் அடிப்படையில் இந்த விஷயங்கள் இருப்பது ஒரு தலைவரை வெற்றியாளராய் மாற்றும்!

# 21




நிக்கின் ஒரு அற்புதமான் உரை இதோ!

வாழ்க்கை ஒரு பயணம். அது உயர்வு தாழ்வு, வெற்றி தோல்வி என எல்லாவற்றையும் உள்ளடக்கியது. ஆனால் அந்த வாழ்க்கையை எப்படி முடிக்க வேண்டும் என்பதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். உங்களால் தான் முடிவு செய்ய முடியும். நீங்கள் வீழ்ந்து விடும் தருணங்களில், “எல்லாம் போதும்” என முடங்கி விட நினைப்பதுண்டு. இதற்கு மேல் முடியாது என எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடிப் போக நாம் நினைப்பதுண்டு.

இங்கே கேள்வி ஒன்றே ஒன்று தான்.

“இனிமேல் முயற்சி செய்யப் போவதில்லையா? முயற்சிக்கு இத்தோடு முற்றுப் புள்ளி வைத்து விடப் போகிறாயா?”

ஏதோ குறைபாடு இருக்கிறது என நீங்கள் நினைத்து முயற்சியை முடக்கி விடுகிறீர்கள். உங்கள் குறைபாடு உடலில் இல்லை. கைகள் இல்லாததோ, கால்கள் இல்லாததோ நிச்சயம் ஒரு குறைபாடு அல்ல. குறைபாடு என்பது மனதில் இருக்கிறது. குறைபாடு என்பது நாம் என்ன முடிவை இன்றைக்கு எடுக்கப் போகிறோம் என்பதில் இருக்கிறது!

நீங்கள் சரியான முடிவை எடுக்கப் போகிறீர்களா? என்பதே கேள்வி!

“இனிமேல் முயற்சி செய்யப் போவதில்லை, விட்டு விடுகிறேன்” என்று மனதில் நினைப்பதை விட மிகப்பெரிய குறைபாடு இல்லை! ஏனென்றால் நம்பிக்கை அந்த முடிவுடன் இறந்து போய்விடுகிறது. அதற்கு மேல் ஒரு எதிர்நோக்கு இல்லை, இலக்கு இல்லை, நம்பிக்கை இல்லை!

நான் என்னுடைய வலிமையைக் கண்டறிந்து விட்டேன். நீங்கள் உங்களுடைய வலிமையைக் கண்டறியவேண்டும். வாழ்க்கையின் அழகைக் கண்டுணரவேண்டும் என்பதே எனது விருப்பம். அதற்காகவே நான் மக்களுடன் உரையாடுகிறேன்.

**தோல்விகளைக் குறித்துப் பயப்படாதீர்கள். ஒவ்வொரு தடவை நீங்கள் விழும் போதும், ஒவ்வொருதடவை நீங்கள் தோல்வியடையும் போதும் உங்களுடைய அனுபவப் பக்கத்தின் இன்னொரு அத்தியாயம் சேர்கிறது. உங்களுடைய அறிவு விருத்தியடைகிறது. உங்களுக்கு ஏதோ ஒரு புதிய விஷயம் தெரிய வருகிறது!**

மிக மிக முக்கியமாக எப்படிப் போகக் கூடாது என்பதைக் கற்றுக் கொள்ள அது உதவுகிறது. எந்த வழியில் போனால் தவறுவோம் என்பது தெரிகிறது. **தாமஸ் ஆல்வா எடிசன் ஆயிரக்கணக்கான முறை தோல்வியடைந்த பிறகு தான் மின் விளக்கைக் கண்டு பிடித்தார். அவர் அவற்றைத் தோல்விகளாகக் காணவில்லை. 'ஆயிரம் முறை எப்படியெல்லாம் மின் விளக்கை உருவாக்க முடியாது' என்பதைக் கற்றுக் கொண்டேன் என்பாராம்!**

நீங்கள் போதும் என்று சொல்லும் வரை வெற்றிக்கான வழி நிச்சயம் உண்டு. எந்த இலட்சியமும் பெரிதல்ல. எந்த உயரமும் எட்டிப் பிடிக்க முடியாதது அல்ல. எந்த உயரத்தையும் நீங்கள் எட்டிப் பிடிக்க முடியும். ஏனென்றால், உடலின் கைகளுக்குத் தான் இரண்டடி நீளம். மனசின் கைகளுக்கோ கணக்கிட முடியாத நீளம்! கவலையை விட்டு கனவுகளை எட்டுங்கள்.

வாழ்க்கையில் சில தருணங்கள் நம்மைக் குழப்பும். ஐயோ, எதுவுமே நல்லதாய் இல்லையே என மனசு பதறும். உங்கள் கண்களுக்கு முன்பாக எதுவும் தெரியவில்லை என்பதற்காக, உங்களுக்கு முன் எதுவுமே இல்லை என்று முடிவு கட்டி விட முடியாது. உங்களுடைய எதிர்காலத்தைக் கண்டுபிடிப்பது வாழ்க்கையை நீங்கள் சுவாரஸ்யமாகவும், நம்பிக்கையாகவும் எதிர்கொள்வதில் தான் இருக்கிறது!

நீங்கள் ரெயில்வே நிலையத்துக்குப் போகிறீர்கள். அங்கே இரயில் வண்டி இல்லை. எட்டிப் பார்க்கிறீர்கள். உங்களுக்கு முன்னால் வெறும் தண்டவாளம் தான் நீண்டு கிடக்கிறது. உடனே, இரயில் வராது என நீங்கள் மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு கிளம்புவதில்லை. காத்திருக்கிறீர்கள்.

ஏனெனில் இரயில் வரும் என்பது உங்களுக்குத் தெரியும். அந்த நம்பிக்கை உங்களை நிற்க வைக்கிறது. தாமதமானாலும் இரயில் வந்தே தீரும் எனும் எண்ணம் உங்களுக்குள் உறுதியாக இருக்கிறது! இந்த நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் ஏன் வாழ்க்கையில் இருக்க மறுக்கிறது?

ஒவ்வொருவரும் எனது வாழ்க்கையில் நான் எதையோ சாதிப்பதற்காகப் பிறந்திருக்கின்றேன் என்பதை உணர வேண்டும். பின் அது என்ன விஷயம் என்பதைக் குறித்துத் தேடல் வேண்டும். அதைக் கண்டடைய வேண்டும்.

மகிழ்ச்சியாய் வாழவேண்டும் என்பது எல்லோருடைய மனதிலும் இருக்கக் கூடிய ஒரு சிந்தனை. நமது வாழ்க்கையின் காரணம் புரியாதவர்களால் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது. ஆனால் பெரும்பாலும் நமது மகிழ்ச்சிக்கான தேடல்கள் தற்காலிகமானவை. எல்லாம் நம்மைச் சார்ந்த சிந்தனைகளே. “எனக்கு வீடு கிடைத்தால்”, “எனக்கு அந்தப் பெண் கிடைத்தால்”, “எனக்கு நல்ல பிரமோஷன் கிடைத்தால்”, “எனக்கு ஒரு நல்ல கணவன் கிடைத்தால்” என தனக்கு ஏதேனும் கிடைப்பதையே மகிழ்ச்சியாக நினைக்கிறார்கள்.

தற்காலிகப் பொருட்களினால் கிடைக்கும் மகிழ்ச்சி தற்காலிகமானது என்பதை நான் சொல்லாமலேயே நீங்கள் புரிந்து கொள்ள முடியும். தன்னைச் சுற்றியே உலகம் சுழல்கிறது. அது எனக்கும் இருந்தது, “எனக்குக் கைகள் இருந்திருந்தால்”, “எனக்குக் கால்கள் இருந்தால்” என்று என்னைச் சுற்றியே வாழ்க்கை இருந்தது. ஆனால் அது தவறு என்பதைக் கடவுள் காண்பித்தார். என் மகிழ்ச்சி எனது கைகளிலோ, கால்களிலோ இல்லை என்பதைக் காண்பித்தார்.

இலட்சியங்களோ, குறிக்கோளோ நம்மை இயக்கும். ஆனால் அதன் வழியே பயங்களும், தடுமாற்றங்களும் ஏற்படும். ஆனால் அவற்றில் விழுந்துவிடாமல் உறுதியாய் நடக்க வேண்டும். கையும், காலும் இல்லாத இவன் எப்படி அன்றாட வேலையைச் செய்வான் என்பது பலருடைய கேலியாகவும், கேள்வியாகவும் இருந்தது. இன்று கடவுள் என்னை வழிநடத்துகிறார்! அந்த நம்பிக்கை வேண்டும். பயத்தைக் கண்டு பயப்படாத முயற்சி வேண்டும்.

பயம் உங்களுடைய தோல்வியின் சாவி. உங்களால் செய்ய முடிகின்ற காரியங்களைக் கூட பயம் செய்ய விடாமல் தடுக்கும். நம்பிக்கை செய்ய முடியாத விஷயங்களைக் கூட செய்ய விடும். “நீ இதெல்லாம் பண்ண முடியும்ன்னு நினைக்கிறே.. ஆனா உன்னால பண்ண முடியாது” என எழும் குரல்கள் தான் பயத்தின் காரணகர்த்தாக்கள். பயம் நிறைந்த வாழ்க்கை உங்களை செயலிழக்க வைக்கும். பின்னிட்டுப் போக வைக்கும். உங்கள் இலட்சியத்தை எட்ட விடாமல் தடுக்கும்.

மக்கள் முன்னால் பேச வேண்டும் எனும் கனவு எனக்கு சின்ன வயதிலேயே எழும். “என்னால முடியாது” என மனதுக்குள் தயக்கமும் பயமும் வரும். ஆனால் அதெல்லாம் தாண்டும் வலிமையைக் கடவுள் தந்தார். அந்த பயத்தைத் தாண்டியபிறகு தான் பல்வேறு நாடுகளுக்குப் பயணிக்க முடிந்தது. தொலைக்காட்சியிலும், ரேடியோவிலும் பேச முடிந்தது!

வெற்றிக்குப் பொறுமை ரொம்ப அவசியம். சின்ன வயதில் ஒரு மரம் எப்படி வளரும் என்பதைப் பார்க்க வேண்டும் எனும் ஆர்வம். என்னுடைய அப்பா அம்மா ஒரு விதையை நட்டார்கள். அப்பா சொன்னார், இது முளைக்க ரொம்ப நேரம் ஆகும். நான் காத்திருந்தேன். இரண்டு மணி நேரம் அதே

இடத்தில் இருந்தேன். இரண்டு மணி நேரம் ரொம்ப அதிகம் என்பது என்னுடைய சிந்தனையாய் இருந்தது!.

பொறுமை ரொம்ப முக்கியம். விதை முளைவிட்டு, வளர்ந்து, கனிகொடுக்கும் வரை கவனமும் பொறுமையும் அவசியம். அதுவரை இலட்சியத்தை விட்டுத் தளர்ந்து விடாத மனம் ரொம்ப ரொம்ப முக்கியம். நீங்கள் செய்ய வேண்டியதை எல்லாம் செய்தாலும் கூட பொறுமை அவசியம். ஒரு கனிக்காகக் காத்திருப்பது போல. வெற்றியாளர்கள் பொறுமையின் அவசியம் என்ன என்பதை முழுமையாக அறிந்திருக்கிறார்கள்! நாமும் அதை அறிந்தால் நாமும் வெற்றியாளர்களாவோம்!

சர்.ஐசக் நியூட்டன் சொல்லும் ஒரு செய்தி மிகவும் அர்த்தமுள்ளது. “பெரும்பாலான மக்கள் தங்கள் முயற்சியை விட்டு விடும்போது வெற்றிக்கு மிக மிக அருகில் இருக்கிறார்கள்” என்கிறார் அவர். நமக்கும் வெற்றிக்கும் இடையே எத்தனை தூரம் என்பதை அறியாமலேயே பெரும்பாலானவர்கள் தோல்வியடைந்து விடுகிறார்கள். அவர்கள் அந்த விஷயத்தை மட்டும் உணர்ந்திருந்தால் இன்று ஏகப்பட்ட மனிதர்கள் சாதனையாளர்களாக இருந்திருப்பார்கள்.

மீன் பிடிக்க தூண்டிலைப் போட்டுக் கொண்டு காத்திருக்கும் அனுபவம் உங்களுக்குத் தெரியுமா? சில நேரம் மீன்கள் கொத்தாது. சில நேரம் கொத்திப் பார்த்து விட்டுப் போகும். சில நேரம் உண்மையிலேயே அது பாதுகாப்பான உணவு தானா என பரிசோதிக்கும். பொறுமை! பொறுமை! பொறுமை! பொறுமையாய் காத்திருந்தால் கடைசியில் தூண்டிலில் சிக்கும் மீன் கிடைக்கும். அவசரப் பட்டாலோ, வேண்டாமென எழுந்து நடையைக் கட்டினாலோ மீன் கிடைக்கப் போவதில்லை!’

**சிலருக்கு உங்களுடைய ஒரு பாராட்டு தேவைப்படலாம். ஒரு சின்ன உந்துதல் தேவைப்படலாம். ஒரு சின்ன ஆதரவு தேவைப்படலாம். எல்லோராலும் நிராகரிக்கப்பட்டிருக்கின்ற ஒருவர், அல்லது எல்லோரும் கிண்டலடித்து ஒதுக்குகின்ற ஒருவர். இப்படி ஏதோ ஒரு நபருடைய வாழ்க்கையில் ஒரு சின்ன ஆறுதலாய் இருப்பதில் இருக்கிறது உங்களுடைய வாழ்க்கையின் அர்த்தம்.**

உங்களைச் சுற்றி இருக்கும் மனிதர்களுக்கு உங்கள் மீது நம்பிக்கை இருந்தால் நீங்கள் பாக்கியவான்கள். நீங்கள் நம்பிக்கை வாதியாய் இருந்தால், நம்பிக்கை விதைப்பவராக இருந்தால் உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கும் அந்த சிந்தனையும் பழக்கமும் வந்து விடும். நீங்கள் எவ்வளவு தான் தன்னம்பிக்கை வாதியாய் இருந்தாலும், நல்லவராய் இருந்தாலும், வெற்றியாளராய் இருந்தாலும், உங்களை விமர்சிக்க நிச்சயம் நிறைய பேர் இருப்பார்கள்.

அவர்களுடைய விமர்சனங்களை எல்லாம் வாங்கி வைத்துக் கொண்டிருக்காதீர்கள். அப்படியே விட்டு விடுங்கள். உங்களுடைய வாழ்க்கை அடுத்தவர்களுடைய விமர்சனங்களால் கட்டி எழுப்பப் படத் தேவையில்லை. அதே போல இன்னொரு மனிதரை எந்தக் காரணம் கொண்டும் தவறாக விமர்சிக்காதீர்கள்.

# NICK VUJICIC வாழ்க்கை பயணம்



உலகப் புகழ்பெற்ற தன்னம்பிக்கைப் பேச்சாளர் Nick Vujicic இன் வலி நிறைந்த வாழ்க்கை வரலாறு.

உலகில் பலநூறு தன்னம்பிக்கைப் பேச்சாளர்கள் இருந்தாலும் அவர்களில் Nick Vujicic தனித்துவமானவர். பல உலகத் தலைவர்களிற்கும் தன்னம்பிக்கை சொல்லிக்கொடுப்பவர். பல்லாயிரம் மனிதர்களின் வாழ்க்கையையே மாற்றியமைத்தவர்.

இந்திய உட்பட உலகின் முக்கால்வாசிக்கும் அதிகமான நாடுகளில் உரையாற்றியுள்ளார்.

இவ்வாறு பல்வேறு புகழிற்குச் சொந்தமான Nick இன் இறந்தகால வாழ்க்கை மிக வேதனை மிகுந்ததாகவே அமைந்தது. தங்கள் வாழ்க்கையைக் குறை கூறிக்கொண்டிருப்பவர்கள் இவரின் வாழ்க்கை பற்றி

அறிந்துகொண்டால் தாங்கள் எவ்வளவு பாக்கியசாலிகள் என உணர்ந்துகொள்வார்கள்.

1982 இல் ஆஸ்ட்ரேலியாவின் மெல்பன் நகரில் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த தம்பதிக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையைப் பார்த்தவுடன் அதன் தந்தை வாந்தியெடுத்துவிட்டார். தாய் "இது என் குழந்தையே அல்ல.." எனக் கத்த ஆரம்பித்துவிட்டார்.

இதற்கெல்லாம் காரணம் அக்குழந்தை பிறக்கும்போதே இரண்டு கைகளும், இரண்டு கால்களும் அற்ற நிலையில் வெறும் தலையும், உடலும் கொண்ட உருவமாகப் பிறந்தது.

சில மணி நேரங்களில் மனதை அமைதிப்படுத்திக்கொண்ட அத் தம்பதியினர் கடவுள் தங்களுக்களித்த அக்குழந்தையை மனமாற ஏற்றுக்கொண்டனர். மற்ற குழந்தைகள் போலவே இவனையும் வளர்க்கவேண்டும் என முடிவு செய்தனர். Nicholas James Vujicic என பெயர் சூட்டி அன்புடன் வளர்க்க ஆரம்பித்தனர்.

பிற்காலத்தில் அந்தப் பெயர் சுருக்கமாக Nick Vujicic என மாறிவிட்டது.

அக்காலத்தில் Nick போன்ற குறையுள்ள குழந்தைகள் சாதாரண பாடசாலைகளில் கல்வி கற்பது தடை செய்யப்பட்டிருந்தது. குறைபாடு உள்ள குழந்தைகளுக்கென தனியான பாடசாலைகள் இயங்கிவந்தன. இருப்பினும் Nick பள்ளிப்பருவத்தை அடைந்தபோது இந்த சட்டம் மாற்றப்பட்டு அனைத்து குழந்தைகளும் ஒன்றாக கல்விகற்கமுடியும் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது.

Nick தனது குறையை உணரக்கூடாது என விரும்பிய அவரது பெற்றோர்கள் சாதாரண மாணவர்கள் கல்விகற்கும் பாடசாலையிலேயே Nick ஐயும் சேர்த்தனர். அந்த மாநிலத்திலேயே சாதாரண பள்ளியில் சேர்ந்த குறைபாடுள்ள முதல் மாணவர் Nick தான்.

ஆனால் நடந்தது மிக்க கொடுமையானது. Nick இனை பள்ளியிலுள்ள சக மாணவர்களால் ஏற்கமுடியவில்லை. அவரை ஒரு தீண்டத்தகாத பொருளாக அனைவரும் நடத்த ஆரம்பித்துவிட்டனர். அவருடன் யாரும் பேசமாட்டார்கள். எதிலும் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். தொடர்ந்து பகிடிவதை செய்வார்கள். ஏன் அடிக்கவும் செய்தார்கள். இது Nick. இன் 6 வயதிலேயே நடந்துவிட்டது. இதனால் சிறுவயதிலேயே மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளானார்.

தனது 8 வயதில் வீட்டிற்குச் சென்று தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்துடன் பாடசாலையில் அமர்ந்திருந்தார் Nick. சக மாணவி ஒருவர் சோகத்தில் அமர்ந்திருந்த அவரிடம் வந்து “Nick நீயும் அழகானவன்தான் ஆனால் உன் அழகை மற்றவர்களால் உணர முடியாது, ஆனால் அதை நான் உணர்கின்றேன்” எனக் கூறிவிட்டுச் சென்றார். அந்தக் கணம் இவனினுள் தன்னம்பிக்கை பிறந்தது. தற்கொலை எண்ணத்தைக் கைவிட்டுவிட்டு பாடல்கள், விளையாட்டுக்கள் போன்றவற்றில் கவனம் செலுத்த ஆரம்பித்தார்.

காலங்கள் கடந்தன. இருப்பினும் தன்னைச் சுற்றியுள்ளவர்களின் நச்சு வார்த்தைகளால் மனமுடைந்துபோனார் Nick. தனது 10 வயதில் தற்கொலை முயற்சி செய்தார். ஆனால் எப்படியோ பெற்றோர்கள் இவரைக் காப்பாற்றி மருத்துவமனையில் அனுமதித்தனர். உயிர் தப்பித்தாலும் 2 வாரங்கள் கோமா

நிலையில் இருந்தார். கண் திறந்தவர் தன் செயலால் தனது தாய் படும் வேதனையைக் கண்டு மனமுடைந்துபோனார். இனி வாழ்க்கையில் தற்கொலை பற்றி எண்ணப்போவதில்லை என முடிவெடுத்தார். சாதாரண ஒரு மனிதன் எவ்வாறு வாழ்வானோ அதேபோலவே தானும் வாழவேண்டும் என வைராக்கியம் கொண்டார்.

இரு கைகள், இரு கால்கள் இல்லாமல் நீச்சல் கற்றுக்கொண்டார், உதைப் பந்து விளையாடினார், கோல்ப் விளையாடினார், இசைக் கருவிகள் வாசிக்கக் கற்றுக்கொண்டார், நீர்ச்சறுக்கு விளையாட்டைக் கற்றுக்கொண்டார் ஏன் கணனியில் மிக வேகமாக type செய்யவும் கற்றுக்கொண்டார். இவை அனைத்தையும் தனது கால் இருக்கவேண்டிய இடத்தில் இருந்த சிறு பாதத் துண்டை வைத்து செய்தார்.

Nick அதிகம் கடவுள் நம்பிக்கை கொண்டவர். தனது இளமைப் பருவம்வரை தனக்கு எப்படியாவது கைகளும் கால்களும் முளைத்துவிடவேண்டும் என கடவுளிடம் வேண்டிக்கொண்டே இருந்தார். ஒரு நாள் பத்திரிக்கையில் மிகக் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவரைப் பற்றிய செய்தியை இவர் படிக்க நேரிட்டது. அப்போதே தன்னைவிட மோசமான வாழ்க்கை கொண்ட பலர் இருப்பதை அறிந்தார். இவ்வாறான மனிதர்களிற்கு உதவி செய்வதே தான் படைக்கப்பட்ட நோக்கம் என உணர்ந்தார் Nick. இதுவே Nick இனை ஒரு தன்னம்பிக்கைப் பேச்சாளராக மாற்றியது.

பல மேடைகளில் பேசினார், இரு கைகளும், கால்களும் இல்லாத ஒருவர் தன்னம்பிக்கையையும் வாழ்க்கையையும் பற்றிப் பேசுவது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. Nick இன் புகழ் கொஞ்சம்

கொஞ்சமாகப் பரவ ஆரம்பித்து இன்று உலகெங்கும் பரவி விட்டது. 2012 இல் Kanae Miyahara என்ற பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு 4 குழந்தைகள் பிறந்தனர்.

இன்று உலகெங்கும் பலரால் விரும்பப்படும் தன்னம்பிக்கைப் பேச்சாளர் என்றால் அது Nick தான். ஆனால் தனது இன்றைய வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தது 8 வயதில் சக மாணவி கூறிய "நீயும் அழகானவன்தான் Nick" என்ற வார்த்தைகள்தான் என இவர் அடிக்கடி குறிப்பிடுவார்.



Boris Vujicic
Nick Vujicic's father

Dushka Vujicic
Nick Vujicic's mother



Aaron Vujicic
Nick Vujicic's brother




Michelle Vujicic
Nick Vujicic's sister



Kanae Miyahara
Nick Vujicic's wife

2012 இல் Kanae Miyahara என்ற பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுற்கு 4 குழந்தைகள் பிறந்தனர்.



Kiyoshi James Vujicic
Nick Vujicic's son
Born: February 13, 2013



Dejan Levi Vujicic
Nick Vujicic's son
Born: August 7, 2015



# வாழ்வின் வெற்றிக்கு நிக் வாயிச்சஸ் கூறும் டாப் 8 அறிவுரைகளை இங்கு பார்க்கலாம்...

* உங்கள் வாழ்வில் எந்த அதிசயமும் நடக்கவில்லையெனில், இன்னொருவரது வாழ்வின் அதிசயமாக நீங்கள் மாறுங்கள்.

* “நீங்கள் எவ்விதத்திலும் சிறந்தவரல்ல, உங்களால் எதுவும் முடியாது” இவை இரண்டுமே உங்கள் வாழ்வில் நீங்கள் கேட்கும் மிகப்பெரும் பொய்கள்.

* இறந்தகால வலிகளில் உங்கள் வாழ்க்கையைச் சிக்கவைக்காதீர்கள். அது உங்கள் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் இல்லாமல் செய்துவிடும்.

* முயற்சிசெய்யுங்கள். முயற்சி வாழ்வின் ஒரு பகுதியல்ல. முயற்சியே வாழ்க்கை. பயத்திற்கும் கனவிற்கு இடையிலேயே உங்கள் வாழ்க்கை இருக்கின்றது.

* பயமே ஒருவனின் மிகப்பெரிய இயலாமை. அது பக்கவாதத்தைவிட மோசமாக அவனை முடக்கிவிடும்.

* மாற்றங்கள் மிக முக்கியமானவை. ஏனெனில் வாழ்க்கை எப்போதும் நாம் விரும்பும்படி அமையாது. சிலவேளை நம்மை மாற்றிக்கொள்ளத்தான் வேண்டும்.

* உங்கள் குறைகளைப் பயன்படுத்தி வாழாதீர்கள். மாறாக திறமைகளைப் பயன்படுத்தி வாழுங்கள்.

* எனது நம்பிக்கையை இழக்காதவரை நான் ஊனமுற்றவனாக மாட்டேன்.